# தமிழில் இலக்கியத் திறனாய்வும்

## ஈழத்தில் அதன் வளர்ச்சிப் போக்கும்

முருகையா சதீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் இலக்கியத் திறனாய்வும் ஈழத்தில் அதன் வளர்ச்சிப் போக்கும்

முருகையா சதீஸ் B.A (Hons)
உதவி விரிவுரையாளர்,

தமிழ்த்துறை,

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

வெளியீடு

யேர்மனி - தமிழ் எழுத்தாளர் சங்கம்
2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : தமிழில் இலக்கியத் திறனாய்வும் ஈழத்தில் அதன் வளர்ச்சிப் போக்கும்

ஆசிரியர் : முருகையா சதீஸ்

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

பதிப்பு : முதற்பதிப்பு – புரட்டாதி, 2022

வெளியீடு : யேர்மனி – தமிழ் எழுத்தாளர் சங்கம்

அச்சுப்பதிப்பு : ஹறிஸ் பிறிண்டேர்ஸ்,

சேர்.பொன்.இராமநாதன் வீதி, திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.

Title : Thamizhil Ilakkiyath Thiranaayvum Eezhaththil Athan Valarchchip Pokkum

Author : Murukaiya Sathees

Copyright : Author

Edition : First Edition - September, 2022

Published by : Germany - Tamil Writers Association

Printed by : Haris Printers,

Sir.Pon.Ramanthan Road, Thirunelvely,

Jaffna.

ISBN : 978-624-99232-2-5

Price : 600.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்

பேராசான்

கலாநிதி, பண்டிதர் செ. திருநாவுக்கரசு

அவர்கட்கு...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

யேர்மனி – தமிழ் எழுத்தாளர் சங்கத்தின்மூலம் வெளியீடு காண்கின்ற, முருகையா சதீஸ் அவர்களின் "தமிழில் இலக்கியத் திறனாய்வும் ஈழத்தில் அதன் வளர்ச்சிப் போக்கும்" எனும் நூலுக்கு, அணிந்துரை எழுதுவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றேன். திறனாய்வுப் பகுதியென்பது, ஆழமானதும் அகலமானதுமான பார்வையைக் கொண்ட ஒரு துறையாகும். இன்று திறனாய்வுத்துறை சார்ந்து ஆய்வு செய்பவர்களும், அதனைக் கற்பிப்பவர்களும் மிகச் சிலரே. பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கா. சிவத்தம்பி, மற்றும் க. பஞ்சாங்கம், சபா. ஜெயராஜா, தி.சு நடராஜன் போன்றோர்கள் திறனாய்வுக் கோட்பாட்டுச் சிந்தனைகளை முன்வைத்துள்ளமையைப் பார்க்கிறோம். இத்தகைய கோட்பாட்டு ரீதியான திறனாய்வு, காலனித்துவ ஆட்சிக்குப் பிறகுதான் வளர்ச்சி கண்டது. ஆரம்ப காலகட்டங்களில் இலக்கண – இலக்கிய உரைகளினூடாகவே திறனாய்வுச் சிந்தனைகள் முகிழ்ப்புப் பெற்றமையையும் காண்கிறோம்.

இந்நூலிலே முக்கியமான இரு சிறப்பியல்புகள் காணப்படுவதை அவதானிக்கலாம். 'தமிழகத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் வளர்ச்சிப்போக்கு', மற்றும், 'ஈழத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் வளர்ச்சிப்போக்கு' என்பவையே அவையாகும். தமிழகத்திலும் – ஈழத்திலும் நடந்த தமிழ் இலக்கியத் திறனாய்வு முயற்சிகளை, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஒருமித்துப் பார்க்கும் பார்வையாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலிலுள்ள 'தமிழில் இலக்கியத் திறனாய்வு' என்ற பகுதியினூடாகத் திறனாய்வு பற்றிய எண்ணக்கருவினைத் தெளிவு படுத்துவதுடன் திறனாய்வுக் கொள்கைகள் மற்றும் அதன் அணுகுமுறைகள் பற்றியும் பேசுகிறார். அடுத்ததாக அமைந்துள்ள 'தமிழகத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் வளர்ச்சிப்போக்கு' எனும் பகுதியினூடாக, தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககாலத் திறனாய்வு முயற்சிகள் பற்றியும், வரலாற்றுமுறைமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசனைமுறையுடன் நிகழ்ந்த திறனாய்வு முயற்சிகள் பற்றியும், பல்கலைக்கழக மட்டத்தில் திறனாய்வு எவ்வாறு பாடநெறியாக வளர்த்தெடுக்கப்பட்டது என்ற முறைமை பற்றியும், நவீன தமிழ்த் திறனாய்வாளர்கள் பற்றியும், சமகாலத் திறனாய்வு பற்றிய நோக்கும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இறுதியாக அமைந்துள்ள 'ஈழத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் வளர்ச்சிப் போக்கு' எனும் பகுதியில் ஈழத்தில் நிகழ்ந்த தொடக்ககாலத் திறனாய்வு மரபும், பத்திரிகை – சஞ்சிகைகளின் பணிகள், ஈழத்துப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் திறனாய்வுப் பணிகள், பல்கலைக்கழகம் சாராத விமர்சகர்களின் பணிகள், அண்மைக்காலத் திறனாய்வுப் போக்கு முதலிய பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

இன்றைய காலங்களில் ஒரு சிலரைத் தவிர, திறனாய்வுத்துறை சார்ந்து எழுதுவதற்கு யாரும் முன்வருவதில்லை. இச்சூழலில், வளர்ந்து வரும் ஆய்வாளர் முருகையா சதீஸ் அவர்கள், தனக்கு எட்டிய தரவுகளைக்கொண்டு, அன்று தொடக்கம் – இன்றுவரைக்குமான 'தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றை' இந்நூலின்மூலம் கட்டமைக்க முயன்றுள்ளார். இவரது இம்முயற்சிக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். முருகையா சதீஸ் அவர்கள், காலப்போக்கில் இந்நூலை மறுபதிப்புச் செய்யுந் தருணத்தில், தவறவிட்ட மற்றும் புதிய தரவுகளையும் உள்வாங்கிக்கொண்டு, மேலும் ஆழமாகவும் – அகலமாகவும் தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றைக் கட்டமைக்க முயலவேண்டும் என்ற கருத்தினையும் முன்வைக்கின்றேன். நூலாசிரியர் கண்டு, கேட்டு, அனுபவித்துப் படித்தவற்றைத் தன்னுடைய மொழிநடையில் சொல்லுவது சிறப்புக்குரியது. ஓர் எடுத்துக்காட்டு:

"சமகாலத்தில் சிற்றிதழ்கள்சார் திறனாய்வுச் செயற்பாடுகள் குறைந்து வருவதைக் காணமுடிகின்றது. ஆனாலும் ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் பற்றிய திறனாய்வு முயற்சிகளே, இப்போது அதிகம் வெளிவந்து கொண்டிருப்பதையும் காணமுடிகின்றது. அதுமட்டுமன்றித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்வு முயற்சிகள் பல்வேறுபட்ட நோக்கு நிலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதைத் தற்காலத்தில் அவதானிக்க முடிகின்றது. மார்க்சியச் சிந்தனைகள், உளப்பகுப்புச் சிந்தனைகள் முதலியவற்றினைச் சார்ந்ததாகத் திறனாய்வுச் செயற்பாடுகள் நடைபெறத் தொடங்கியுள்ளன" (பக்.47 – 48).

அவரது மொழிநடை, எல்லோருக்கும் விளங்கக்கூடிய விதத்தில் எளிமையாகவும் நல்ல தமிழ்நடை உடையதாகவும் அமைந்துள்ளது. ஆசிரியருக்கு எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் கூறி இந்த அணிந்துரையை நிறைவு செய்கிறேன்.

**பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்,**
**தமிழ்த்துறை,**
**கலைப்பீடம்,**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.**
**10.09.2022.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

தமிழில் திறனாய்வு குறித்த பிரக்ஞை பூர்வமான சிந்தனையானது, நவீன இலக்கியப் பயில்வுடனேயே ஏற்படுகின்றது. குறிப்பாகச் சொல்லப்போனால், மேற்குலகத் தொடர்பினால் தமிழில் வந்து பயிலும் ஒரு புலமைத்துறையாகவே இலக்கியத் திறனாய்வைக் கொள்ளலாம். ஆனாலும் இதற்கு முன்னரே, தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் திறனாய்வுச் சிந்தனைகள் இல்லாமல் இல்லை. ஏனெனில் பண்டைத்தமிழ் இலக்கண, இலக்கிய நூல்கள் மற்றும் உரையாசிரியர்களின் உரைகள், குறிப்புகள் என்பன ஏதோவொரு வகையில் திறனாய்வுச் சிந்தனைகளை வெளிப்படுத்தியிருந்தன. தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றின் பிரதான பகுதிகளாக: தமிழகத்துத் தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறும், ஈழத்துத் தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறும் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று இல்லாது தமிழில் இலக்கியத் திறனாய்வு பற்றிய வரலாறு, முழுமை பெறாது என்றே சொல்ல முடியும்.

எனக்குக் கிடைத்த தரவுகளை அடிப்படையாகக்கொண்டு, ஈழம் மற்றும் தமிழகத்தில் நிகழ்ந்த தமிழிலக்கியத் திறனாய்வு வளர்ச்சிப் போக்கினை வரலாற்று வளர்ச்சியினடியாகச் சூழமைவுப்படுத்தி, தமிழகம் மற்றும் ஈழத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் முக்கிய போக்குகளையும், அவற்றின் பண்புகளையும், முக்கிய விமர்சன ஆளுமைகளையும் இனங்கண்டு, தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றில் அவர்களின் வகிபங்கினையும் ஆராய முற்பட்டுள்ளேன்.

எனக்குக் கிட்டிய தரவுகளை அடிப்படையாகக்கொண்டு, தளராத துணிவோடு இவ்வாய்வினை நிறைவாகச் செய்துமுடிப்பதற்குச் சிறந்தமுறையில் ஆலோசனைகூறி, என்னை நெறிப்படுத்திய பேராசான் கலாநிதி, பண்டிதர் செ. திருநாவுக்கரசு அவர்களுக்கும், இந்நூலிற்கு அணிந்துரை வழங்கியதுடன், நூலுருவாக்கப் பணியின்போது அக்கறையுடன் ஆலோசனைகள் கூறிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்துறைப் பேராசிரியர், கலாநிதி. செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும், இவ்வாய்வு நூற்படைப்பினைச் சிறப்புற வெளியீடு செய்யும் யேர்மனி – தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

**முருகையா சதீஸ்,**
**உதவி விரிவுரையாளர்,**
**தமிழ்த்துறை,**
**கலைப்பீடம்,**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.**
15. 09. 2022.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| **1. தமிழில் இலக்கியத் திறனாய்வு** | **1 – 15** |
| 1.1. அறிமுகம் | |
| 1.2. திறனாய்வு பற்றிய எண்ணக்கரு | |
| 1.3. திறனாய்வுக் கொள்கைகளும் அணுகுமுறைகளும் | |
| 1.4. முடிவுரை | |
| **2. தமிழகத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் வளர்ச்சிப்போக்கு** | **16 – 48** |
| 2.1. அறிமுகம் | |
| 2.2. தொடக்ககாலத் தமிழிலக்கியத் திறனாய்வு முயற்சிகள் | |
| 2.3. அறிவியல் – வரலாற்று முறைமை | |
| 2.4. இரசனைமுறைத் திறனாய்வின் முன்னோடிகள் | |
| 2.5. மணிக்கொடி காலத்திலிருந்து | |
| 2.6. பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் திறனாய்வு | |
| 2.7. க.நா.சு.வின் பங்களிப்பு | |
| 2.8. மார்க்சியத் திறனாய்வாளர்கள் | |
| 2.9. நவீன திறனாய்வாளர்கள் | |
| 2.10. சமகாலத் திறனாய்வு பற்றிய நோக்கு | |
| 2.11. முடிவுரை | |
| **3. ஈழத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் வளர்ச்சிப் போக்கு** | **49 – 120** |
| 3.1. அறிமுகம் | |
| 3.2. உரையாசிரியர் மரபும் இரசனைமுறைத் திறனாய்வும் | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.3. வரலாற்றுமுறைத் திறனாய்வைப் பேணியவர்கள்

3.4. "ஈழகேசரி"ப் பத்திரிகை

3.5. "மறுமலர்ச்சி"ச் சஞ்சிகை

3.5.1. அ. ந. கந்தசாமி

3.6. ஈழத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் அடுத்தகட்ட நகர்வு

3.7. பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் பணி

3.7.1. பேராசிரியர் க. கைலாசபதி

3.7.2. பேராசிரியர் கா. சிவத்தம்பி

3.7.3. பேராசிரியர் எம்.ஏ. நு.்.மான்

3.7.4. பேராசிரியர் அ. சண்முகதாஸ்

3.7.5. பேராசிரியர். சி. தில்லைநாதன்

3.7.6. பேராசிரியர் சி. சிவசேகரம்

3.8. முக்கியமான விமர்சகர்களின் பங்களிப்பு

3.8.1. கவிஞர் இ. முருகையன்

3.8.2. தருமு சிவராமு (பிரமிள்)

3.8.3. ஏ.ஜே. கனகரட்னா

3.8.4. சுபைர் இளங்கீரன்

3.8.5. எஸ்.பொன்னுத்துரை

3.8.6. மு. தளையசிங்கம்

3.8.7. கே.எஸ். சிவகுமாரன்

3.9. ஏனைய திறனாய்வாளர்கள்

3.10. அண்மைக்காலப் போக்குகள்

3.10.1. பேராசிரியர் ம. இரகுநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.10.2. விரிவுரையாளர் க. அருந்தாகரன்

3.10.3. ஏனைய பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும்

3.11. முடிவுரை

**துணைநூல் பட்டியல்** **121– 122**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. தமிழில் இலக்கியத் திறனாய்வு

## 1.1. அறிமுகம்

1920களில் தமிழில் நவீன இலக்கியத் திறனாய்வுக்கான முயற்சிகள் தொடங்கப்பட்டன. இருப்பினும் இந்திய – இலங்கைச் சுதந்திரத்தின் பின்னருள்ள காலப்பகுதியில் இம்முயற்சியானது படிப்படியாகத் தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் வளர்ச்சியடையத் தொடங்கியது. நவீன இலக்கியத்தின் வருகையோடு நவீன திறனாய்வு முறையும் வளரலாயிற்று. மேலைத்தேயக் கல்வியின் ஆற்றலும், மேலைத்தேயக் கலையிலக்கியங்களின் பரீட்சயமும் தமிழில் திறனாய்வு ஒரு துறையாக வளருவதற்கு உந்துசக்தியை அளித்தது. அதன் வளர்ச்சிப் போக்குகள், பல படிநிலைகளைத் தாண்டி இன்று, பன்முகத்தளங்களை அளாவிய நிலையில், காலமாற்றத்திற்கேற்ப நவீன திறனாய்வுக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் உள்வாங்கிச் செயற்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. மேலைத்தேய அறிவின் தாக்கத்தினால்தான் தமிழில் நவீன திறனாய்வுச் சிந்தனைகள் பிறந்தனவாயினும், இதற்கு முன்னரே தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் திறனாய்வுச் சிந்தனைகள் இல்லாமல் இல்லை. ஏனெனில் பண்டைத்தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களும், உரையாசிரியர்களின் உரைகளும், குறிப்புகளும் ஏதோவொரு வகையில் திறனாய்வுச் சிந்தனைகளை வெளிப்படுத்தியிருந்தன.

தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் மற்றும் நன்னூலின் பல சூத்திரங்கள் முதலானவை, திறனாய்வின் அடிப்படைகளாக இங்கு கருதப்படக்கூடியவை. பின்னர் தோன்றிய திருவள்ளுவமாலை என்னும் நூல், திருக்குறள் பற்றியும், திருவள்ளுவர் பற்றியும் பல்வேறு புலவர்கள் பாடிய தொகுதியாக அமைந்துள்ளது. இந்நூல் எழுந்த காலம் கருத்து வேற்றுமைகளுக்கு உட்பட்டதாயினும், புலவர்களின் அபிப்பிராயங்கள் பல்வேறு விமர்சனப் பாங்குகளை வெளிப்படுத்தியிருந்தன. ஒரு இலக்கியப் படைப்பு அல்லது ஆக்கம் பற்றிய கருத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்தன்மையாகவும், மறைத்தன்மையாகவும் அமைந்துவிடும்போது அங்கு திறனாய்வுப் பண்பைக் காணமுடிகின்றது. பண்டைத் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களின் உரையாசிரியர்கள் மூலநூற் சூத்திரங்களையும், கவிதைகளையும் உள்வாங்கிக்கொண்டு அரும்பதவுரைகள், பொழிப்புரைகள், விளக்கவுரைகள் எழுதிய நிலையில் பல விடயங்களில் ஒற்றுமைப்பட்டும், வேற்றுமைப்பட்டும் தமது உரைகளை எழுதியுள்ளனர். இங்கு அவரவர் கருத்து நிலையில் திறனாய்வு நடந்து முடிந்துள்ளது. திருக்குறளுக்கான பதின்மர் உரைகளில் சிறந்ததாகக் கருதப்படும் பரிமேலழகர் உரையிலிருந்து சில குறள்களுக்கான கருத்துக்களில் மணக்குடவர், கல்லாடர் போன்றோர் மாறுபட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதேபோன்று சங்கப்பாடல்கள், பக்திப்பாடல்கள், அறநெறிப்பாடல்கள், காப்பியப் பாடல்கள் போன்றவற்றுக்கான உரைகளிலும் ஒற்றுமை, வேற்றுமைகள் நிறையவே காணப்படுகின்றன.

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் போன்றோரின் உரைகளில் ஆங்காங்கே கருத்துப் பேதங்கள் உள்ளன. அதேபோன்று நன்னூலுக்கான மயிலைநாதர் உரையிலிருந்தும் வேறுபட்ட பிற்கால நன்னூல் உரையாசிரியர்கள் பலரை அறிய முடிகின்றது. இதேபோன்று சங்க இலக்கிய நூல்களின் உரையாசிரியர்களும், அறநூல்களின் உரையாசிரியர்களும் தத்தம் உரைக்கருத்துக்களில் ஒன்றுபட்டும், வேறுபட்டும், அவரவர்க்குரிய எடுத்துக்காட்டுக்களைத் தந்தும் உரையெழுதியுள்ளனர். கம்பராமாயணக் காப்பியத்திற்குக் காலந்தோறும் கருத்துப் பேதமுள்ள பலவுரைகளைக் காணமுடிகின்றது. இதேபோன்று சைவ – வைணவபக்தி இலக்கியங்களுக்கான உரைகளையும் நோக்க முடிகின்றது. ஆழ்வார் பாடல்களுக்கு ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை எழுதிய உரைகளினின்றும் பலவிடங்களில் வேறுபட்டு உரையெழுதியோரையும் காணமுடிகின்றது. பழந்தமிழ் இலக்கிய, இலக்கணப் பயில்வின்மூலம் இரசனை முறையையும், விளக்கமுறையையும் திறனாய்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாண்டுள்ளமை புலனாகின்றது. இவற்றுடன் கூடவே பிற்காலத்தில் தமிழியல்சார் ஆய்வறிவுமுறைத் திறனாய்வும் பேணப்பட்டதை அவதானிக்க முடிகின்றது.

“இலக்கிய விமர்சனமென்று கூறப்படும் ‘இலக்கிய நலனாய்தல்’ சிறந்ததொரு கலையாக ஐரோப்பிய நாடுகளிலே பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்துள்ளது. முற்காலத்திலே தமிழ்நாட்டில் வாழ்ந்த உரையாசிரியர்கள் சிலர் கவிதையில் காணப்படும் நலன்களை ஆங்காங்கு எடுத்துக் கூறியுள்ளனரேனும் இருபதாம் நூற்றாண்டுக்கு முன் நலனாய்தல் தமிழில் ஒரு கலையாக வளர்க்கப்படவில்லை. தமிழ்நாட்டில் ஆங்கிலக் கல்வி விருத்தியடைந்ததன் பயனாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவிலும், இருபதாம் நூற்றாண்டிலும் வாழ்ந்த சில இலக்கிய ரசிகர்களே தமிழில் இக்கலையினை வளர்க்க முன்வந்துள்ளனர்” (செல்வநாயகம்.வி, 1951: ப.311). இவ்வாறு பேராசிரியர் வி. செல்வநாயகம், இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுதியிருப்பதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

## 1.2. திறனாய்வு பற்றிய எண்ணக்கரு

மதிப்புரை, திறனாய்வு, ஆராய்ச்சி முதலான சொற்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டனபோலத் தெரிந்தாலும், அவற்றுக்கிடையே கருத்துநிலையில் வேறுபாடுகள் இருக்கின்றன. பெரும்பாலும் திறனாய்வு என்பது கலையிலக்கியப் படைப்புக்களுக்கே உரியதாகும். ஏனைய இரண்டு சொற்களும் பொதுவான முறையில் அனைத்துப் படைப்புக்களுக்கும் பொருத்தமானதாகும். கி.பி 1605 இல் பிரான்சிஸ்பேக்கன் (Francis Bacon) என்பவர் Critic என்னும் சொல்லை முதன்முதல் பயன்படுத்தினார். 18ஆம் நூற்றாண்டில் ஜோன் டிரைடென் (John Dryden) என்பவர் Criticism என்ற ஆங்கிலச் சொல்லை முதன்முதலில் பயன்படுத்தினார். சென்னை அழகப்பா கல்லூரியில் பேராசிரியராக இருந்த ஆ. முத்துசிவன் என்பவர், (1944 இல்) இச்சொல்லுக்குப் பொருத்தமான சொல்லாகத் தமிழில் முதன்முதலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விமரிசனம்' என்பதைப் பயன்படுத்தினார். 'விமரிசை' என்ற வடமொழிச் சொல்லிலிருந்து இது பிறந்ததாகும். விரிவாக — விளக்கமாகச் சொல்லுதல், பாராட்டிப் பேசுதல் என்பது இதன் பொருளாகும். இதிலிருந்தே விமரிசனம் என்ற சொல், இலக்கியத்துடன் தொடர்புபடுத்திப் பேசப்படலாயிற்று. ஆ. முத்துசிவன் தனது "அசோகவனம்" நூலுக்கு எழுதிய முன்னுரையில் 'விமரிசனம்' என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியுள்ளார். இதற்குப் பிறகு 1948இல் "இலக்கிய விமரிசனம்" என்னும் நூலை தொ.மு.சி. ரகுநாதன் எழுதினார். அதற்குப்பின் க.நா. சுப்பிரமணியம் எழுதிய "விமரிசனக் கலை" (1951) என்னும் நூலும் வெளிவந்தது. பிற்காலத்தில் திறனாய்வு பற்றிய விடயங்களில் விமரிசனம் என்ற சொல் காலந்தோறும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழில் திறனாய்வு என்ற சொல்லை முதன்முதலில் உருவாக்கிப் புழக்கத்தில் விட்டவர், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் ஆவார். 1953 இல் இவர் எழுதிய "இலக்கியக்கலை" என்னும் நூலில் இச்சொல்லினைப் பயன்படுத்தியிருந்தார். இன்றுவரை தமிழில் திறனாய்வு, விமரிசனம் ஆகிய இருசொற்களும் பயன்படுத்தப்பட்டே வருகின்றன. 'திறனை ஆய்தல்' என்ற பொருளின் அடிப்படையில் திறனாய்வு என்னும் சொல் உருவானதாயினும், நலனாய்தல், நயங்கூறுதல், இரசனையை விளக்கல் முதலான சொற்றொடர்களுடன் இதுவும் தொடர்புடையதாகின்றது. பொருத்தமான சொல் கிடைக்கும்வரை இந்தச்சொல் பயன்பாட்டிற்கு உரியதாகின்றது. இலக்கிய விமரிசனம் என்ற சொல் ஆங்கிலத்தில் Literary Criticism (லிற்றறி கிறிற்றிசிசம்) என்று அழைக்கப்படும். அது இலக்கியத்தை மதிப்பீடு செய்யும் ஒரு புலமைச் செயற்பாடு ஆகும். Criticism என்ற சொல்லைக் குறிக்கத் தமிழில் 'திறனாய்வு', 'விமர்சனம்' என்ற சொற்கள் வழங்கி வந்தாலும் 'திறனாய்வு' என்ற சொல்லே பெருவழக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. லிற்றறி கிறிற்றிசிசம் என்ற இலக்கியச் செயற்பாட்டில் ஒப்பீடு, பகுப்பாய்வு, வியாக்கியானம் (விளக்கம்), மதிப்பீடு ஆகிய நான்கு பண்புகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமானவைகளாகும். திறனாய்வு என்பது, குறிப்பிட்ட ஒரு பாடப்பகுதியிற் காணப்படும் திறமையினை அல்லது மேன்மையினை அறிந்து கொள்வதற்கான முயற்சி ஆகும் (சிவத்தம்பி.கா, 2001: பக்.15 – 18) என்று கா. சிவத்தம்பி அவர்கள், தன்னுடைய "விமர்சனச் சிந்தனைகள்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளமையும் அவதானிக்கத்தக்கது.

'வாசிப்பின்போது கிடைக்கின்ற அனுபவங்களும், பொருள்களும், உணர்வுகளுந்தான் திறனாய்வுக்குத் தளங்கள்' (நடராசன். தி.சு, 2003:ப. 06) என்று தி.சு. நடராசன் அவர்கள், "திறனாய்வுக்கலை" என்ற தனது நூலில் கூறியுள்ளமையையும் இங்கு நோக்கலாம். மேலும், "கிறிற்றிசிசம் என்றால் கண்டனம் செய்வது என்றே எல்லோரும் பொருள் கொள்கிறார்கள். கலையிலக்கியங்களுக்கு அவ்வார்த்தையைப் பிரயோகிக்கும்போது, அது பிரத்தியேகமான கருத்தையே தருகிறது. கலையிலக்கிய மதிப்பீட்டைத் தமிழில் 'திறனாய்வு' என்ற சொல் சுட்டுவதுபோல, 'கிறிற்றிசிசம்' என்ற ஆங்கில வார்த்தையின் கருத்து முழுமையைத் 'திறனாய்வு' என்ற சொல் பூரணப்படுத்தவில்லை. ஏனெனில் திறனாய்வும், கண்டனமும் இணைந்ததே 'கிறிற்றிசிசம்' ஆகும். இதனாலேயே 'விமர்சனம்' என்ற சொல் இரண்டையும் உண்டாக்குவதாய் அமைந்து வழக்கத்திற்கு வந்துவிட்டது எனலாம். 'கிறிற்றிசிசம்' என்ற ஆங்கில வார்த்தையானது, கவனமாக மதிப்பீடு செய்தல் அல்லது தீர்ப்பளித்தல் என்தையே இங்கு குறிக்கின்றது" என்கிறார் திறனாய்வாளர் கே. எஸ் சிவகுமாரன் (ப.19)

"ஒரு படைப்புப் பற்றிய விரிவான ஆய்வையே திறனாய்வு எனலாம். திறனாய்வு, பக்க வரையறைகளுக்கு உட்படாதது. இலக்கியப் பயிற்சி மிக்கோருக்காக விரிவாக, அடிக்குறிப்புகளுடன், விரிவுரைகளுடன் திறனாய்வு எழுதப்படுகின்றது. புகழ்வதும், கண்டிப்பதும் திறனாய்வன்று. முழுக்க முழுக்கப் புகழ்மாலையும் அல்லது முழுக்க முழுக்கக் கண்டனமும் விமர்சனமாகாது. இலக்கியக் கொள்கைக்கேற்பவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்வுப்போக்கு அமைகிறது (ப.09). விமர்சனம் என்பது முடிந்த முடிவல்ல. கலை, இலக்கிய முயற்சிகள் பற்றிய விமர்சகன் ஒருவனின் தனிப்பட்ட கருத்தை, அவன் தனது கல்வி, கேள்வி, அறிவு, அனுபவம் ஆகியவற்றிற்கு ஏற்பத் தெரிவிக்கிறான். எதிரொலியின் வெளிப்பாடே விமர்சனமாகும்" என்று கே.எஸ். சிவகுமாரன், "கலை இலக்கியத் திறனாய்வு" என்ற தன்னுடைய நூலில் கூறும் கருத்தும் இங்கு அவதானத்திற்குரியது (சிவகுமாரன்.கே.எஸ், 1989: பக்.12 – 13).

படைப்பிலக்கியத்தின் விளைவாக, படைப்பின் தளத்தை சமூகத்துக்கு அறிமுகஞ்செய்து, ஆர்வத்தைத் தூண்டிவிட்டு, வாசகர் மத்தியில் படைப்புக்கு ஓர் முக்கியத்துவம் தேடிக்கொடுப்பது விமர்சனமாகும். இலக்கியங்களினூடே பொங்கி வழியும் பிம்பங்களை, திறன்களை ஆராய்வதே இதன் தொழிற்பாடாகும். ஒரு இலக்கியப் படைப்புப் பற்றிய அறிவார்ந்த மதிப்பீடு அல்லது நலன் பாராட்டுதலையே திறனாய்வு சுட்டுகிறது. இது திறனாய்வாளனின் சொந்த இரசனையால் உருவாகிறது. அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட அழகியல் கருத்துக்களால் உருவாகிறது. இது இலக்கியப் படைப்பின் ஆக்கம் பற்றிய மதிப்பீடு. இது இலக்கிய அனுபவத்தினை, மனதில் ஒரு விளைவாகத் தோற்றுவிக்கிறது. இவ்விலக்கிய அனுபவம், இலக்கியப் படைப்பிலுள்ள சிறப்பியல்புகளால் உண்டாகிறது எனலாம். எனவே திறனாய்வு என்பது படைப்பினை இரசனை வழியாகவும், அனுபவத்தின் வழியாகவும் மதிப்பீடு செய்தல் என்று கூறலாம். திறனாய்வு தொடர்பாக நா. பார்த்தசாரதி கூறும்போது, "திறனாய்வு என்பது மூலநூல் அல்ல. மூலநூலின் சாயலை மட்டும் கொண்ட படைப்பாகும். மூலநூலினைப் படிப்பதனால் உண்டாகும் முழுப்பயனையும் திறனாய்வைப் படிக்கும்போது அடைய முடியாது. திறனாய்வாளரின் கருத்து என்பது மூலநூலாசிரியரின் கருத்தோடு, தன் கருத்தையும் இணைத்ததாகும். திறனாய்வைப் படிக்கும்போது மூலநூலைப் படித்தாற்போன்ற போலியான திருப்தியே ஏற்படுகின்றது" என்கிறார் (பார்த்தசாரதி.நா, 1985: ப.12). மேலும் ப. கோதண்டராமன், "ஏதேனுமொரு காலப்பொருள் அல்லது சிருஷ்டியின் தகுதி, சிறப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணாம்சங்கள் ஆகியவற்றை ஆராய்ந்தறிந்து அதன் மதிப்பீட்டையும், காலச்சிருஷ்டிகளிடையே அதற்குரிய இடத்தையும் நேர்மையாக நிர்ணயிப்பதே விமர்சனம்" என்கிறார் (கோதண்டராமன்.ப, 1978: ப.82). எனவே இலக்கிய விமர்சனம் என்பது இலக்கியப் படைப்பை எவ்வளவுதூரம், எக்காரணங்களுக்காக நல்லதெனவோ, கெட்டதெனவோ கொள்ளக்கூடும் எனத் தீர்மானிக்கும் கலையென்று கூறலாம். இலக்கியப் படைப்பின் தகுதிகளையும், குற்றங்குறைகளையும், விருப்புவெறுப்பின்றிப் பகுத்தாராய்வதோ அல்லது ஒரு தனி எழுத்தாளனுக்கு இலக்கியத்திலுள்ள இடத்தினை நிர்ணயிக்க முயல்வதோதான் விமர்சனம் என்று கூறத்தோன்றுகிறது. 'இலக்கியத்தில் அல்லது நுண்கலைகளில் உள்ள அழகியற் கூறுபாடுகளின் பண்பையும், மதிப்பையும் பற்றித் தீர்ப்பளிப்பதே திறனாய்வு' என்று பிரிட்டானியாக் கலைக்களஞ்சியம் கூறுவதும் இங்கு அவதானிக்கத்தக்கதாகும்.

ஒரு இலக்கியத் திறனாய்வாளன் தன்னுடைய அறிவையும் பயிற்சியையும் கொண்டு இலக்கியத் தரத்தினை ஆய்ந்துணர்ந்து, அதைப்பற்றிய தனது முடிவை வழங்குவான். உண்மையில் விமர்சனம் என்பது கலையின் நிகழ்வியக்கத்தின் ஒரு பெரும் பகுதியாக நின்று அழகியலை இயங்கச் செய்கின்றது. திறனாய்வின்போது ஒரு படைப்பாக்கத்தில் காணப்படும் நிறைவான அம்சங்களை எடுத்துக்காட்டுதல், குறைபாடுடைய அம்சங்களை எடுத்துக்காட்டுதல், குறைபாடுடைய அம்சங்களை நிறைவானதாய் ஆக்குவதற்குரிய ஆலோசனைகளை முன்வைத்தல் ஆகிய செயற்பாடுகளைப் பொதுவான முறையில் திறனாய்வாளன் முன்னெடுக்க வேண்டும். இது ஒரு புலன்வழிச் செயற்பாடு ஆகும். திறனாய்வாளனின் இலக்கிய வரலாறு பற்றிய அறிவு, இலக்கியப் படைப்புக்கள் பற்றிய அறிகையின் கொள்ளளவு, படைப்பாளி பற்றிய அறிவு என்பன இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. நடுநிலையாக நோக்கும் தன்மை, உணர்ச்சி வசப்படாமை, சார்பு நிலையில் இயங்காமை ஆகிய குணாம்சங்களுடன் திறனாய்வாளன் செயற்படவேண்டும். திறனாய்வாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலநூலாசிரியனைப் பார்க்காது, மூலநூலை மட்டும் பார்ப்பவனாக இருக்க வேண்டும். ஆசிரியனை ஒருபோதும் விமர்சிக்கக்கூடாது. படைப்பைப் பற்றியே விமர்சிக்க வேண்டும். ஆசிரியன் சொல்லிச் சென்ற சொற்களினிடையே, சொல்லாமல் சென்ற சொற்களையும் ஊகித்து உணரும் மதிநுட்பம் இருக்க வேண்டும். பன்னூல் அறிவும் அவசியமாகும்.

வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் திறனாய்வுக்குள் அல்லது விமர்சனத்திற்குள் கொண்டுவர முடியும். இது, ஒரு கருத்தை, செயலாக்கத்தை, படைப்பை அல்லது அமைப்பை மதிப்பீடு செய்து முன்வைக்கப்படும் கருத்துக்களாக அமைகின்றது. அரசியல் கொள்கைகள், சமூகக் கட்டமைப்பு, கலையிலக்கியப் படைப்புக்கள், சமூக நிலைமைகள், சமயக்கோட்பாடுகள், தொழில்நுட்ப நுணுக்கங்கள் போன்ற பலதரப்பட்டவைகளையும் திறனாய்வு செய்ய முடிகின்றது. திறனாய்வின் பயன்களாகச் சிறந்த படைப்பைத் தேர்ந்தெடுத்தல், சிறந்த இலக்கியக் கொள்கையை உருவாக்கல், புதிய இலக்கியப் படைப்புக்களைப் படைப்பதற்குத் தூண்டுதல், இலக்கிய வரலாற்றுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல், இலக்கியத் திறனாய்வு வரலாற்றினை உருவாக்குதல், இலக்கிய – இலக்கணப் பிழைகளை நீக்குதல், சமூக வரலாற்றை அறிந்து கொள்ளல், கலைச் சிறப்பும் – அதனைக் கற்போர்க்கு ஏற்படும் மகிழ்வும் சமூக வளர்ச்சிக்கு உதவுதல், கலை கலைக்காக மட்டுமன்றிச் சமூகத்திற்காகவும் என்பதைச் செயற்படுத்தல் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

ஓர் இலக்கியப் படைப்பை உள்ளது உள்ளவாறே ஊடுருவிக்கண்டு, குறைகளையும் நிறைகளையும் ஒப்பீடு செய்து, அதன் திறத்தையும், தரத்தையும் வெளிப்படுத்துபவரே விமர்சகர். குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொள்வதே அவர் போற்ற வேண்டிய பண்பு எனலாம். நல்லனவற்றை நல்லன என்று மனந்திறந்து பேசுவதற்குப் பரந்த மனோபாவம் தேவை. அதுபோலத் தரமில்லாதவற்றைத் தரமற்றவை என்று சுட்ட அஞ்சாமையும் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பரந்த அறிவு, கூர்த்த நோக்கு, ஆழ்ந்த நுட்பம், ஒப்பீட்டுத் திறன், தரம் பிரிக்கும் ஆற்றல் முதலிய பல்வேறு கூட்டுத் திறமைகளும் உடையவரே நல்ல திறனாய்வைச் செய்யமுடியும். விமர்சகன் என்பவன், படைப்பாளனுக்கும் வாசகனுக்குமிடையே நிற்பவன். அவன் இலக்கியப் படைப்புக் குறித்துப் புது விளக்கம் தருகிறான். இலக்கியப் படைப்பினுள் ஆழ்ந்து ஆராய்கிறான். இலக்கியப் படைப்பாளி கண்டதைத், தானும் தன் மனதில் காண்கிறான். வாழ்க்கை பற்றித், தான் கொண்டுள்ள மனக்காட்சியைப் படைப்பாளியின் மனக் காட்சியுடன் பொருத்திப் பார்க்கிறான். தான் காண்பதையும், அனுபவிப்பதையுங் கொண்டு புது விளக்கம் தருகிறான். விமர்சகனின் விமர்சனம், இலக்கியப் படைப்பைப் பூர்த்தி செய்யும் அனுபந்தம் போன்றது எனலாம். அதுவும் ஒரு மீள் படைப்பு முயற்சியாகும். விமர்சகனும் ஒரு படைப்பாளியே. விமர்சனம், இலக்கியத்திற்குப் புது உத்திகளையும், புதுப்புதுப் போக்குகளையும் காட்டுகின்றது. ஆற்றல் வாய்ந்த விமர்சனம் நல்ல இலக்கியத்தின் வளர்ச்சிக்கு வித்திடுகின்றது என்றே கூறலாம். எதையும் தயங்காமல் சிந்திக்கலாம் என்ற சுந்திர உணர்வு, எதைப்பற்றியும் திறனாய்வு செய்யலாம் என்ற தெளிவு, சிந்தனையின் முடிவை எவருக்கும் அஞ்சாமல் வெளியிடலாம் என்ற துணிவு இன்றைய திறனாய்வாளர்களின் பொது இயல்புகளாக இருக்கின்றன. திறனாய்வின் நோக்கங்களாக: இலக்கியம் படைக்க வழிசெய்யும் விதிகளைக் கூறல், இலக்கியப் படைப்புக்கள் கையாண்டுள்ள நெறிமுறைகளைத் தொகுத்தளித்தல், அரிய இலக்கியப் படைப்புக்களுக்கு விளக்கம் தருதல், நயம் கூறுதல், நிறைகுறைகளை எடையிடுதல், இலக்கிய ஆர்வலரின் சுவையை நெறிப்படுத்தல், வாசிப்பனுபவத்தை அவ்வாறே வெளியிடல், நூல் தோன்றிய சமூகச்சூழலை ஆராய்தல், நூலோடு ஒன்றித்தபோது ஏற்பட்ட அனுபவத்தினைப் பிறருடன் பகிர்தல், படைப்பின் கட்டுக்கோப்பினை விளக்குதல் முதலியவற்றைக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3. திறனாய்வுக் கொள்கைகளும் அணுகுமுறைகளும்

தமிழில் திறனாய்வு என்பது ஒரு நவீன துறையாக வளர்ச்சி காணும்போது, மேலைத்தேயக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் பின்பற்றியும், தமிழகச் சூழலுக்கு ஏற்ற பண்புகளை உள்வாங்கியும் திறனாய்வுக்கொள்கைகளும், இலக்கியக் கொள்கைகளும், திறனாய்வு அணுகுமுறைகளும் காலந்தோறும் திறனாய்வாளர்களால் முன்வைக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் தமது "இலக்கியமும் திறனாய்வும்" (1972) நூலில், இக்கால ஆராய்ச்சியாளர் பின்பற்றும் முக்கியமான ஐந்து இலக்கியக் கொள்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளார். பொருள், வடிவம் என்ற பாகுபாடு இல்லாமல் இரண்டும் இசைவுபட்ட உறுப்புக்களாகக் கொண்டு கவிதை பிறப்பதனை "அவயவிக்கொள்கை" என்றும், அறம், ஒழுக்கம் முதலானவை பற்றி அக்கறை கொள்வதை "அறவியல்கொள்கை" என்றும், இறையுணர்ச்சியின் அடிப்படையில் பார்க்கப்படுவதை "உணர்ச்சிக்கொள்கை" என்றும், காண்டலும், கற்பனை அனுபவமுமே அழகு எனக்கருதும் இலக்கியக்கொள்கையை "அழகியல் கொள்கை" என்றும், இருபதாம் நூற்றாண்டிலே செல்வாக்குப் பெற்றுவந்ததும், அழகியல்வாதத்திற்கு எதிரான கொள்கையாகச் செயற்படுவதும், இலக்கியத்திற்குப் புறம்பானதாய்ப் போய்விட்ட புறவுலகத்தை மீண்டும் இலக்கியப் பொருளாக்கி, இழந்த மெய்ம்மையைத் திரும்பவும் அடைவதையே குறிக்கோளாகக் கொண்டது "சமுதாயக்கொள்கை" என்றும் (பக் : 71 — 87) கைலாசபதி அவர்கள் எழுதியுள்ளார்.

இலக்கியக் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு, திறனாய்வுக் கொள்கைகள்பற்றி ஏராளமான திறனாய்வாளர்கள் தமது நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர். க. கைலாசபதி, தி.சு. நடராசன், க. பஞ்சாங்கம், கா. சிவத்தம்பி, சபா. ஜெயராஜா, சு. பாலச்சந்திரன் போன்றோரது நூல்கள் சில உதாரணங்களாகும். ஒவ்வொருவருடைய அணுகுமுறைகளிலும் ஒற்றுமைகள் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமைகள் காணப்படுகின்றன. பொது நோக்கில் காலவளர்ச்சிக்குத் தக்கதாக அவர்களது கருத்து வெளிப்பாடுகள் அமைந்துள்ளன. திறனாய்வை ஒருதுறையாகக் கற்பவர்களுக்கும், ஒப்பீட்டு ரீதியில் ஆராய்பவர்களுக்கும் இந்நூல்கள் துணைசெய்கின்றன. மேனாட்டு இலக்கியத் திறனாய்வு வரலாற்றாசிரியர் சிலர், நான்கு அணுகுமுறைகளை எடுத்துக் கூறுவர் என்றும், அதில் மேயர் ஏபிரம்ஸ் (Meyar Abrams) என்பவர் அந்நான்கையும், விளக்கியுள்ள முறையினை எடுத்துக்காட்டி, அவற்றோடு தமது விளக்கக்கருத்துக்களையும் இணைத்துள்ளார் கைலாசபதி.

- அநுகரணக் கொள்கை (ஒன்றுபோற் செய்தல் – நகலாகச் செய்தல்)
- பயன்வழிக் கொள்கை (இலக்கியத்தைப் படிப்போருக்கு உண்டாகும் விளைவுகளை வற்புறுத்துவது)
- வெளிப்பாட்டுக் கொள்கை (இலக்கியப் படைப்பாளியின் கற்பனை, மனோதர்மம், ஆளுமை ஆகியவற்றைத் துலக்கமாக வெளிப்படுத்துவது)
- புறநிலைக்கொள்கை (எடுத்துக்கொண்ட படைப்பை அல்லது பொருளை அறிந்து தெளியவேண்டியதொன்றாகக் கொள்வது இந்த விடயக்கொள்கை)

என்று நான்கு வகையான அணுகுமுறைகளை "இலக்கியமும் திறனாய்வும்" எனும் நூலில் சுட்டிக்காட்டுகின்றார் கைலாசபதி அவர்கள் (கைலாசபதி.க, 1972: பக். 93 – 110).

கைலாசபதியின் நூலுக்குப் பின்னர் தோன்றிய பலநூல்களில் திறனாய்வுக் கொள்கைகள், திறனாய்வு வகைகள், திறனாய்வு அணுகுமுறைகள் பற்றிய தகவல்கள் நிறையவே வந்துள்ளன. முனைவர் தி.சு. நடராஜன் எழுதிய "திறனாய்வுக் கலை: கொள்கைகளும் அணுகுமுறைகளும்" (2003) எனும் நூலில், திறனாய்வு வகைகளை,

- விளக்கமுறைத் திறனாய்வு
- ஒப்பீட்டுத் திறனாய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு
- ரசனைமுறை அல்லது அழகியல் திறனாய்வு
- பாராட்டுமுறைத் திறனாய்வு
- முடிபுமுறைத் திறனாய்வு
- விதிமுறைத்திறனாய்வு
- செலுத்துநிலை அல்லது படைப்புவழித் திறனாய்வு
- பகுப்புமுறைத் திறனாய்வு

என்று ஒன்பது வகையாக எடுத்து விளக்கியுள்ளார் (நடராஜன். தி.சு., 2003:பக். 22 – 40). இவரது நூலில் திறனாய்வு அணுகுமுறைகளாக,

- அறிவியல்
- சமுதாயவியல்
- வரலாற்றியல்
- உளவியல்
- மொழியியல்
- உருவவியல்
- அமைப்பியல்
- பின்னை அமைப்பியல்
- பின்னை நவீனத்துவம்
- அறநெறி
- மார்க்சியம்
- தொல்படிமவியல்
- இலக்கிய வகைநிலையியல்
- தத்துவவியல்
- தலித்தியம்
- பெண்ணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றார். மேலும் முனைவர் க. பஞ்சாங்கம் எழுதிய "தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறு" (2004) நூலில் குறிப்பிடப்பட்டுள்ள திறனாய்வு வகைகள் வருமாறு:

- பகுப்புமுறைத் திறனாய்வு
- விதிமுறைத் திறனாய்வு
- மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு
- வரலாற்றுமுறைத் திறனாய்வு
- ஒப்பியல்முறைத் திறனாய்வு
- பாராட்டுமுறைத் திறனாய்வு
- விளக்கமுறைத் திறனாய்வு
- மனப்பதிவுமுறைத் திறனாய்வு

என்பவையே அவையாகும் (பஞ்சாங்கம்.க, ப.19). இவற்றுடன் வேறுதுறைகளையும் திறனாய்வு வகைகளுக்குள் அடக்கியிருக்கிறார் பஞ்சாங்கம். அவை,

- உளவியல் திறனாய்வு
- சமூகவியல் திறனாய்வு
- அறிவியல் திறனாய்வு
- தொன்மவியல் திறனாய்வு
- மொழியியல் திறனாய்வு
- குறியியல் திறனாய்வு என்பனவாகும்.

மேலும், அந்தக்காலத்து – இந்தக்காலத்து இலக்கிய இயக்கங்களுக்கு ஏற்பவும், அவை பின்பற்றி நிற்கும் இலக்கியக் கொள்கைகளுக்கேற்பவும் செயற்படும் திறனாய்வு வகைகளையும் சுட்டிக்காட்டியுள்ளார். அவையாவன,

- செவ்வியல் திறனாய்வு
- புதிய செவ்வியல் திறனாய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புனைவியல் திறனாய்வு
- புதுத் திறனாய்வு
- நடப்பியல் திறனாய்வு
- மார்க்சியத் திறனாய்வு
- இருப்பியல் திறனாய்வு
- நிகழ்ச்சிவாதத் திறனாய்வு
- பெண்ணிலைவாதத் திறனாய்வு என்பனவாகும்.

திறனாய்வு வகைகளைப் பஞ்சாங்கம் அவர்கள், ஒன்றன்பின் ஒன்றாக விரிவுபடுத்தி நோக்கியிருக்கிறார். இந்த விரிவுத்துறைகள், தேவைப்படின் மேலும் பல துறைகளாக விரிவுபடக்கூடும்.

பேராசிரியர் சபா. ஜெயராஜா அவர்களின் "இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகள்" (2008) எனும் நூலில்,

- மார்க்சியத் திறனாய்வு
- இருப்பியல் திறனாய்வு
- உளப்பகுப்புத் திறனாய்வு
- தொல்படிமத் திறனாய்வு
- அமைப்பியலும் – பின்னமைப்பியலும்
- பெண்ணியத் திறனாய்வு
- பின் நவீனத்துவம்
- சூழலியல் திறனாய்வு
- பின்காலனியம்

ஆகிய வகைகளுடன், கதையுரைப்பியல், எழுநடையியல், குறியியல் முதலான விடயங்களும் கூறப்பட்டுள்ளன. சபா. ஜெயராஜா திறனாய்வு, உளவியல் சார்ந்த ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். அவற்றில், தமிழில் இலக்கியத் திறனாய்வு சம்பந்தமான புதிய கலைச்சொற்களை உருவாக்கித் தந்துள்ளார். ஆங்கில மூலத்திலுள்ள கருத்துக்களை உள்வாங்கித் திறனாய்வுக் கட்டுரைகளை நிறையவே எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது அணுகுமுறைகளுள் உளவியல் சார்ந்த திறனாய்வுமுறை முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. அவர் ஒரு உளவியல் பேராசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 1.4. முடிவுரை

தமிழில் திறனாய்வு சம்பந்தமான கருத்து வெளிப்பாடுகள் நிறையவே உண்டு. திறனாய்வுக் கொள்கைகளும், கோட்பாடுகளும் படைப்பிலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டே எழுந்துள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களும், நவீன இலக்கியங்களும் தமிழிலக்கியத் திறனாய்வில் கவனத்திற்குரியனவாகக் கருதப்படுகின்றன. பழைய இலக்கியங்களின் பின்னணியில் இரசனை — அழகியல் முறை, விளக்கமுறை, வரலாற்று முறை, ஒப்பீட்டு முறை ஆகியன கவனம்பெற்று இருந்தாலும், பிற்காலத்தில் நவீன இலக்கியங்களின் வருகைக்கேற்பத் திறனாய்வு அணுகுமுறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்தேறி வருகின்றன. பல்வேறு திறனாய்வு வகைகளும், திறனாய்வு அணுகுமுறைகளும், திறனாய்வுக் கொள்கைகளும், திறனாய்வுக் கோட்பாடுகளும் வாசகர்களைக் குழப்பியடிக்கின்றன. படைப்பிலக்கியத் திருப்தியும், படைப்புப் பற்றிய புரிதலும் படைப்பாளனுடைய உத்திமுறைகள் பற்றிய மனப்பதிவும், படைப்பாக்கம் உருவாக்கித் தந்துள்ள மெய்ம்மை, சமூக உண்மை, சமூகப்பயன்பாடு ஆகியவற்றின் தன்மை பற்றியும் தன்னளவில் வாசகன் மனநிறைவடைகின்றான் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. தமிழகத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் வளர்ச்சிப்போக்கு

## 2.1. அறிமுகம்

படைப்பாக்க முயற்சி தோற்றம் பெறுகின்றபோதே திறனாய்வு சார்ந்த சிந்தனாபூர்வக் கருத்துக்களும் எழுந்துவிடுகின்றன. இதனால் படைப்பாக்கம் என்பது, ஒருவகையில் கோட்பாடாக்கம் என்றே சொல்லத்தோன்றுகின்றது. தொல்காப்பியம் நூலில் காணப்படும் திறனாய்வுக் குறிப்புகள், இலக்கண – இலக்கிய நூல்களுக்கான உரையாசிரியர்களின் கருத்துக்கள், திருவள்ளுவமாலை நூலில் இடம்பெற்ற புலவர்களின் கருத்துக்கள் ஆகியவை தமிழில் திறனாய்வின் தோற்றத்திற்கான அடிப்படைகளாக விளங்குகின்றன. இவ்வாறு தமிழகத்தில் அன்றுதொடக்கம் இன்றுவரை நிகழ்ந்த தமிழிலக்கியத் திறனாய்வின் வளர்ச்சிப்போக்கினை ஆராய இக்கட்டுரை முயற்சிக்கிறது.

## 2.2. தொடக்ககாலத் தமிழிலக்கியத் திறனாய்வு முயற்சிகள்

தமிழில் திறனாய்வின் தோற்றத்திற்கான அடிப்படைகளைத் தொல்காப்பியத்தில் காணலாம். தொல்காப்பியமானது மொழி மற்றும் இலக்கியத்திற்குரிய இலக்கணமாகப் பார்க்கப்படுகின்றது. எழுத்தும் சொல்லும், மொழி இலக்கணம் பற்றிப்பேசுகின்றபோது, பொருளதிகாரம் இலக்கிய இலக்கணம் பற்றிப்பேசுகின்றது. இதனால் அதனைப் 'பாவியல்' என்று அழைப்பதுண்டு. தமிழ் மரபில் தொல்காப்பியப் பொருளதிகாரமானது செவ்வியல் திறனாய்வு வகைப்பாட்டினுள் பார்க்கக்கூடியதாகும். அதன் ஒன்பது இயல்களும் புனைவியல் பற்றிய விளக்கங்களைத் தருகின்றன. அகத்திணையியலில் கூறப்படுகின்ற ஏழு திணைகளின் வகைப்பாடுகள், முதல் – கரு – உரிப்பொருள், புறத்திணையியலில் கூறப்படுகின்ற ஏழு திணைகளும் அத்திணைகளுக்குரிய துறைகள் பற்றியும் அங்கு பேசப்பட்டுள்ளன. மேலும், களவியல், கற்பியல் பற்றியும் பேசப்பட்டுள்ளன. மெய்ப்பாடுகள் அல்லது மனவெழுச்சிகள் பற்றிய விளக்கங்களையும் நாம் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். செவ்வியல் திறனாய்வில் சுட்டப்படுகின்ற ஓர் முக்கிய அம்சமாகவே மெய்ப்பாடுகளைப் பார்க்க முடியும். அது மட்டுமன்றி உவமையியல், மரபியல் முதலியவற்றிலும் நாம் செவ்வியல் திறனாய்வுப் பண்புகள் மேலெழுவதைக் காணமுடியும். எனவே அக்காலப் பேச்சு மற்றும் இலக்கியத் தரவுகளைக் கொண்டும், இலக்கிய மரபுகளை அடியொற்றியும், வடமொழியிலிருந்து மாறுபட்ட கருத்துக்களைக் கூறியும் திறனாய்வுசார் சிந்தனைகள் தொல்காப்பியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது.

தமிழ்த் திறனாய்வு வரலாற்றில் தொகுப்பு முயற்சிகளும் அவதானிக்கத்தக்க விடயமாகும். குறிப்பிட்ட திணை, துறை சார்ந்த கோட்பாடுகள் மற்றும் பா, அடி சார்ந்த வரையறைகள் கொண்டு சங்கப்பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவ்வரையறைகளை அக்காலத்திறனாய்வுச் சிந்தனைகளாகவே கொள்ளலாம் என்கிறார் ஏ.வி. சுப்பிரமணியஐயர். "மேல்கணக்கு கீழ்க்கணக்கு என்று சில விதிகளைத் தழுவிப் பாகுபாடு செய்திருப்பது அவர்களது விமர்சனப்பண்பை எடுத்துக் காட்டுகிறது" என்று ஏ.வி. சுப்பிரமணியஐயர், 'தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி'யில் (ப.83) எடுத்துக்கூறுவது அவதானிக்கத்தக்கது. 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்' என்று தொல்காப்பியர் கூறியிருப்பது கோட்பாடாகவும், திறனாய்வு முறையாகவும் தெரிகிறது. அவரின் 'மெய்ப்பாட்டியல்' என்ற பகுதி கவிதைப் படைப்புக்கு வழிகாட்டுவதை விடவும், கவிதை இரசனைக்கும் திறனாய்வுக்கும் மிகுதியாக வழிகாட்டுகின்றது என்றே கூறமுடியும். கோட்பாட்டு முறையான விதிமுறைத் திறனாய்வைப் படைப்புமுறைத் திறனாய்வாகக் கொள்ளும்போது, தொல்காப்பியம் திறனாய்வுடைய படைப்பு என்றே கூறமுடியும்.

உரையாசிரியர்களின் உரைச்செயற்பாட்டில் காணப்படும் உரையோடு சார்ந்த ஆய்வுக்குறிப்புக்கள் திறனாய்வு நோக்கிலான பார்வையையே காட்டுகின்றன. ஒரு படைப்புப் பற்றிய படைப்பாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியாகவும் உரைகளை நாம் பார்க்கலாம். வடமொழிச் செல்வாக்கினால் தமிழும் அதுசார்ந்த இலக்கிய மரபுகளும் புறக்கணிக்கப்பட்ட நிலையில், அக்காலச் சமூகத் தேவையின் பொருட்டே இவ்வுரைகள் எழுந்துள்ளன. இங்கு பாடபேதம் சார்ந்த கருத்துக்களும், மூலபாடத்தோடு ஒத்துப்போகின்ற பாராட்டுமுறைத் திறனாய்வுப்போக்கையும் காணமுடிகின்றது. குறிப்பிட்டுச் சொல்லப்போனால், உரையாசிரியர் கையாண்ட பாராட்டுமுறைத் திறனாய்வின் போக்கினை "திருவள்ளுவமாலை"யில் அவதானிக்க முடிகின்றது. படைப்பு மற்றும் படைப்பாசிரியர் பற்றிய பாராட்டுமுறைத் திறனாய்வாகவே இதனை நாம் பார்க்கமுடியும். அதுமட்டுமன்றி இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களிடத்தும் செவ்வியல் திறனாய்வுக்குரிய பண்புகளைக் காணமுடிகின்றது. உரையாசிரியர்களை இன்று நாம் குறிப்பிட்டுக்கூறும் நவீன திறனாய்வில் சேர்க்க முடியாது என்பது உண்மைதான். ஆனாலும் இலக்கியநயம், கலைநுகர்ச்சி உரையாசிரியர்களின் வழியில்வந்த செயற்பாடாகவே பார்க்க முடிகின்றது. அவர்கள் சொல்நயம் மட்டுமன்றிப் பொருள்நயம், தொடர்நயம், ஓசைநயம் ஆகியவற்றைக் கூறியுள்ளனர். அடியார்க்குநல்லார், பேராசிரியர் முதலிய உரைகாரர்கள் இலக்கியத்தில் நயமும், மதிப்பீடும் கண்டவர்களாகவே பார்க்கப்படுகின்றார்கள். மூலநூலாசிரியரைக் குறைகூறாமல் நிறைவையே பெரிதும் காண்பதால், உரையாசிரியர்களைத் திறனாய்வுக்கு வழிகாட்டாதவர்கள் என்று கூறிவிடமுடியாது. இவர்கள் தம் பொருள் விளக்கம் மற்றும் கருத்துரைத்தல் என்ற முறையில் இருந்துகொண்டு, சுவைநுகர்ச்சி அடிப்படையான திறனாய்வை நடத்துகின்றார்கள் என்றே கூறமுடியும். இவர்கள் இரசனையையும், அனுபவத்தினையும் கொண்டுதான் இலக்கியத்தினை அனுகியுள்ளனர். பெரும்பாலும் மதிப்பீட்டின்வழி செல்லாமல் மிகுதியாக நலன்பாராட்டும் விதமாகவே இவர்களின் போக்கு இருந்துள்ளதைக் காணலாம். நா. பார்த்தசாரதியும் பழந்தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாசிரியர்களின் திறனாய்வைப் 'பாராட்டுமுறைத்திறனாய்வு' (Appreciative Criticism) என்றே அடையாளப் படுத்துகின்றார் (1985:ப.17).

## 2.3. அறிவியல் – வரலாற்று முறைமை

அறிவார்ந்த வரலாற்று முறைகளில் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, நீலகண்ட சாஸ்திரி போன்றவர்களின் எழுத்துக்கள் குறிப்பிடத்தக்கவையாக அமைந்துள்ளன. திறனாய்வென்பது ஒருபுறம் கலையாக்கமாகவும், மறுபுறத்தில் அறிவியலாகவும் அமையக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன என்பது இங்கு கருதத்தக்கது. தமிழின் தொன்மை பற்றிய பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் கருத்துக்கள் தமிழிலக்கிய காரர்களிடமும், வரலாற்று ஆய்வாளர்களிடமும் சலசலப்பை உண்டாக்கியிருந்தன. "எவ்வகையான வேறுபாடுமின்றி, தோன்றிய காலத்தில் இருந்தது போலவே, தமிழ்மொழி இருந்து வருகிறது என்று கருதுவோர் தமிழ்வரலாறும், தமிழிலக்கிய வரலாறும் அறியாதார் என்றுதான் கூறவேண்டும். ஒரு கடிகாரத்தை நிறுத்தி விட்டால் காலம் கழியாமல் நின்றுவிடுமா?" (சிவகுமாரன். கே.எஸ் எடுத்துக்காட்டியது, 1989: 36) இவ்வாறு எஸ். வையாபுரிப்பிள்ளையின் கூற்றானது அமைந்திருந்தது. ஒப்பியல் திறனாய்வென்பது, புலமை நிலைச் செயற்பாட்டுடன் இணைந்ததாகும். அறிவுத் தேடலில் நிகழ்ந்த மறுமலர்ச்சியே ஒப்பியல் அணுகுமுறைக்கு வலுவூட்டியது. வையாபுரிப்பிள்ளை "இலக்கிய உதயம்" என்ற தலைப்பில் எழுதிய இரண்டு நூல்கள், தமிழில் ஒப்பியல் திறனாய்வு வளரக்காரணமாயிற்று என்றும் கூறலாம். கால ஆராய்ச்சி, மொழி ஆராய்ச்சி, அகராதி ஆகிய பணிகள் முக்கியமாயினும் இலக்கிய விமர்சகராகப் பழையதையும், புதியதையும் பற்றிப் பல கட்டுரைகளை எழுதியுள்ளமையும் அவதானிக்கத்தக்கது. ஆராய்ச்சிக் கட்டுரைகளில் நூல்நயம், இலக்கிய நயம் முதலியவற்றைக் கூறிக்கொண்டு செல்கிறார். பழைய தமிழ் உரையாசிரியர்கள் இன்று நாம் விமர்சனம் என்று கருதுகின்ற ரீதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாக்கியானம் செய்யவில்லை என்பதைத் தன் கட்டுரைகள் பலவற்றில் வற்புறுத்தியுள்ளமையை நோக்கமுடிகின்றது. இலக்கியநயம், கவிதைநயம் முதலியவற்றை, 'உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டும் வழக்கத்தினைப் பெரும்பாலும் கொண்டிருப்பதில்லை' என்பதை வலியுறுத்துகின்றார். இவருடைய இலக்கிய விமர்சனத்தில் பெரும்பகுதி கவிதையைப் பற்றியே அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

வையாபுரிப்பிள்ளை, சங்க இலக்கியம் முதல் தேசிகவிநாயகம்பிள்ளை வரையில் பல கவிதைகளைப் பற்றியும், கவிகளைப் பற்றியும் கட்டுரைகளில் எழுதியுள்ளார். பல்வேறு சமயங்களில் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்து "கம்பன் காவியம்" என்ற பெயரில் நூல் வெளியிட்டுள்ளார். இலக்கிய விசாரம் செய்து பார்க்க வேண்டிய இடத்தில், சரித்திர ஆசிரியர் என்ற ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடனேயே நோக்க வேண்டியுள்ளது. "இலக்கியச் சிந்தனைகள்" எனும் நூலில், ஆங்கில இலக்கிய விமர்சகர்கள் சிலரைப் பின்பற்றி இலக்கியமும் – சமூகமும் என்ற பார்வையைப் பார்க்கிறார். "இலக்கிய மணிமாலை" எனும் நூலில், தொகைநூல்களுடன் அறநூல்களைப் பற்றியும் குடிமக்கள் காப்பியத்தைப் பற்றியும் பேசுகிறார். "இலக்கிய தீபம்" எனும் நூலில், கலை – அறிவு இலக்கியப் பார்வையைக் காட்டுகின்றார். அதுமட்டுமன்றி "தமிழ்ச்சுடர் மணிகள்" எனும் நூலில், தொல்காப்பியர் முதல் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை வரையிலுமுள்ள பல இலக்கியப்படைப்பாளிகளைப் பற்றிய இலக்கிய விமர்சனக் குறிப்புக்களை, மேலோங்கிய பார்வையில் எழுதியுள்ளார். எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் எழுதிய 'Resent Progress in Tamil Studies' (Tamil Culture, 1952) எனும் கட்டுரை, தமிழ் ஆய்வு வளர்ச்சி பற்றிய முயற்சியாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவர் தன்னுடைய படைப்புக்களில் சரித்திர – சமூக ரீதியான பார்வையைச் செலுத்தியிருக்கிறார். எனவே இலக்கிய விமர்சனப் பார்வையைச் 'சரித்திர நோக்கு விமர்சனப் பார்வை' என்றே கூற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.4. இரசனைமுறைத் திறனாய்வின் முன்னோடிகள்

தி. செல்வகேசவராயமுதலியார் (1864 – 1921) எழுதிய பல கட்டுரைகள் திறனாய்வு நோக்குடையனவாகவே காணப்படுகின்றன. குறிப்பிட்டுச் சொல்லப்போனால், 'கம்பநாடர்' என்ற கட்டுரைப் படைப்பில் மகாகவி கம்பன் தொடர்பாக இவர் எழுதிய கருத்துக்கள், திறனாய்வுப் போக்கில் அமைந்துள்ளன என்றே கூறவேண்டும். மறைமலையடிகள் எழுதிய சில கட்டுரைகள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவு திறனாய்வுப் பார்வையுடையனவாகவே அமைந்துள்ளன. ஏனெனில் அவரின் இலக்கியக் கட்டுரைகளில் உரையாசிரியர்களை ஒத்த திறனாய்வுப் பார்வையைக் காணலாம். குறிப்பாக, 'முல்லைப் பாட்டு'ப் பற்றிய படைப்புக்களில் இப்பண்பினைத் தெளிவாகக் காணமுடிகின்றது. "பஞ்சாமிர்தம்", சஞ்சிகையில் (1918) அ.மாதவையா எழுதிய கட்டுரைகள், "பாலபாரதி" சஞ்சிகையில் (1924) வ.வே.சு. ஐயர் எழுதிய 'கம்பராமாயணம் பற்றிய கட்டுரைகள்', பின்னர் இவர் எழுதிய 'ஆங்கிலக் கட்டுரைகள்' ஆகியவை 1920களில் இலக்கிய ரீதியான திறனாய்வுகளுக்கு வழிகோலின என்றே கூறமுடியும். இவை முறையே "கம்பராமாயண ரசனை" என்று தமிழிலும், "Kambaramayanam - A Study" என ஆங்கிலத்திலும் நூல்களாக வெளிவந்தன. Kambaramayana - A Study இல் கம்பன் காட்டிய இராமன், வான்மீகியின் இராமனைவிடப் பல்லாற்றலில் உயர்ந்து நிற்பதையும், கம்பன் காட்டிய இராவணன், மண்டோதரி, இந்திரஜித்து, கும்பகர்ணன் ஆகியோரும்கூட வேறுபட்டுத் தனித்தன்மைபெற்று விளங்குவதையும் ஒப்பியல் தன்மையில் காட்டுகின்றார். தமிழில் நவீன இலக்கியத் திறனாய்வின் முன்னோடியாகவே வ.வே.சு. ஐயரைப் பார்க்கலாம். தமிழில் இலக்கியத்தரமான திறனாய்வுக்கு வழி ஏற்படுத்திய பெருமை இவரையே சாரும். அழகியல் அடிப்படையிலான இரசனை பூர்வமான விமர்சனத்தை அவர் மேற்கொண்டார். அவருடைய விமர்சனங்கள் படித்து இரசிப்பதற்குரிய படைப்புக்களாகவே அமைந்துள்ளன எனலாம். "பாலபாரதி" இதழில் அவர் எழுதிய கட்டுரைகளிலும், நூல்களைப்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய விமர்சனங்களிலும், தமிழ் மொழியில் நவீன திறனாய்வுச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்குரிய தளம் இடப்பட்டுள்ளதைக் காணலாம். அவர் தனது திறனாய்வுசார் மதிப்பீடுகளில் பரந்த வாசிப்பு நீட்சியையும், அதனைச் சார்ந்த மேற்கோள்களையும் பயன்படுத்தியுள்ளார். இவரின் ஒப்பியல்சார் பணி இங்கு முக்கியமானது. கம்பராமாயணத்தைத் திறனாய்வு செய்யும்போது உலகப்பெருங்காப்பியங்களுடன் ஒப்புநோக்கி மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளமை சிறப்புக்குரியது. இச்செயற்பாடு ஒப்பியல் திறனாய்வினை நுண்ணிய நோக்குடன் தமிழிற்கு அறிமுகப்படுத்துவதாக அமைந்துள்ளது. சி.பி. வெங்கடராமஐயர் எழுதிய "Kampan And His Art" இக்காலப்பகுதியில் வெளிவந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

"ரசிகமணி டி.கே.சியுடன் தொடங்கிய சற்று வேறுபட்ட இரசனை முறையொன்று தமிழ்நாடு மற்றும் ஈழத்திலும் பின்பற்றப்பட்டு வந்தது. 1924ஆம் ஆண்டு 'இலக்கியச் சங்கம்' என்னும் பெயரில் இலக்கிய இரசனைக் குழு ஒன்றை ஏற்படுத்தினார். ஆங்கிலம் படித்ததனால், தமிழில் என்ன இருக்கிறது? என்ற அறியாமையில் மூழ்கிக்கிடந்த மத்தியதர வர்க்கத்தினரிடையே தமிழிலக்கிய விழிப்பையும், ஆர்வத்தையும் உண்டாக்கிய வரலாற்றுப் பாத்திரம் டி.கே.சி.க்கும் அவரைச் சார்ந்திருந்த இரசனைமுறைத் திறனாய்வாளரையும் சார்ந்திருந்தது என்பது உண்மையே" (கைலாசபதி.க, 2002: ப.26) என்ற க. கைலாசபதி அவர்களின் கருத்து டி.கே.சி.யின் இரசனைமுறைத் திறனாய்வுப் பார்வையைக் காட்டுகின்றது. மேலும், "டி.கே.சி.யும், அவரைச் சேர்ந்திருந்த சிலரும் காலப்போக்கில் பாரதியார், தேசிகவிநாயகம்பிள்ளை ஆகிய இருவரையும் பாராட்டினாரெனினும், பெரும்பாலும் பழைய புலவர்கள் புகழ் பாடுவதிலேயே பெரிதும் அக்கறை காட்டினர்" என்று டி.கே.சி. வளர்த்துவிட்ட இலக்கியக் குழுவினர் குறித்து, "மணிக்கொடிகாலம்" எனும் கட்டுரையில் பி.எஸ்.ராமையா கூறியிருக்கும் கருத்தும் முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கவிதையே தலையாய இலக்கியமாகக் கருதப்பட்டது.
- பழைய இலக்கியங்களே புகழப்பட்டன.
- திறனாய்வாளனின் சொந்த இரசனை மற்றும் விருப்பு – வெறுப்பே மதிப்பீட்டில் முக்கியம் பெற்றன.

மேற்கூறப்பட்டுள்ள மூன்று விடயங்களையும், டி.கே.சி.யின் திறனாய்வுப்போக்கில் காணக்கூடிய பொதுவான இயல்புகளாக நாம் அடையாளப்படுத்த முடியும்.

திறனாய்வு வளர்ச்சியில் தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளின் பங்களிப்புக்களும் முக்கியமானவையாகும். திறனாய்வு பற்றிய அறிமுகம், திறனாய்வுப் பிரச்சினைகள், இலக்கியத் திறனாய்வின் பரிமாணங்கள், இலக்கியப் படைப்புக்கள் பற்றிய சாதகமான, பாதகமான கருத்துக்கள் போன்றவற்றை எதிரும் புதிருமாக இச்சஞ்சிகைகள் மக்களிடையே கொண்டு சேர்த்தன. 1930களில் 'ஆனந்தபோதினி' முக்கிய சஞ்சிகையாக விளங்கியது. இதில் பொ. திரிகூடசுந்தரம்பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை, தொ.மு. பாஸ்கரத்தொண்டைமான் போன்றோர் எழுதி வந்தனர். இடைக்கால உரையாசிரியர்களின் உரைகளிலிருந்துபெற்ற அறிவின் அடிப்படையில் திறனாய்வு நூல்கள் எழுத வந்தவர்கள் பலர். இவர்களைக் கல்வித்துறைத் திறனாய்வாளர்கள் என்றே சொல்லலாம். தமது திறனாய்வுக்குத் திட்டவட்டமான கோட்பாடுகளையோ, அளவுகோல்களையோ இவர்கள் வைத்துக்கொள்ளவில்லை. தாம் எடுத்துக்கொண்ட நூல்களின் அருமைபெருமைகளை வியந்து பாராட்டுவதன்றி அவற்றின் குறைநிறைகளைக்காணும் முயற்சியைப் பெரிதும் செய்யவில்லை. இவர்களில் ஒருவர் ரா.பி. சேதுப்பிள்ளை. 25க்கும் மேற்பட்ட உரைநடை நூல்கள் எழுதியுள்ள இவர், "சிலப்பதிகார நூல்நயம்", "திருவள்ளுவர் நூல்நயம்", "தமிழ் இன்பம்", "தமிழ் விருந்து", "வில்லும் வேலும்", "வழிவழி வள்ளுவர்" முதலான நூல்களில் சிலம்பு, குறள், சங்கப்பாடல்கள், கம்பராமாயணம், தேவாரங்கள் ஆகியவற்றைப் பேசும் உரைகளை எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் திறனாய்வின் தரத்தினை உயர்த்தியவர்களுள் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரைக் (1910 –1980) குறிப்பிடலாம். வரலாறு, சமயம், தத்துவம், மொழியியல் ஆகிய பல துறையறிவும் தமிழ், ஆங்கிலம், வடமொழி, பிரெஞ்சு ஆகிய பன்மொழிப் புலமையும் இவரது திறனாய்வுக்கு உரமூட்டின. தொல்காப்பியர் முதல் பாரதிதாசன் வரையிலான பல படைப்பாளர்களைப் பற்றியும் ஆழ்ந்த கருத்துக்களை அழுத்தமாகத் தெரிவிக்கும் ஆற்றல் இவருக்குண்டு. வரலாற்று நோக்கும், ஒப்பியல் அணுகுமுறையும் கொண்டு ஆய்வுக்கெடுத்துக்கொண்ட நூலை முழுமையாகப் பார்க்கும் தன்மையை இவரிடம் காணலாம். இவரது "கானல்வரி" முக்கியமான நூலாகும். "தமிழ் இலக்கிய வரலாறு: சங்ககாலம்", "முல்லைப்பாட்டு", "வள்ளுவரும் மகளிரும்", "குடிமக்கள் காப்பியம்" முதலிய நூல்களும் இவரின் திறனாய்வுப்போக்கிற்குச் சான்றாகும். 'The Philosophy of Valluvar' என்ற திருவள்ளுவரின் தத்துவம் பற்றிய ஆங்கிலக் கட்டுரை, வள்ளுவரின் உலகளாவிய நோக்கினைக் கூறுகிறது. "வள்ளுவர் கண்ட நாடும் காமமும்" எனும் நூலில், குறளைக் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தோடும், வாத்சாயனரின் காமசூத்திரத்தோடும் ஒப்பிட்டு அறம், பொருள், இன்பம் பற்றிய வள்ளுவர் கருத்துக்களின் தனித்தன்மையை எடுத்துக்காட்டுகிறார். இவரின் 'Aesthetics of the Tamils' (தமிழர்களின் முருகியல்) எனும் ஆங்கிலக் கட்டுரை, தமிழர்களின் கலைக்கோட்பாட்டையும், கலையுணர்வையும் கூறுகிறது. இவரின் 'அழகும் அனுபவமும்' எனும் கட்டுரை, மேலைநாட்டுப் புனைவியல் திறனாய்வாளர்களில் ஒருவரான லாசெலஸ் ஆபெர் கிராம்சி எழுதிய 'Theory of Art' என்ற நூலைப்பற்றியதாக உள்ளதைக் காணலாம். இவரின் 'காப்பிய நாடகங்களில் புதுப்போக்கு' எனும் கட்டுரையும் முக்கியமானதாகும். இவர் பெரும்பாலும் ஒப்பாய்தல், பகுத்தாய்தல் முதலிய அணுகுமுறையை மேற்கொண்டார் எனலாம். இவரின் திறனாய்வுச் செயற்பாட்டின் சிறப்பை அவர் சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், பக்திப்பாடல்கள், கம்பராமாயணம், பெரிய புராணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி பாடல்கள் ஆகியவை பற்றி எழுதிய கட்டுரைகள்மூலம் காணமுடிகின்றது.

## 2.5. மணிக்கொடி காலத்திலிருந்து...

1933 — 1940 ஆகிய காலகட்டத்தில் இரு தடவைகளாக வெளிவந்த "மணிக்கொடி" என்னும் சஞ்சிகை, தமிழிலக்கிய வளர்ச்சியிலும், தமிழ்த்திறனாய்வு வளர்ச்சியிலும் புதிய போக்கினையும், திருப்பங்களையும் ஏற்படுத்தியது. முதலில் வெளிவந்தபோது வ. ராமசாமி ஐயங்காரும், பின்னர் பி.எஸ். ராமையாவும் ஆசிரியர்களாக இருந்து சஞ்சிகையை நடத்தினர். புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், கோ. சுந்தரராஜன் (சிட்டி), கு. அழகிரிசாமி போன்றோர், "மணிக்கொடி"யில் திறனாய்வுக் கட்டுரைகளை எழுதி வந்தனர். 1948 ஆம் ஆண்டு ரகுநாதனின் "இலக்கிய விமரிசனம்" நூலும் வெளிவந்த பின்னர் சுப. நாராயணனின் "கவிதை, கலை, விமர்சனம்" நூல் வெளிவந்தது. ஆ. முத்துசிவனின் "அசோகவனம்", "மின்னல்கீற்று", "அசலும் நகலும்", "கவிதை" முதலிய நூல்களில், ஆங்கில நூல்கள் கூறும் அரிய கருத்துக்கள் இடம்பெற்றிருந்தன. கு.ப. ராஜகோபாலன் மற்றும் கோ. சுந்தரராஜன் (சிட்டி) ஆகிய இருவரும் எழுதிய "கண்ணன் என் கவி" (1937) எனும் நூல், உடனிகழ்காலத் திறனாய்வின் வெளிப்பாடாகவே காணப்படுகின்றது. இரசனைப் பாங்கு இணைந்ததாக நெறிப்படுத்தப்பட்ட திறனாய்வு அடிப்படைகளையும் உள்ளடக்கியதாய் இந்நூல் அமைந்துள்ளது. கல்கி, பாரதியார் – மகாகவி அல்லர் எனக் கூறியதைக் கண்டித்து, அக்கருத்தினை மறுத்து 'பாரதியார் மகாகவி' என்பதை உறுதிப்படுத்துவதாக "கண்ணன் என் கவி" எனும் நூலை பெ.கோ.சுந்தரராஜனும், கு.ப.ராவும் இணைந்து வெளியிட்டனர். இவர்கள் இருவரும் பொதுவில், இலக்கியத் தொழிலின் நுட்பங்கள், உத்திகள், நடைமுறைகள், இலக்கியமொழி என்பவற்றில் அதிக அக்கறையுடையவர்களாய்த் திகழ்ந்தனர். "கண்ணன் என் கவி" நூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாரதி மகாகவி என்பதை ஸ்தாபிக்க (இக்கட்டுரைகளில்) ஒரு சிறு முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. அவருடைய காவிய எழுத்துக்கள் யாவும், கூடியவரையில் பட்சபாதமற்ற, ஒரு சிறு விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன... ஒரே நோக்கில் பூர்த்தியாக ஆராய்ச்சி செய்யப்பட்ட ஒரு மதிப்புரை இன்னும் வெளிவரவில்லை. அப்படிப்பட்டதுதான் பாரதியின் நூல்களையும் நவீன இலக்கிய முறையையும் பரவச் செய்யக்கூடிய ஒரு வழி... இப்படி (நாம்) எழுதும் கட்டுரைகளில் பாரதி மகாகவிதான் என்பதைக் கூடியமட்டும் அவருடைய எழுத்துக்களிலிருந்தே எடுத்துக்காட்ட எண்ணுகின்றேன்" (கண்ணன் என் கவி நூலின் முன்னுரையிலிருந்து). இந்த முன்னுரையில் பெ.கோ.சு.வும், கு.ப.ரா.வும் பகுப்பாய்வுப் பண்புகளைத் தெளிவாகவே சுட்டியுள்ளனர். 'ஒரே நோக்கு', 'ஆராய்ச்சி செய்யப்பட்ட ஒரு மதிப்புரை', 'நவீன இலக்கியமுறை' என்று அவர்கள் கூறுவது அவர்களின் திறனாய்வுப் பார்வையையே புலனாக்குகின்றது.

எழுத்துப் பிரக்ஞையும், மேலைத்தேய இலக்கிய ஊடாட்டமும் தமிழக எழுத்தாளர்களிடையேயும் திறனாய்வுச் சிந்தனைகளை வளர்த்தெடுத்தது. "விடிவெள்ளி", "சமரன்" முதலிய சஞ்சிகைகளும், எஸ். விஜயபாஸ்கரன் 1955 இல் தொடங்கிய "சரஸ்வதி" சஞ்சிகையும், தொ.மு.சி. ரகுநாதனின் "சாந்தி" சஞ்சிகையும் இலக்கியத் திறனாய்வுக்குக் கணிசமான பங்களிப்பை வழங்கி வந்தன. இரசனையே விமர்சனத்தின் அடிப்படை என்றாலும், இரசனையுடன் தத்துவார்த்தச் சிந்தனை இணைகின்றபோதுதான் விமர்சனம் சரியானதாக அமையும் என்ற கருத்தினை வலியுறுத்தியவர்களாக தொ.மு.சி. ரகுநாதன், தி.க. சிவசங்கரன் முதலியோர் காணப்பட்டனர். ரகுநாதனின் விமர்சனம் பற்றித் தமிழவன்,

"ரகுநாதனின் விமர்சனாபூர்வ சிந்தனா இயக்கத்தில் உள்ள உள்ளடக்கம் பற்றிப் பேசும்போது வெளிவர வேண்டியது வேறொன்றுள்ளது. அதாவது 'அநேக விமர்சகர்கள் சொந்த வெறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்புக்கு அடிமையானவர்கள். நூலை விமர்சனம் செய்வதைவிட்டுவிட்டு நூலாசிரியனைப் பற்றி எழுதுகிறார்கள்' எனும் ரகுநாதனின் இக்கூற்று இன்று ரொம்ப அர்த்தமுள்ளது. நூலாசிரியனைப் பற்றி அவனது இலக்கிய விசாரணை நேர்மை சம்பந்தப்பட்ட மட்டில் கேள்வி கேட்பது வேறு. அவனை விமர்சகன் தன் பலவீனத்துடன் அணுகுவது வேறு. இரண்டாவது விடயத்தைத்தான் ரகுநாதன் குறிப்பிடுகிறார் என்று நம்புகிறேன். இன்று தமிழில் நடக்கும் சண்டைகள் பற்றி அன்று எழுதும் எழுத்து ஓர் மேற்கோளாய்க் காட்டப்படுவது, அந்த எழுத்தின் சிறப்பை விளக்குவதாகப் படாமல் தமிழ்ச் சூழலின் வளர்ச்சியடையாத நிலையைத்தான் விளக்குகிறது. இது வருந்துவதற்குரியது" என்று கூறுகிறார் (தமிழ் இலக்கிய விமர்சகர்கள்,1979:ப.33).

1950களில் இருந்து தனது விமர்சன ரீதியான கருத்துக்களைப் பதிவுசெய்து வருபவர் தி.க. சிவசங்கரன். தனக்குச் சரியாகப்பட்டதைத் துணிச்சலாகவும், நேர்மையாகவும் விமர்சிக்கத் தயங்காதவர். புதுமைப்பித்தன் உட்பட மணிக்கொடியில் எழுதியவர்களின் படைப்புக்களை மதிப்பீடு செய்து, அவர்களுடைய திறமைகளை ஏற்றுக்கொள்ளத் தயங்காமலும், குறைகளைச் சுட்டிக்காட்டத் தவறாமலும் விமர்சனம் செய்தவர். இதனால் தி.க.சி என்ற பெயர் பெரும் மதிப்புக்குரியதாக விளங்கியது. இதனையே நாம் விமர்சன நேர்மை என்று கருதலாம். 1950களில் "ஜனசக்தி", "சரஸ்வதி", "சாந்தி" முதலிய பத்திரிகைகளில் டாக்கடர் மு. வரதராசன், கவியரசு கண்ணதாசன், பாவேந்தர் பாரதிதாசன் முதலியோரின் படைப்புக்களை விமர்சனம் செய்தவர். "செம்மலர்", "தீபம்", "எழுத்து", "இலக்கிய வட்டம்" முதலிய இதழ்களிலும் விமர்சனக் கட்டுரைகளை எழுதி வந்தார். 1964 – 1974 வரையான காலகட்டத்தில் "தாமரை" இதழின் ஆசிரியராக விளங்கினார். அதில் அவர் எழுதிய கட்டுரைகள் அவரின் விமர்சனத் திறனுக்கு எடுத்துக்காட்டுக்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969இல் சிசு. செல்லப்பாவின் "எழுத்து" சஞ்சிகை தோன்றியது. இது முன்னர் கூறிய சஞ்சிகைகளின் கருத்து நிலைகளுக்கு எதிரான போக்கினைத் திறனாய்வு ரீதியாகக் கடைப்பிடித்து வந்தது. குறிப்பாகச் சொல்லப்போனால் தமிழில் வளமான திறனாய்வு நிலைகள் வளர்ச்சி பெறுவதற்கு "எழுத்து"ச் சஞ்சிகையின் பங்கு முக்கியமானதாகும். 'விமர்சனத்திற்காகவே தொடங்கப்பட்ட இதழ் சிறப்பாக இருக்கவேண்டும் என்ற வெறியில், சி.சு. செல்லப்பா அவர்கள் நாளொன்றுக்குப் 14 மணிநேரம்கூட ஆங்கிலத்தில் உள்ள திறனாய்வு நூல்களைத் தமது நாற்பத்தேழாவது வயதில் படிக்கத் தொடங்கினார்' என்று சபா. ஜெயராசா, தன்னுடைய "தமிழியலும் திறனாய்வுக் கலையும்" என்ற நூலில் சுட்டிக்காட்டியிருப்பது அவதானிக்கத்தக்கது (ஜெயராசா.சபா., 2012: ப.37). மேலோட்டமாக அபிப்பிராயம் சொல்வதுபோல, 'எனக்குப் பிடித்த நல்ல படைப்பு இது. நான் சொல்வதை நீங்கள் கேட்கத்தான் வேண்டும்' என்ற தன்மையில் காரணம் காட்டாமல் மொத்தமாக எழுதுவது சரியான விமர்சனம் ஆகாது என்ற கருத்துடையவராகவே சி.சு. செல்லப்பா காணப்பட்டார். 'ஆய்வுமுறை விமர்சனம்'தான் மற்றவைகளைவிட மிகச்சிறந்தது என்பது செல்லப்பாவின் கோட்பாடாகும். ஆங்கிலத்தில் இதனை 'Analytical Criticism' என்பர். இவ்வாய்வுமுறை விமர்சனம், பகுப்புமுறை கொண்டது. தனிநூல் ஆய்வை மேற்கொண்டது. கட்டமைப்பு அணுகுமுறையைக் கொண்டதாகும். மொழியமைப்புக் கூறுகளின் அடிப்படையில் செல்கிறது. மேலும் அணியியல் ஆய்வும், உத்திமுறை ஆய்வும் மேற்கொண்டது. இலக்கியத்தை இலக்கியமாகப் பார்க்கும் போக்குடையதாகும். தமிழில் இலக்கியத் திறனாய்வு தொல்காப்பியரோ, உரையாசிரியர்களோ வழிவகுத்த முறைகளில் இருந்து வளர்ச்சி பெற்றது என்பதை முடிவுகட்டுவதாக, மேல்நாட்டிலிருந்துதான் தமிழில் திறனாய்வு பிறந்தது என்ற நோக்குடையவர் சி.சு. செல்லப்பா. இவருடைய விமர்சனத்தில் இலக்கிய அம்சங்கள் முதலிடத்திலும், சமுதாயம், தத்துவம், உளவியல், வரலாறு பற்றியவை இரண்டாம் இடத்திலுமே பார்க்கப்படுவதை அவதானிக்கலாம். இலக்கியத் திறனாய்வு தத்துவத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களாக, அறிவுத்துறை ஆய்வாக இல்லாமல் இலக்கியத் தரவுகளாக, கலைத்துறை ஆய்வாக இருக்கவேண்டியதுதான் முறை என்பது இவரின் கருத்தாகும். ஆனாலும் தனக்கு வேண்டிய இடத்தில் இலக்கியத்திலிருந்து சமூகத்தகவல்களை எடுத்துக்கொண்டு பகுத்தும் பார்க்கிறார்.

ஆய்வுமுறை விமர்சனத்தைச் சமுதாயவியல் விமர்சனத்துடன் ஒப்பிட்டும் நோக்குகிறார். இவருடைய சிறந்த ஆய்வுமுறை விமர்சனக் கட்டுரைகளாக 'கு.ப.ரா. கதைகள்', 'புதுமைப்பித்தன் கதைக்கரு', 'நல்ல சிறுகதை எப்படி இருக்கும்' முதலானவற்றைக் கூறலாம். இவரின் 'தமிழில் சிறுகதை பிறக்கிறது' என்ற திறனாய்வு நூலானது, முதல் தமிழ்ச் சிறுகதைகளை நுணுக்கமாக ஆராய்கிறது. இதில் இவரின் பகுப்புமுறைத் திறனாய்வைக் கண்டுகொள்ளலாம். இவரிடம் உருவவியலான அணுகுமுறையையும் (Formalistic Approach) கண்டுகொள்ள முடியும். விமர்சனத்துறையில் புதிய பரிணாமத்தைத் தோற்றுவிக்கும் பெருநோக்குடன் சி.சு. செல்லப்பா "எழுத்து" ஏட்டைத் தொடங்கினார். அதன் நோக்கம் ஓரளவு ஈடேறியது என்றே சொல்லத் தோன்றுகின்றது. திறனாய்வுத்துறைபற்றி எழுதுபவர்கள் "எழுத்து" ஏடுபற்றிக் குறிக்காமல் எழுத முடியாது எனும் அளவிற்கு அது முதன்மைபெற்றுக் காணப்பட்டது. மேலும் 'சூறாவளி', 'கலாமோகினி', 'கிராம ஊழியன்', 'நவசக்தி', 'சந்திரோதயம்', 'சக்தி', 'தேனீ', 'சிந்தனை', 'நடை', 'ஞானரதம்', 'கண்ணதாசன்', 'சதங்கை', 'செம்மலர்', 'சிகரம்', 'யாத்ரா', 'அ:.க்', 'கொல்லிப்பாவை' 'கசடதபற', 'தீபம்', 'கணையாழி', 'செம்மலர்', 'நிகழ்', 'இலக்கு', 'காலைச்சுவடு' முதலான சிறிய – நடுத்தர இதழ்கள், மணிக்கொடிக்குப்பின் கடந்த ஐம்பதாண்டு காலத்தில் திறனாய்வுக் கலையை வளர்த்தெடுத்ததில் பெரும்பங்கு வகித்துள்ளன.

## 2.6. பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் திறனாய்வு

1940களில் இலக்கியத் திறனாய்வு என்ற பாடத்திட்டம் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்வு பற்றிய நூல்கள் எழத்தொடங்கின. அந்நூல்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப் பட்டவைகளாகவும், தமிழாக்கம் செய்யப்பட்டவைகளாகவும் அமைந்திருந்தன. அ.ச. ஞானசம்பந்தனின் (1916 – 2002) "இலக்கியக்கலை" (1953), என்னும் நூலும், மு. வரதராசன் எழுதிய "இலக்கியத் திறன்" ((1965) எனும் நூலும் இத்தகைய பார்வையில் எழுந்த நூல்களாகவே பார்க்கப்படுகின்றன. அதுமட்டமன்றி ந. சுப்புரெட்டியார் எழுதிய "கவிதைக்கலை", மு. வரதராசன் (1912 – 1974) எழுதிய "இலக்கிய மரபு", "இலக்கிய ஆராய்ச்சி", க.நா. சுப்பிரமணியன் எழுதிய "இலக்கியக்கலை", அ. ஸ்ரீநிவாசராகவன் எழுதிய "மேல்காற்று" (ஆங்கிலத்தில் ஷெல்லி எனும் புலவர் இயற்றிய ஒரு பாட்டை ஆராய்ந்து கூறுகிறது) ஆகியன திறனாய்வுக் கலை சம்பந்தமாக வெளிவந்த முக்கியமான நூல்களாகும். இவை திறனாய்வுப் பாடப்பயில்வுக்குத் துணையாக விளங்கின. "பாடப்புத்தகங்கள் வெளிவரும் இந்நிலை ஏற்பட்டுக்கொண்டிருந்த காலகட்டத்தில் பேராசிரியர் மு. வரதராசனின் உந்துதல் காரணமாகத் தற்கால இலக்கியம் மேற்பட்டப்படிப்பிற்கான ஆராய்ச்சிப் பொருளாயிற்று (1950)" (சிவத்தம்பி.கா, 2001: ப.34). இதிலிருந்து இலக்கியத் திறனாய்வானது தமிழ்நாட்டில் உயர் பட்டப்படிப்புகளுக்குரிய பாடமாயிற்று. நவீன இலக்கிய வடிவங்களான சிறுகதை, நாவல் பற்றியும், கவிதை பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. முனைவர் (பிஎச்.டி) பட்ட ஆய்வுகள்கூட நவீன இலக்கியப் படைப்புக்கள் சார்ந்து மேற்கொள்ளப்பட்டன. இரா. தண்டாயுதம், மா. ராமலிங்கம் போன்றோர் இத்துறையில் முன்முயற்சியாளர்களாக விளங்கினர் என கா. சிவத்தம்பி அவர்கள், தமது "இலக்கிய விமர்சனம்" நூலில் குறிப்பிட்டுள்ளார் (ப.35).

## 2.7. க.நா.சு.வின் பங்களிப்பு

இலக்கிய விமர்சனத்தை தீவிரத்துடன் வளர்த்தவர் க.நா. சுப்பிரமணியம். இவரும் மணிக்கொடி குழுவைச் சேர்ந்தவர்தான். இவர் 1940களில்தான் விமர்சனத்தில் மும்முரமாக ஈடுபட்டார். இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய இரசனை உணர்வினையே இலக்கிய விமர்சனத்திற்குரிய அளவுகோலாகக் கொண்டிருந்தார் என்பதே உண்மை. இவருடைய சுய இரசனையை மையப்படுத்திய இலக்கிய விமர்சனமானது, தமிழ் விமர்சனத்துறையில் ஆரோக்கியமில்லாத போக்கு வளருவதற்கு வகை செய்தமையும் நோக்கத்தக்கது. இவர் 'வசனமே இலக்கியத்தில் உயர்ந்த கலை' என்ற பார்வை கொண்டவர். டி.கே.சி.யும் அவரைச் சார்ந்தோரும் இரசனை முறைசார்ந்து கவிதையைப் பிரதானப்படுத்தியதற்கு நேர்மாறாக இவர், வசனத்தையே முதன்மைப்படுத்தினார். அவர்கள் பழைய ஆக்கங்களையே பற்றி நின்றனர். ஆனால் இவர் சமகாலப் படைப்புக்களை மதிப்பிடும் மார்க்கத்தினைத் தழுவி நின்றார். க.நாசு. தன்னை நவீன திறனாய்வாளனாகக் காட்டிக்கொண்டாலும் அடிப்படையில் நவீன இரசனை முறையாளர் என்று நாம் வரையறை செய்யும் வண்ணம் அவருடைய எழுத்துக்கள் அமைந்துள்ளன. "மணிக்கொடி" சகாப்தத்திற்குப்பின் அடுக்கடுக்காய்த் தோன்றி மறைந்த சிற்றேடுகளில் ஒன்றுதான் "சூறாவளி" எனும் சிற்றிதழாகும். இதன் ஆசிரியராக இருந்தவர் க.நா.சு. அச்சஞ்சிகையில் கல்கியின் "தியாகபூமி" நாவலை 'ராமபாணம்' எனும் தலைப்பில் விமர்சித்திருந்தார் (சூறாவளி, 11.06.1939). மேலும், "இலக்கிய மதிப்பீடுகள்" (ஞானரதம், ஏப்பிரல், 1972), "இலக்கிய அரசியல்" (1973), "எதற்காக எழுதுகிறேன்" (1962), "விமர்சனத்தின் நோக்கம்", "இலக்கியத்துக்கு ஒரு இயக்கம்", "இலக்கியத்தில் விஷயமும் உருவமும்" (எழுத்து, ஏப்பிரல், 1959), "இலக்கியத்தில் கருத்தும் உருவமும்" (இலக்கிய வட்டம், நவம்பர் – டிசம்பர், 1963), "தமிழ் இலக்கிய விமர்சனத்தில் உத்தி, உருவநோக்கு" (ஞானரதம், மே, 1972) முதலிய கட்டுரைகள் இவரின் திறனாய்வுப் போக்கிற்கு உதாரணங்களாகும். மேலும், "விமரிசனக்கலை" (1959) எனும் நூலில் 'இலக்கியத்தில் உருவங்கள்' என்ற அத்தியாயமும், "இலக்கிய விசாரம்" (1959) எனும் நூலிலும் க.நா.சு.வின் உருவவாதம் பற்றிய சிந்தனைகளைக் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் இலக்கியக் கொள்கையில், தனிமனிதவாதம் என்பது இலக்கியத்தின் தோற்றம், பண்பு, பயன் ஆகியவற்றையும் தீர்மானிக்கும் மூலாதாரமான ஒரு மையக்கருத்தாக விளங்குகின்றது என்பதையே சுட்டுகின்றது. தனி மனிதனைக் கட்டுப்படுத்தும் மனித உறவுகளை அவர் விரும்பவில்லை. தனிமனிதனும் சமூகமும் முரண்பாடுகள் இன்றி இயைந்து வாழ்வதே சிறந்தது என்பதையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் எப்போதும் முரண்பாடுகள் இருப்பது இயல்பானதென்றும், இதனடிப்படையில் இம் முரண்பாடுகளை முனைப்பாகச் சித்திரித்து இலக்கியம் படைப்பவனே கலைஞன் என்ற சிந்தனை க.நா.சுவுக்கு உண்டென்று எழுதுகிறார் க. கைலாசபதியவர்கள் (திறனாய்வுப் பிரச்சினைகள், 2002: ப.36). க.நா.சுவை அடியொற்றியே சி.சு. செல்லப்பா இலக்கிய விமர்சனத்தில் கால்வைத்தார் எனலாம். ஆழ்ந்த பகுப்பாய்வு முறையில் இவருடைய விமர்சனங்கள் காணப்படுகின்றன. தமிழகத்திலும் இலங்கையிலும் 1950களின் பின்னர் மார்க்சியத் திறனாய்வு முயற்சிகள் வலுவடையத் தொடங்கின. இவை உயர்பட்டப் படிப்புக்களிலும் எதிரொலித்தன. க.நா. சுப்பிரமணியம், சி.சு. செல்லப்பா ஆகியோரின் கருத்துக்களுக்கு மறுதலையான விதத்தில் மார்க்சியக் கருத்து நிலைப்பட்ட விமர்சகர்கள் எஸ். தோதாத்திரி, அ. மார்க்ஸ், கோ. கேசவன் போன்றோர் செயற்பட்டனர். மார்க்சியக் கருத்து நிலையாளரிடையேயும் ஒன்றுபட்ட கருத்துக் காணப்படவில்லை.

## 2.8. மார்க்சியத் திறனாய்வாளர்கள்

கலை, இலக்கியம், தத்துவம், பண்பாடு, வரலாறு, மானிடவியல், நாட்டுப்புறம் முதலிய துறைகளில் பணியாற்றிய வானமாமலை, தமிழகத்தின் மார்க்சிய முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவர். அவரது சிந்தனைகளும் எழுத்துக்களும் கட்டுரைகளாகவும், நூல்களாகவும் வெளிவந்து மார்க்சியத் திறனாய்வாளர்களுக்கு உந்துசக்தியை அளித்தன. "இலக்கியத்தில் உள்ளடக்கமும் உருவமும்",



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்திய நாத்திகமும் மார்க்சியத் தத்துவமும்", "மார்க்சிய அழகியல்", "மார்க்சிய சமூக இயல்கொள்கை" ஆகியன மார்க்சிய அடிப்படையிலான நூல்களில் சிலவாகும். "தமிழர் பண்பாடும் வரலாறும்", "தமிழர் பண்பாடும் தத்துவமும்", "புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும்", "Studies in Tamil Folk Literature" முதலான நூல்களும் இவருடையதாகும். நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். இவரின் விஞ்ஞான பூர்வமான இயக்கவியல் வாதத்தைக் கொண்ட முறையியல் இவரின் ஆராய்ச்சியின் தெளிவுக்கும், வெற்றிக்கும் காரணமாகும். இவருடைய விமர்சனமும் விஞ்ஞான சோஷலிசத் தத்துவமும் முறையியலை மையப்படுத்தியதாகவே அமைகின்றது. இவரின் ஆராய்ச்சி முறையியல் வரலாறு, மானிடவியல், தொல்பொருளியல். சமூகவியல், இலக்கியம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். எனவே விஞ்ஞான சோஷலிச விமர்சனக் கண்ணோட்ட முறையின் வெற்றியைப் பறைசாற்றும் பிரதிநிதியாகவே காணப்படுகின்றார்.

மேலும், இவர் தன்னுடைய "ஆராய்ச்சி" இதழ்மூலம் மானிடவியல்சார் ஆய்வுகளையும், நாட்டுப் புறவியல்சார் ஆய்வுகளையும் வளர்த்தெடுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் "புதுக்கவிதை – முற்போக்கும் பிற்போக்கும்" (1975) என்ற நூலில், புதுக்கவிதையை மார்க்சியப் பார்வையில் விமர்சனம் செய்திருப்பதை அவதானிக்கலாம். வானமாமலையின் இந்நூல், புதுக்கவிதை ஆய்வு வரலாற்றில் முதன்மையானது மட்டுமன்றி, புதுக்கவிதையை மார்க்சியக் கண்ணோட்டத்தில் அணுகி ஆராய்கின்றது. நவீன விமர்சகரான சுந்தரராமசாமி, "காலச்சுவடு" என்ற பத்திரிகையைத் தொடங்கி அதனை நடத்தியவர். இவரது இலக்கியம் சார்ந்த திறனாய்வுக் கருத்துக்கள் வாசகர்களிடையே நன்மதிப்புப் பெற்றவை. மாறாக எதிர்ப்புகளையும் கண்டவை. சிறந்த படைப்பிலக்கிய வாதியான இவரின், "ந. பிச்சமூர்த்தியின் கலைமரபும் மனித நேயமும்" (1991), "ஆளுமைகள் மதிப்பீடுகள்" (2004), "புதுமைப்பித்தன்: மரபை மீறும் ஆவேசம்" (2006) முதலான நூல்கள் குறிப்பிடத்தக்கவை. 1980களுக்குப் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலதரப்பினரிடையேயும் திறனாய்வு பற்றிய ஆர்வம் தமிழக இலக்கிய உலகில் வளர்ச்சி கண்டு வந்துள்ளது. இளம் எழுத்தாளர்களும், புதிய திறனாய்வாளர்களும் தோன்றிக்கொண்டே இருக்கின்றனர். அவர்களது ஆக்கங்களின் வெற்றிதோல்வி என்பது காலம்தான் தீர்மானிக்க வேண்டியது. ஆர். சண்முகசுந்தரத்தின் படைப்பாளுமை" (2000), "மாதொரு பாகன்" நாவல் (2010), ஆகியவை உட்படப் பல நூல்களை எழுதிய பெருமாள் முருகன் குறிப்பிடத்தக்கவர். இவரது "மாதொருபாகன்" நாவலுக்கான எதிர்ப்புகளும், கடுமையான விமர்சனங்களும் அவரை எழுத்துலகிலிருந்து ஒதுங்கியிருக்கும்படி செய்ததும் இங்கு நோக்கத்தக்கது.

## 2.9. நவீன திறனாய்வாளர்கள்

திறனாய்வுக் கோட்பாடுகள் சார்ந்த நூல்களின் வருகையில் சி.இ. மறைமலையின் திறனாய்வுசார் நூல்களும் பார்க்கப்பட வேண்டியவை. "இலக்கியக் கொள்கைகள்" (1976), "இலக்கியமும் சமூகவியலும்" (1991), "இலக்கியமும் உளவியலும்" (1991), "இலக்கியமும் மார்க்சியமும்" (1992) முதலியவை சி.இ. மறைமலையின் கோட்பாடுசார் நூல்களுள் சிலவாகும். ஒப்பியல் இலக்கியக் கொட்பாடுகளை விளக்கும் வகையில், தமிழண்ணலின் "ஒப்பியலிலக்கிய அறிமுகம்" (1973), வை. சச்சிதானந்தனின் "ஒப்பியல் இலக்கியம் ஓர் அறிமுகம்" (1985) முதலியவை இங்கு கவனிக்கத்தக்கன. மானிடவியல்சார் கோட்பாட்டு விளக்கமாக பக்தவத்சலபாரதியின் "பண்பாட்டு மானிடவியல்" எனும் நூல் அமைகின்றது. பெண்ணியக் கோட்பாடுகளை விளக்குவனவாக இரா. பிரேமாவின் "பெண்ணியம்" (1994), முத்து சிதம்பரத்தின் "பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்" (1995) எனும் நூல்கள் எழுந்தன. "பெண்ணியம்" என்ற கோட்பாட்டு நூலை எழுதிய இரா. பிரேமா, 1998இல் "பெண்ணியம் அணுகுமுறைகள்" என்ற நூலில் பல பயன்பாட்டுக் கட்டுரைகளைப் பதிவுசெய்துள்ளார். இவை அணுகுமுறை ஆய்வுகளாகக் கொள்ளப்படவேண்டியவையாகும். சுமார் இருபது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளுக்குமுன் ஒரு நாவற்படைப்பை அணுகியதற்கும், அதனைப் பெண்ணியநோக்கில் இன்று அணுகியதற்குமான வித்தியாசங்களை இக்கட்டுரைகளில் வெளிப்படுத்துகின்றார்.

"ஸ்ட்ரக்சுரலிசம் (அமைப்பியல் வாதம்)" (1982), "படைப்பும் படைப்பாளியும்" ஆகியவை தமிழவன் எழுதிய சில நூல்களாகும். முதல் நூலில், பின்னமைப்பியல், பின் நவீனத்துவம் ஆகியன பற்றிய குறிப்புகளும், அடுத்த நூலில் படைப்புக்கும். ஆசிரியருக்கும் உள்ள உறவு, பின் நவீனத்துவச் சிந்தனைகளை அறிமுகப்படுத்தல் என்பவையும் இடம்பெற்றிருக்கின்றன. திறனாய்வாளர் க. பூரணச்சந்திரன் எழுதிய "அமைப்பு மைய வாதமும் பின் அமைப்பு மைய வாதமும்" (1991), "தொடர்பியல் கொள்கைகள்", "தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறு", "தமிழிலக்கியத்தில் மேற்கத்தேயக் கொள்கைகளின் தாக்கம்" முதலிய நூல்கள் இங்கு அவதானத்திற்குரியன. கோவை ஞானி அவர்கள் 28 க்கும் மேற்பட்ட திறனாய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் மார்க்சியநெறி சார்ந்த இலக்கிய ஆய்வில் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஈடுபட்டவர். தமிழ் மரபையும் – மார்க்சியத்தையும் இணைத்து தமிழ் மார்க்சியத்தைப் படைத்துள்ளார். "மார்க்சியமும் தமிழிலக்கியமும்", "தமிழில் நவீனத்துவமும் பின் நவீனத்துவமும்", "தமிழிலக்கியம் இன்றும் இனியும்", "மார்க்சிய அழகியல்" முதலான சில நூல்கள் அவரின் திறனாய்வு சார்ந்த நூல்களில் முக்கியமானவையாகும். இவர் "மார்க்சியமும் தமிழிலக்கியமும்" (1988) என்ற நூலில், 'பழங்கவிதை முதல் புதுக்கவிதை வரை' என்ற தலைப்பில் 15 கட்டுரைகளை எழுதியுள்ளார். இதில் உள்ளடங்கும் 'வானம்பாடிகளின் வெளிச்சங்கள்' எனும் கட்டுரைப்பகுதியின் மூலம் புதுக்கவிதைகள் பற்றிய விமர்சனங்களை முன்வைக்கிறார். மேலும், இந்நூலில் 'தமிழ் நாவல் இலக்கியம்' எனும் தலைப்பில் உள்ள ஆறு கட்டுரைகள்மூலமும் மார்க்சிய அழகியல் பார்வையை வெளிப்படுத்தியிருப்பதையும் காணலாம். தமிழகச் சூழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் தமிழ்ச் சிந்தனைக்கேற்ப மார்க்சியத்தை முன்வைக்கவேண்டும் என்ற நோக்குடன் இக்கட்டுரைகளைப் பதிவு செய்துள்ளார் எனலாம்.

ராஜ்கௌதமன், மார்க்சிய எழுத்தாளர்களில் – அதுவும் தலித்தியம், பெண்ணியம் சார்ந்த எழுத்தாளர்களில் கவனத்திற்குரியவர். "எண்பதுகளில் தமிழ் கலாசாரம்" (1992), "தலித் பண்பாடு" (1993), "தலித்பார்வையில் தமிழ்ப்பண்பாடு" (1994), "தலித்திய விமரிசனக் கட்டுரைகள்" (2003), "பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ் சமூக உருவாக்கமும்" (2008), "பெண்ணியம்: வரலாறும் கோட்பாடுகளும்" ஆகிய நூல்கள் உட்பட ஏராளமான படைப்புக்களைத் தந்தவர் ராஜ்கௌதமன். இன்னும் எழுதிக்கொண்டிருப்பவர். "தலித் பார்வையில் தமிழர் பண்பாடு" என்ற நூலில் இவர், சங்ககாலத்தை மட்டும் எடுத்துக்கொண்டு "ஆதித்தமிழர் பண்பாடு, வைதீகமயமான தமிழ்ப் பண்பாடு, ஆதித்தமிழ்ப் பண்பாட்டில் பெண்" என்ற மூன்று பகுதிகளாக இந்நூலைக் கட்டமைத்துள்ளார். மூன்றாம் பகுதியில், பெண்ணியமும் – தலித்தியமும் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டவை என்பதை எடுத்துக்காட்டும் வகையில் கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளார் ராஜ்கௌதமன். அதுமட்டுமன்றித் "தமிழக தலித்தும் தமிழ் இலக்கியமும்" (1992) எனும் நூலினூடாகத் தலித்தியப் பண்பாட்டை விளக்குவதோடு, தலித்தியச் சிந்தனைகள் தமிழிலக்கியத்தில் எவ்விதம் பயிலப்பட்டு வந்துள்ளன என்பதைப் பேசுகிறார். "தலித் விடுதலை இயல்" (1992) எனும் நூலினூடாக தலித்தியச் சிந்தனை வரலாற்றைக் கூறுவதுடன், தலித் விடுதலைக்கான கருத்துக்களையும் முன்வைத்துள்ளார்.

பெண்ணெழுத்தாளர்களில் அம்பை, பூரணி, பாமா, வ. கீதா முதலானவர்கள் பெண்ணியம், தலித்தியம் போன்ற சிந்தனைத் தளங்களில் செயற்படுபவர்கள், திறனாய்வுக் கட்டுரைகள் எழுதுபவர்கள். "சிறகுகள் முறியும்" (1976), "பயணப்படாத பாதைகள்", "சொல்லாத கதைகள்" முதலான நூல்களைத் தந்தவர் அம்பை. தமிழ்த்திறனாய்வு உலகில் ஏராளமான நூல்களையும், கட்டுரைகளையும் எழுதிவருபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைவர் க. பஞ்சாங்கம். உயர்நிலைப் பட்டப்படிப்புகளில் இவரது நூல்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவரது பார்வையின் வீச்சும், திறனாய்வு பற்றிய புரிதலும் புதிய புதிய தளங்களிலான நோக்கும் உயர்வானவை. சங்க இலக்கியம்தொட்டு நவீன இலக்கியம்வரை ஆழ்ந்த புலமைபெற்ற இவர், தமிழ் நாட்டில் விரல்விட்டு எண்ணக்கூடிய மார்க்சிய மற்றும் பெண்ணியத் திறனாய்வுகளைப் மேற்கொள்பவர்களில் ஒருவராவார். குறிப்பாகச் சொல்லப்போனால் தமிழின் செவ்வியல் இலக்கியத்தளத்திலும், 19ஆம் நூற்றாண்டு தொடங்கி வளரும் தற்கால இலக்கியத் தளத்திலும், திறனாய்வின் வளர்ச்சிநிலை பற்றிய சரியான புரிதலுடன் ஆராயும் திறன் இவருடையது. மறுவாசிப்பு, பன்முகவாசிப்பு, ஒப்பிலக்கிய வாசிப்பு, கட்டுடைப்பு வாசிப்பு, நுண்ணரசியல் வாசிப்பு, தலித்திய வாசிப்பு, பெண்ணிய வாசிப்பு முதலிய தளங்களிலெல்லாம் தன்னுடைய எழுத்துக்களைப் பதித்துள்ளார். அவரின் திறனாய்வு புதிய கோட்பாட்டு நோக்கில் பயணிப்பதைக் காணலாம். சங்க இலக்கியத்தைக் கட்டுடைத்துப் பார்க்கும் பார்வை முக்கியமானதாகும். "சங்க இலக்கியப் பெண்பாற்புலவர்களின் கவிதைகள்", "பதிற்றுப்பத்தில் படிமம்", "சிலப்பதிகாரப் பிரதியும் அதிகார அரசியலும்", "காவியக் கட்டுமானத்திற்குள் வினைபுரியும் நுண் அரசியல்", "சிலப்பதிகாரமும் இலக்கியத் திறனாய்வும்", "சிலப்பதிகார உரையும் உள்ளோடும் நுண்ணரசியலும்", வள்ளுவரும் கார்ல்மார்க்சும்", "துன்பத்திற்கு யாரே துணையாவார்? – வள்ளுவம்", "தமிழ் இலக்கியச் சூழலில் பெண்ணியக் கோட்பாடுகள்", "பாரதியாரும் அரவிந்தரும்: கவிதை நெறியும் கடவுள் நெறியும்", "பாரதியாரின் குயில்பாட்டும் தங்கப்பாவின் ஆந்தைப்பாட்டும்", "பாரதி எழுத்தில் புதுச்சேரி வாழ்க்கை", "தமிழ்ப் புதுக்கவிதையின் வரலாற்றினை எழுதுதல்", "தமிழன்பன் கவிதைகளில் முரண் என்னும் இயங்கியல்", "காலனித்துவச் சூழலில் இலக்கியம் நிகழ்த்திக் காட்டும் அரசியல் – பி.எஸ். ராமையாவின் புனைகதைகளை முன்வைத்து", "மரபுக் கவிதைகளில் ஒடுக்கப்பட்டோர் நிலையும் மேம்பாடும்" முதலிய கட்டுரைகள் இவரின் திறனாய்வுப் புலத்தின் வெளிப்பாடுகளாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளன. 'இலக்கியம் என்னும் கருத்துலகத்தினுள் புகுந்து, மனிதர்களுக்கான ஒரு வெளியை எந்தத் திறனாய்வு உருவாக்கித் தருகிறதோ அதையே சிறந்த திறனாய்வு' என்னும் பார்வைநோக்கு இவருடையதாகும்.

"தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறு" (1990), "பெண் – மொழி – புனைவு" (1999), "இலக்கியத்தில் இருப்பியலும் திறனாய்வின் இயங்கியலும்" (2000), "ஒரு விமர்சகனின் பார்வையில்" (2004), "நவீனக் கவிதையியல் – எடுத்துரைப்பியல்" (2003), "தொன்மத் திறனாய்வு" (2005), "இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்" (2012), "தமிழில் திறனாய்வுப் பனுவல்", "பின்காலனித்துவக் கோட்பாட்டு நோக்கில் ஒரு நூற்றாண்டுத் தமிழிலக்கியம்" (2016), "புதிய வெளிச்சத்தில் தமிழிலக்கிய வரலாறு" (2017), "ஆய்வு நெறிமுறைகள்" (2017) முதலானவை பஞ்சாங்கம் எழுதிய திறனாய்வு நூல்களில் சிலவாகும். இவரின் "பெண்ணெனும் படைப்பு" (1994) எனும் நூலும், 'பெண்ணியத் திறனாய்வு' (1999) என்ற மொழிபெயர்ப்புக் கட்டுரையும் பெண்ணியக் கோட்பாடுகளை விளக்குவதுடன், பெண்ணியச் சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்லுவனவாகவும் காணப்படுகின்றன. இவரின் "தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறு" (1990) எனும் நூல், சில திறனாய்வாளர்களின் ஆய்வு முறையை வெளிப்படுத்திச் செல்வதைக் காணலாம். தற்காலத் திறனாய்வுப் போக்கினைச் சுட்டிச் செல்லும் இந்நூலில், தனிப்பட்ட இலக்கிய வகைமை பற்றிய ஆய்வுகள் தொகுக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கத்தக்கது. மேலும், சிலப்பதிகாரம் குறித்துப் பஞ்சாங்கம் வெளியிட்டிருக்கும் நூல்களில் "சிலப்பதிகாரத் திறனாய்வுகள் ஒரு பார்வை" (1993), "சிலப்பதிகாரம் சில பயணங்கள்" (2002) முதலிய நூல்கள் முக்கியமானவைகளாகும். அதில் "சிலப்பதிகாரத் திறனாய்வுகள் ஒரு பார்வை" (1993) என்ற நூல், அவரின் முனைவர் பட்டத்திற்குரிய ஆய்வாகும். அதில் பஞ்சாங்கம் அவர்கள், ஓர் இலக்கியம் பற்றிய திறனாய்வுகள், காலச் சூழலுக்கு ஏற்ப எங்ஙனம் மாறுபட்டுள்ளன என்பதைச் சிலப்பதிகார ஆய்வுகளினூடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கியுள்ளார். அதாவது, காலந்தோறும் சிலப்பதிகாரக் காப்பியத்தை எத்தகைய அரசியல், சமயக் கண்ணோட்டத்தில் நோக்கினார் என்பதும், தொடர்ந்து அக்காப்பியம் நிலவி வருவதற்கான காரணங்களும் பேசப்பட்டுள்ளன. இந்நூல் அமைப்பியல் அணுகுமுறையைச் சேர்ந்ததாகவே காணப்படுகின்றது. இவருக்கு மேலைத்தேயத் திறனாய்வுக் கோட்பாடுகளின் தாக்கம் அதிகமாகும். உளவியல், மானிடவியல், தொன்மவியல், அமைப்பியல், கட்டவிழ்ப்பியல், நவீனத்துவம், பின் நவீனத்துவம், பெண்ணியம், எடுத்துரைப்பியல் முதலிய கோட்பாடுகளைப் பயின்றதுடன் அவற்றை மொழிபெயர்ப்புச் செய்து தமிழிலும் வழங்கிய பெருமை சிறப்புக்குரியது. இவரின் "நவீனக் கவிதையியல்: எடுத்துரைப்பியல்" என்னும் நூல் தமிழ் அறிவுப் புலத்திற்குப் புதியதான அணுகுமுறையை அறிமுகப்படுத்தியுள்ளதெனலாம். இவரின் இம்முயற்சியைத் தொடர்ந்து இன்றுவரை எடுத்துரைப்பியல் பற்றிய பல ஆய்வுகள் நிகழ்ந்தவண்ணமுள்ளன.

கைலாசபதி அவர்களின் பகைப்புலத்தில் மார்க்சியத்தை விளங்கிக்கொண்டு திறனாய்வுத் துறையில் ஈடுபட்டு வந்தவர் கோ. கேசவன். பல படைப்பாக்கங்களுக்கான இவரது அணிந்துரைகள், மதிப்புரைகள் திறனாய்வு ரீதியாக மேற்கொள்ளப்பட்டவை. கேசவன் அவர்கள், "தமிழ்ச் சிறுகதைகளில் உருவம்" (1988) எனும் நூலில் 1917 – 1987வரை வெளிவந்த தமிழ்ச்சிறுகதைகளின் உருவத்தில் ஏற்பட்ட பல்வேறு போக்குகளை மதிப்பீடு செய்துள்ளார். சிறுகதை வடிவம், அதன் உள்ளடக்கத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது என்ற கருத்தை இதன்மூலம் முன்வைக்கின்றார். சிந்தனாபூர்வமான செல்நெறியில் மார்க்சியத்தை எளிமைப்படுத்திக் கொடுத்தவர் இவர். ஆரம்ப நிலையில் மார்க்சியத்தைக் கற்க விரும்புபவர்களுக்கு இவருடைய எழுத்துக்கள் முக்கியமானவை. இவர், "பின்நவீனத்துவத்தின் தத்துவமும் அரசியலும்" எனும் கட்டுரையில், பின்நவீனத்துவம் முன்வைக்கின்ற கருத்துக்களை விளக்கி, அவற்றின் முரண்பாடுகளையும் மார்க்சியத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுவிளக்கமாகவே சில கருத்துக்கள் அமைந்துள்ளதைச் சுட்டிக்காட்டும் தன்மையும் இங்கு அவதானிக்கப்பட வேண்டியதாகும் (காலக்குறி, மே – ஜூலை, 2000: பக்.32 – 51). மேலும். இவரின் "இயக்கமும் இலக்கியப் போக்குகளும்" எனும் நூலில், சமூக இயக்கத்திற்கு ஏற்ப, இலக்கியப் போக்குகளில் ஏற்பட்ட மாற்றங்களை இயங்கியல் பொருள்முதல்வாதத்தை அடிப்படையாகக்கொண்டு கேசவன் எழுதியுள்ளார்.

மேலே தரப்பட்ட எழுத்தாளர்கள் பற்றிய தகவல்கள் முடிந்த முடிவன்று. எடுத்துக்காட்டாக சிலபேரைப் பற்றியே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இரசனை இலக்கியத் தளம், வரலாற்று அறிவாராய்ச்சித் தளம் ஆகியவற்றுக்குப்பின், செல்வாக்குடையவையாகத் தமிழக இலக்கியத்துறையில் மார்க்சியத் தளம் விளங்குகின்றது. அதில் இயங்குபவர்கள் பற்றிய — அவர்களின் எழுத்துக்கள் பற்றிய கருத்து வேறுபாடுகள் காணப்படுவது உண்மையே ஆகும். சில வேளைகளில் மார்க்சியத்துக்கு அப்பாலும் அவர்களின் எழுத்துக்கள் சென்றுவிடுகின்றன. இருந்தும், மார்க்சியத் தளத்தில் கவனிப்புக்குரிய எழுத்தாளர்களாக, ஆரம்ப காலத்தில் திரு.வி.க, எம். சிங்காரவேலு, ஈ.வே.ரா. பெரியார், ப. ஜீவானந்தம், பாரதிதாசன், வெ. சாமிநாதசர்மா போன்றோரின் எழுத்துக்களை இனங்காண முடிகின்றது. இவர்களில் சிலர் பிற்காலத்தில் நிலைமாற்றம் அடைந்துள்ளனர். மார்க்சியத் திறனாய்வாளர்களில் கரிசனை காட்டிச் செயற்பட்டவர்களின் பட்டியலொன்றை க. பஞ்சாங்கம், தமது நூலில் (ப. 121) தந்துள்ளார்.

"மார்க்சியத் திறனாய்வில் பெரிதும் ஈடுபாட்டுடன் செயற்பட்டவர்களாக, ப. ஜீவானந்தம், சிதம்பரரகுநாதன், ஆர். கே. கண்ணன், சமரன் இஸ்மத்பாஷா, சரஸ்வதி விஜயபாஸ்கரன், மாஜினி, தி.க. சிவசங்கரன், எஸ். ராமகிருஷ்ணன், சி. கனகசபாபதி, நா. வானமாமலை, வெ. கிருஷ்ணமூர்த்தி, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, கோ. கேசவன், திசு. நடராசன், தோதாத்ரி, ஆ. சிவசுப்பிரமணியன், எம்.ஏ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நு.ஃ.மான், தமிழவன், ஞானி, எஸ். வி. ராஜதுரை, அ. மார்க்ஸ், ராஜ்கௌதமன், சாருநிவேதிதா, அக்கினிபுத்திரன், கே. முத்தையா முதலியோரைக் குறிக்கலாம். இவர்களுக்குள் பல தளவேறுபாடுகள், அவர்களுக்கிடையிலான மார்க்சியம் பற்றிய புரிதலிலுள்ள வேறுபாடுகளின் காரணமாக விளங்குகின்றன என்பதையும் மறந்துவிடக்கூடாது" (பஞ்சாங்கம். க, 2004: ப. 121).

மார்க்சிய எதிர்ப்பு நிலைப்பட்ட எழுத்தாளர்களில் வெங்கட்சாமிநாதன் முக்கியமானவர். 1960களில் விமர்சனத்துறையில் தலைதூக்கி நின்றவர். அவரது "எழுத்து" இதழில் எழுதிய கட்டுரைகள் இவரின் உருப்படியான விமர்சனப் படைப்புக்களை எதிர்பார்க்கலாம் என்ற எண்ணத்தினை ஏற்படுத்தியிருந்தன. சாமிநாதனுக்குத் தன்னுடைய சிந்தனை அடிப்படைகளை அமைத்துக் கொள்வதற்குச் சிறிய முன்மாதிரியாகச் செயற்பட்டவர் க.நா.சு என்றே கூறலாம். க.நா.சுவின் இயக்கமும் சாமிநாதனைத் திசை தெரிந்து செயற்பட வைத்ததும் இங்கு உற்றுநோக்கத்தக்கது. "பாலையும் வாழையும்", "பான்ஸாய மனிதன்", "இச்சூழலில் (கலாசார விமர்சனம்)", "கலைவெளிப்பயணங்கள்", "திரையுலகில் என் பார்வையில்", "சில கவிதைகள் நாவல்கள்", "ஓர் எதிர்ப்புக்குரல்", "காலத்தின் அங்கீகாரத்தை எதிர்நோக்கி" முதலிய திறனாய்வு நூல்கள் வெங்கட்சாமிநாதன் எழுதியதாகும். சி.சு. செல்லப்பா எழுதிய திறனாய்வு நூல்களில் "பி.எஸ். ராமையாவின் சிறுகதைப் பாணி", "எனது சிறுகதைகள்", "திறனாய்வு", "ந. பிச்சைமூர்த்தி கதையைப் பற்றி கருத்து", "மணிக்கொடி எழுத்தாளர்கள்" ஆகியவை அடங்கும். பிற்காலத்தில் குஜராத்தியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் எழுத்தாளரான திலீப்குமார், "மௌனியுடன் கொஞ்ச தூரம்" என்ற நூலை வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. தற்காலத்தில் வெங்கட்சாமிநாதன், அசோகமித்திரன் (அமரர்), க. பஞ்சாங்கம், ராஜ்கௌதமன், பொ. வேலுச்சாமி. அ. மார்க்ஸ், பா. மதிவாணன், த. முருகேசபாண்டியன், க. பூரணச்சந்திரன், பிரேம் – ரமேஷ், ஜமாலன் போன்றோர் திறனாய்வுத் துறையில் கரிசனைகாட்டி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகச் சொல்லப்போனால், க.பூரணச் சந்திரன், ந. முத்துமோகன், எம்.ஜி.சுரேஷ், நாகர்ஜுனன், யமுனா ராஜேந்திரன், எம்.டி. முத்துக்குமாரசாமி, அ.மார்க்ஸ், பிரேம் – ரமேஷ் முதலியோர் பின் நவீனத்துவம் குறித்த கொள்கைகளையும், மேலைநாட்டுப் பின் நவீனத்துவ வாதிகளின் கருத்துக்களையும் தொகுத்தளித்துள்ளமை இங்கு அவதானிக்கத்தக்கது. இது தொடர்பாக திறனாய்வாளர் ம. மதியழகன் அவர்கள்,

"பின்நவீனத்துச் சொல்லாடல்கள் முன்வைக்கும் திறனாய்வாளர்களில் பல்வேறு தள வேறுபாடுகள் உள்ளதையும் நினைவில் வைக்க வேண்டும். எஸ்.வி. ராஜதுரை அரசியல் – வரலாறு சார்ந்த நிலையிலும், அ.மார்க்ஸ் இவ்விரண்டோடு இலக்கியம் சார்ந்த நிலையிலும், தமிழவன் அமைப்பியல், குறியியல் கோட்பாடு மற்றும் பயன்பாட்டு நிலையிலும், ராஜ்கௌதமன் தலித்திய நிலையிலும், பிரேம் – ரமேஷ் சமூக, இலக்கிய நிலையிலும், ஜமாலன் அறிவியல் நோக்கு நிலையிலும் சிந்தித்து எழுதி வருகின்றனர் எனலாம். இவர்களன்றி நாகர்ஜுனன், ந. முத்துமோகன், ரவிக்குமார், எம்.டி. முத்துக்குமாரசாமி போன்றோரின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கவை. மேற்குறிப்பிட்டவர்களுள் பிரேம் – ரமேஷ் படைப்புநிலை, திறனாய்வுநிலை இரண்டிலும் கட்டுடைப்பு விமரிசனத்தை மேற்கொண்டு வருகின்றவர்கள் எனலாம்" (மதியழகன்.ம, 2009:ப.231) என்று "தமிழாய்வு – திறனாய்வு வரலாறு" எனும் நூலில் கூறியிருக்கும் கருத்துக்கள் அவதானிக்கப்படவேண்டியவையாகும். ஜமாலன், "காலக்குறி" இதழில் எழுதி வெளிவந்த, அமைப்பியல் சிந்தனைகளை உள்ளடக்கிய கட்டுரைகளோடு புதியவற்றையும் இணைத்து 2003ஆம் ஆண்டு "மொழியும் நிலமும்" என்ற நூலை வெளியிட்டிருந்தார். இங்கு தொல்காப்பியத்தின் இலக்கண முயற்சியை மொழிக்கட்டமைப்பிற்கான முயற்சியாகவே ஜமாலன் காண்கிறார். அந்நூலில் அமைந்துள்ள சில கட்டுரைகள், மனிதன் கையாண்ட தொழிநுட்பமான மொழியானது, பின்பு மனிதனையே எவ்வாறு கட்டமைக்கத் தொடங்குகிறது என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கியிருப்பதுடன், அவற்றினூடாகப் பின் அமைப்பியல் கோட்பாட்டுச் சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளன.

சமகாலத்தில் திறனாய்வுத் துறையில் பெண்ணியல் நிலை, தலித்து நிலை போன்றன பற்றியும், அமைப்பியல், பின்னமைப்பியல், கட்டுடைப்பு, நவீனத்துவம், பின்னவீனத்துவம் போன்ற பல்வேறு இசங்கள் – துறைகள் பற்றியும் கவனத்திற் கொள்ளப்பட்டு மேலைத்தேய இலக்கிய நடைமுறைகளை உள்வாங்கித் தமிழவன் போன்ற எழுத்தாளர்கள் திறனாய்வுத்துறையில் ஈடுபட்டு வருகின்றனர். அமைப்பியல் பற்றிய சிந்தனை 1990களில்தான் தமிழகக் கல்விசார் நிறுவனங்களில் எதிரொலிக்கத் தொடங்கியது. அவ்வாறே 'குறியியல்' குறித்த சிந்தனைகளும் அறிமுகப்படுத்தப்பட்டு, மொழி, பொருளைச் சுட்டாமல் குறியீடு செய்கிறது என்ற சிந்தனையானது, திறனாய்வுப் பார்வையின் போக்கையும் மாற்றிவருவதைக் காணமுடியும். அ. மார்க்ஸின் "உடைபடும் புனிதங்கள்" (1997), "உடைபடும் மௌனங்கள்" (1994) முதலிய இரண்டு நூல்களும் 'கட்டுடைத்தல்' என்ற பின்னமைப்பியல் நெறிமுறையை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளமை இங்கு அவதானிக்கப்பட வேண்டியவையாகும். அமைப்பியல், பின்னமைப்பியல் முதலியவை, தத்துவங்களையும் – மையங்களையும் விமர்சிக்க வந்தவைகளாகும். நவீனத்துவத்தின் சில அம்சங்களை இவை கேள்விக்குட்படுத்தின எனலாம். இதனால்தான் இவ்வாறான முறையைப் பின்நவீனத்துவம் என்கின்றனர். நவீனத்துவம் போன்று இதையும் ஒரு தத்துவமாக மாற்றிவிடக்கூடாது என்று அ.மார்க்ஸ் கூறும் கருத்தும் (பின்நவீனத்துவம், இலக்கியம், அரசியல், ப.07) இங்கு நோக்கப்படவேண்டியதாகும்.

தமிழகத்துத் திறனாய்வாளர்களினால் மரபு வழியான இலட்சியவாதம், மார்க்சிய வாதம் ஆகியவற்றுக்குப் புறம்பாகப் பிற்காலங்களில் நவீனத் திறனாய்வு முறைமைகளும் பின்பற்றப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. நூல் விமர்சனங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்பட விமர்சனங்கள், நாடக விமர்சனங்கள், அரங்க அளிக்கைகள் பற்றிய விமர்சனங்கள், இசை, நடனம், கூத்து விமர்சனங்கள் முதலான பல்துறைகளிலும் இவை மேற்கொள்ளப்பட்டு வருவதை சமகாலத்தில் அவதானிக்க முடிகிறது. இது அறாத்தொடர்புடன் 1930 களிலிருந்து இன்றுவரை முன்னெடுக்கப்பட்டு வருவது கண்கூடு. ஆனால் திறனாய்வாளர் பற்றியும், அவர்களது திறனாய்வு முயற்சிகள் பற்றியும் வாதப்பிரதிவாதங்கள் நிறையவே உண்டு. ஒருகாலத்தில் தருமு சிவராமுவுக்கும், வெங்கட்சாமிநாதனுக்கும் இடையேயான கருத்துப்போர்கள் கீழ்த்தரமாக அமைந்திருந்ததாகக் கூறப்படுவதுமுண்டு. அதேபோன்று திராவிட இயக்கம், அதற்கு எதிரான இயக்கங்கள் ஆகியவற்றுக்கிடையே நடந்த இலக்கிய மோதல்களும் முக்கியமானவை. தனிமனித உணர்வுகளை நையாண்டி செய்யும் விதத்தில் இலக்கியப் படைப்புகளுடன் தொடர்புபடுத்தி எழுதப்படும் விமர்சனங்கள் காலந்தோறும் வெளிவந்த வண்ணமே உள்ளன. 1961இல் வெளிவந்த "கப்பலோட்டிய தமிழன்" திரைப்படத்தில் இடம்பெற்ற பாடல்கள் அனைத்தும் மகாகவி பாரதியார் இயற்றியவைகளாகும். இப்பாடல்களுக்கு இசையமைத்தவர் இசைமேதை ஜி. ராமநாதன் அவர்கள். இப்படத்திற்கான விமர்சனம் எழுதிய வெகுசனப் பத்திரிகையொன்று, பாடல்களின் இசை சரியில்லை என்று எழுதியிருந்தது. இதை அறிந்த இசையமைப்பாளர் மிகவும் மனவருத்தம் அடைந்ததாக அக்காலத்தில் பத்திரிகைகள் எழுதின. ஆனால் இன்றுவரையும் அப்பாடல்களும், இசையும் சாகாவரம் பெற்றதாக விளங்குவதைக் காணமுடிகிறது.

ஒருமுறை இசை விமரிசகர் சுப்புடு அவர்கள், நடிகை ஹேமமாலினியின் நடன நிகழ்ச்சி பற்றி விமர்சனம் எழுதுகையில், பூப்பந்து பறிப்பதுபோல அவரது நாட்டியம் காணப்பட்டது என எழுதியிருந்தார். இதுவும் குறித்த நடிகையை மனவருத்தத்திற்கு ஆளாக்கியதுடன், சுப்புடு மீதான எதிர் விமர்சனத்திற்கும் இடமளித்தது. அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆக்க இலக்கியகாரர்களாகச் செயற்படும்போது அக்கட்சிக்கு மாறானவர்கள் 'ஆட்டத்தைப் பார்க்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளைப்பார்த்து' படைப்பாக்கங்களை விமர்சிக்கும் போக்கு தமிழ்நாட்டில் பெருமளவிற்கு மாறவேயில்லை. திரைப்பட இரசனை முறையிலும் திறைனாய்வாளர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. மிகவும் வெற்றிபெற்ற திரைப்படம், தரங்குறைந்ததாக திறனாய்வாளர் கூறும்போது, அவர்களால் விதந்தோதப்படும் திரைப்படம் படுதோல்வி அடைந்ததையும் காணமுடிவது யதார்த்தமாகும். கலைஞர்களைப் பொறுத்தவரையில்கூட அவர்களது கலைப்பணிக்கான விருதுகள், பட்டங்கள் வழங்கப்படுவதுபற்றி நீண்டகாலமாக விமர்சனங்கள் உள்ளன. இந்திய நடுவண் அரசு வழங்கும் சிறந்த நடிகருக்குரிய தேசிய விருதான 'பாரத்', "ரிக்ஷாக்காரன்" (1971) திரைப்படத்திற்காக எம்.ஜி.ஆருக்கு வழங்கப்பட்டதும், இதுவரை நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு வழங்கப்படாமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதேபோன்று 1968ஆம் ஆண்டுக்குரிய திரைப்படக் கலைஞர்களுக்குரிய விருதுகளைத் தமிழக அரசு வழங்கியபோது, சிறந்தபடமாகச் சிவாஜி நடித்த "தில்லானா மோகனாம்பாள்" படம் தெரிவுசெய்யப்படாது, எம்.ஜி.ஆர் நடித்த "குடியிருந்த கோயில்" தெரிவுசெய்யப்பட்டமை அரசியற் காரணிகளால் ஏற்பட்டதென விமர்சனம் எழுந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். வெகுஜன வார இதழான "ஆனந்த விகடன்" 1970களில் சோ, சுரதா, கொத்தமங்கலம் சுப்பு போன்றவர்களைக்கொண்டு கவிதைத் தர்க்கமொன்றினை நடத்தியிருந்ததும், அது கவிதை பற்றிய விமர்சனங்கள் கவிதை வடிவில் சிரிக்கவும், சிந்திக்கவும் கூடியதாக சிலவாரங்கள் இடம்பெற்றதும் இங்கு கவனத்திற்குரியதாகும்.

## 2.10. சமகாலத் திறனாய்வு பற்றிய நோக்கு

மிகவும் சிறந்த, கவனத்திற்குரிய படைப்பாக்கங்கள் கவனிக்கப்படாமலும், மக்களைச் சென்றடையாமலும் போய்விடுகின்றன. ஒரு குறுகிய எல்லைக்குள் அவை அடைபட்டும் போகின்றன. ஆனால் சாரமற்ற இலக்கியப் புனைவுகள் பல மக்கள் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசாரப்படுத்தப்பட்டுப் பிரபல்யம் பெறுகின்றன. ஒருதலைப்பட்சமான திறனாய்வுகள் அவற்றைத் தூக்கி நிறுத்திவிடுகின்றன. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்பதற்கிணங்க மாற்றங்கள் சகல துறைகளிலும் வரவேற்கப்பட வேண்டியன. இருப்பினும் சமூகப்பயன்பாடில்லாத மாற்றங்கள் வீணானவையாகும். கருத்தியல் ரீதியான இலக்கியத் திறனாய்வுப் போர்கள் பயன்தர வேண்டுமானால் அவை சமூகப் பயன்பாடு உடையனவாக மனிதகுலம் தழுவிய மேன்மைக்கு உதவவேண்டும்.

இதனையே அழகியல் திறனாய்வாளர்களும், மார்க்சியத் திறனாய்வாளர்களும், ஏனைய திறனாய்வாளர்களும் கடைப்பிடிக்க வேண்டும். விமர்சனத்தை மேற்கொள்ளும்போது, கா. சிவத்தம்பி அவர்கள் பின்வரும் விடயங்களை வலியுறுத்துகிறார்.

- படைப்பினை விளங்கிக் கொள்வதற்கான தயார்நிலையுடன் (உ.ள. புலமைத் தொழிற்பாடுகளுடன்) இருத்தல்
- படைப்பையும், சூழலையும் (பின்புலத்தையும்) விளங்கிக் கொள்ளுதல்.
- படைப்பினை நுண்ணிதாக நோக்கி, அதன் அமைவு நெறியினை விளங்கி, அதன் அமைவுறவுகளைத் தெளிவுபடுத்துதல்.
- மேற்கூறியவற்றின் வழியாக, படைப்பின் பிழிவினை விளங்கிக்கொள்ளுதல் (சிவத்தம்பி.கா, 2001: ப.43).

திறனாய்வின் பயன்பாட்டை முழுமையாகப் பெறுவதற்கான அடிப்படைத் தேவையாக அமைவது, திறனாய்வை முறைமையாகச் செய்வதேயாகுமென பேராசிரியர் கா. சிவத்தம்பி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மேற்குலக நாடுகளில் நுட்பதிட்பம் வாய்ந்த செழுமைபெற்றுவிட்ட இலக்கிய விமர்சனம் தமிழகத்தில் தனியொரு அறிவுத்துறையாகிவிட்டது. தத்துவம், வரலாறு, மொழியியல், மானிடவியல், இலக்கியவியல், அறிவியல் முதலான பல்துறை அறிவும் ஒருங்கிணைந்த அறிவுத்துறையாகி விட்டது. ஆனாலும் தமிழில் இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம் இன்று ஆரோக்கியமானதாக இல்லையென்றே சொல்லத் தோன்றுகின்றது. அது இன்னும் வளர்க்கப்பட வேண்டியதாயிற்று. ஒரு படைப்புப் பற்றிப் பல வமர்சனங்கள் எழுதும்போதுதான் அப்படைப்பாசிரியரின் மறு படைப்பு சிறப்புடையதாக எழுகின்றது. இதனால் உளவியல். சுயானுபவ, தூய இலக்கியம், மார்க்சிய நெறி, மார்க்சிய எதிர்ப்பு நெறி, அலசல், நல்லன மட்டும் கண்டு சொல்லல், குறை மட்டும் உரைத்தல், பிற இலக்கிய ஒப்பீடு முதலிய பார்வை நோக்குகளை உடைய விமர்சனங்களை நாம் அதிகம் காணமுடியும். இது மட்டும் விமர்சனம் அல்ல. இலக்கியத்தினைச் செழுமைப்படுத்துவதற்கு எவ்வளவு தூரம் உண்மையான, நடுநிலையான விமர்சனத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்குடைய விமர்சகர்கள் உருவாக வேண்டும். அப்போதுதான் விமர்சனம் சிறப்புடையதாகும். விமர்சனம் வெறும் வியாக்கியானமாக அமையக்கூடாது. அது புதிய பார்வையிலான படைப்புக்களை உருவாக்க வேண்டியதாக அமைய வேண்டும்.

## 2.11. முடிவுரை

நிகழ்கால இலக்கியங்களை விமர்சனம் செய்வது சிக்கலும், சிரமங்களும் நிறைந்ததாகி விட்டதைக் காணமுடிகின்றது. மனக்கசப்பான விடயமாகவும் இருக்கின்றது. உண்மையான விமர்சனங்களை மேற்கொள்ளும் பட்சத்தில், இந்தக் கடின முயற்சிக்குத் தலைகொடுப்போர் பெரும்பாலும் படைப்பாளிகளின் வெறுப்பிற்கும், பல நேரங்களில் தொல்லைகளுக்கும் ஆளாக நேரிடுகின்றது. தமிழகத்தில் சமகாலத்தில் சிற்றிதழ்கள்சார் திறனாய்வுச் செயற்பாடுகள் குறைந்து வருவதைக் காணமுடிகின்றது. ஆனாலும் ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் பற்றிய திறனாய்வு முயற்சிகளே இப்போது அதிகம் வெளிவந்து கொண்டிருப்பதையும் காணமுடிகின்றது. அதுமட்டுமன்றித் திறனாய்வு முயற்சிகள் பல்வேறுபட்ட நோக்கு நிலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதைத் தற்காலத்தில் அவதானிக்க முடிகின்றது. மார்க்சியச் சிந்தனைகள், உளப்பகுப்புச் சிந்தனைகள் முதலியவற்றினைச் சார்ந்ததாகத் திறனாய்வுச் செயற்பாடுகள் நடைபெறத் தொடங்கியுள்ளன. பின்னைய – நவீனத்துடன் ஒன்றியதான திறனாய்வுப் போக்குகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களைத் தீர்ப்பாளர்களாகக்கொண்ட விமர்சனமரபும் இன்று எழுச்சிபெற்றுள்ளது. மொழியியல் ரீதியான ஆய்வுகளும், அமைப்பியல் மற்றும் பின்னை – அமைப்பியல் ரீதியான திறனாய்வு முயற்சிகளும் தற்போது இடம்பெற்று வருவதைக் காணலாம். அதுமட்டுமன்றிப் பின் – காலனியம், பெண்ணியம், சூழலியல் ரீதியான ஆய்வு முயற்சிகளும் நடைபெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. ஈழத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் வளர்ச்சிப் போக்கு

## 3.1. அறிமுகம்

ஈழத்து நவீன தமிழிலக்கியத் திறனாய்வு என்பது, சமகால இலக்கியம் பற்றியது மட்டுமன்றிப் பழந்தமிழ் இலக்கியங்களின் புனர் மதிப்பீடுகளையுமே குறிக்கின்றது. இத்தகைய ஈழத்துத் தமிழ் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சியில் ஈழத்து இலக்கண – இலக்கிய உரைகாரர்கள், பத்திரிகை – சஞ்சிகைகளுடன் தொடர்புடைய அழகியல்வாத விமர்சகர்கள், சமூக – மார்க்சிய – முற்போக்கு விமர்சகர்கள், முற்போக்கை ஆதரித்தும் – எதிர்த்தும் நின்ற ஆக்க இலக்கிய விமர்சகர்கள், பல்கலைக்கழக வழிவந்த – கல்விப் பயிற்சி வழி இலக்கிய விமர்சனத்தைத் தமது ஆய்வுத்துறையாகக் கொண்ட விமர்சகர்கள் முதலானோரின் பங்கு முக்கியமானதாகும். 'விமர்சனம்' என்ற வட சொல்லிற்கு ஏற்புடைய தமிழ்ச்சொல்லாகத் 'திறனாய்வு' என்பது வழக்கில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 3.2. உரையாசிரியர் மரபும் இரசனைமுறைத் திறனாய்வும்

பண்டைய தமிழ் இலக்கிய – இலக்கண நூல்களுக்கான உரையாசிரியர்களின் விளக்கவுரைகள், அவர்களின் அறிவுக் கொள்ளளவுக்கு எற்பவும், இரசனைத் திறனுக்கு ஏற்பவும், விளக்கி உரைக்கக் கூடிய ஆற்றலுக்கேற்பவும் அமைந்திருந்தன. கோயில்களில் நிலைபெற்றிருந்த புராணபடன மரபும் இதனைப் பின்பற்றியே எழுந்தது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் தொடக்கிவைத்த பிரசங்க மரபும், பின்னர் கோயில்களில் மேற்கொள்ளப்பட்ட புராணபடன மரபும் இணைந்ததான ஒரு பாரம்பரியத்தை அறியமுடிகின்றது. பிரசங்கங்களின்போது, சில பாடல்களுக்கு விளக்கம் தந்து, பக்தி இரசனையை ஊட்டும் விதமான அணுகுமுறைகள் கையாளப்பட்டன. புராணபடனத்தின்போது, புராணத்தை ஒருவர் படிக்க, இன்னொருவர் அதற்கான உரையினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகையில் இரசனை முறையில் எங்கெங்கு விளக்கங்கள் கொடுக்கப்படவேண்டுமோ, எவ்விடங்களில் பாடலின் பொருளை மையப்படுத்தி அதிலுள்ள சுவையை வெளிக்காட்ட வேண்டுமோ, அவற்றைச் செய்வார். தமது அனுபவமும், மொழியாளுமையும் ஒன்றுசேர, கூடியிருந்த புராணபடனம் கேட்கவந்திருந்த கூட்டத்தைக் கவனத்திற்கொண்டு எளிமை மிகுந்த மொழிநடையில், கடினமான பாடல்களையும் பதம்பிரித்து, பொருளுரைத்து மக்கள் மனங்களில் நிலைநிறுத்தும் முயற்சியில் ஈடுபடுவார்.

இதற்கு மறுதலையாக ஈழத்தமிழ் உலகில், கிறிஸ்தவப் பாரம்பரியத்தை அடியொற்றிய விமர்சனம் சார்ந்த முயற்சிகளும் தமிழில் மேற்கொள்ளப்பட்டன. கிறிஸ்தவத் தேவாலயங்களில் பிரார்த்தனைகளின்போதும், பிரசங்கங்களின்போதும் குருவானவர்கள் தமது மதத்தின் பெருமையை எடுத்தோதுவதுடன், சுதேசிய மதங்களின் அடிப்படைக் கருத்துக்களை நாசூக்காகவும், வெளிப்படையாகவும் விமர்சிக்கத் தவறுவதில்லை. இதன் பின்னணியிலேயேதான் ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை போன்றவர்களால் சைவமதத்திற்கு எதிரான கண்டனப் பிரசுரங்களும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்றவர்களால் கிறிஸ்தவ மதத்திற்கு எதிரான கண்டனப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. இத்தகு சூழ்நிலையில் சைவசமயத்தைச் சார்ந்து புராணபடன மரபைத் தொடக்கி வைத்தவர் வித்துவசிரோன்மணி ந.ச. பொன்னம்பலபிள்ளை (1837 – 1897) ஆவார். இவரது வழியில் உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர், வல்வை வைத்தியலிங்கம்பிள்ளை, வித்துவ சிரோன்மணி. சி. கணேசையர், பண்டிதர் சு. அருளம்பலவனார் முதலியோர், இலங்கை சுதந்திரம் அடைவதற்கான காலம்வரை செயற்பட்டு வந்தனர். திருச்செந்தூர் புராண ஏடுகள் கிழக்கிலங்கை மண்டூரில் கண்டெடுக்கப்பட்ட பின்னர், மண்டூர் முருகன் தலமானது, திருச்செந்தூர் புராணம் ஓதும் இடமாகவும், புராணபடனம் நிழும் இடமாகவும் மாறியிருந்தது. புலவர்மணி. ஏ. பெரியதம்பிப் பிள்ளையவர்கள், இதுபற்றிக் கட்டுரை ஒன்றையும் எழுதியுள்ளார். உரைமரபினர், மற்றும் புராணபடன மரபினரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்நெறியானது இரசனை முறைத் திறனாய்வை அடிப்படையாகக் கொண்டது. விளக்கமுறைத் திறனாய்வையும் அதற்குத் துணையாகக் கொண்டமைந்ததுமாகும்.

இவற்றுக்கு அப்பால், பொன்னம்பலபிள்ளையைப் பின்பற்றி இரசனை முறையிலும், விளக்கமுறையிலும் செயற்பட்ட குருகவி ம.வே. மஹாலிங்கசிவம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆகியோரைப்பற்றியும் நோக்க முடியும். 1923இல் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை ஆரம்பிக்கப்பட்டவுடன், அதன் முதற்றமிழ்ப் பேராசானாக குருகவி மஹாலிங்கசிவம் அவர்கள் நியமனம் பெற்றார். அவரிடம் பண்டிதர் கா.பொ. இரத்தினம், பேராசிரியர் சிவத்தம்பியின் தந்தையார் கார்த்திகேசு ஆசிரியர், பண்டிதர் சு. அருளம்பலவனார், வித்துவான் சி. ஆறுமுகம் போன்ற தமிழறிஞர்கள் பலர் தமிழைக் கற்றுக் கொண்டார்கள். தமிழிலக்கியத்தை அவர் கற்பிக்கும் திறன் பற்றியும், கவிதை, உரைநடை போன்றவற்றை அவர் விமர்சிக்கும் ஆற்றல் பற்றியும், அவருடைய மாணவர்கள் பல கட்டுரைகளில் விதந்து போற்றியுள்ளனர். அதேபோன்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், குருகவியிடம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பாடங்கேட்டவர். 1928 ஆம் ஆண்டுமுதல் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையில் சுமார் 35 ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார். நூற்றுக்கணக்கான சைவாசிரியர்களை உருவாக்கினார். கந்தபுராணக் கலாசாரமே, யாழ்ப்பாணத்தின் கலாசாரமெனக் கூறினார். கம்பராமாயண இரசனையை மேம்படுத்தியவர். பெருமளவிற்கு இவரது கட்டுரைகளும், நூல்களும் மணிப்பிரவாளம் கலந்து அமைந்திருந்தாலும் ஒவ்வொரு கட்டுரையிலும் இரசனைத் தன்மையும், அவற்றை எடுத்துரைக்கின்ற சிறந்த விளக்கவுரைப் பண்பும் கலந்து விளங்குகின்றது.

திறனாய்வு என்பதற்கு இலக்கிய வழியாக இவர் இரசனை முறையையே தேர்ந்தெடுத்தார் எனலாம். பண்டிதமணியின் பரம்பரையொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலமாக ஈழத்தில் தமிழ் மரபைப் பேணி நின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பரம்பரையின் கடைசிக் கொழுந்தாகப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை விளங்குவதைப்போல, பண்டிதமணியின் பரம்பரையும், ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், பண்டிதை பொன். பாக்கியம், பண்டிதர் க. சிதம்பரப்பிள்ளை முதலானவர்களுடன் முற்றுப்பெற்றுவிட்டதுபோல் தெரிகிறது. ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக இருந்த பண்டிதமணி பொ. கிருஷ்ணபிள்ளையின் மாணவர்களும்கூட இரசனைமுறைத் திறனாய்வை வளர்த்து வந்துள்ளனர். இவர்களுடன் வடமாநில வித்தியாதிபதியாக இருந்த க.ச. அருள்நந்தி, தமிழறிஞர் பண்டிதர். கா.பொ. இரத்தினம், அரசவெளியீட்டுத் திணைக்களத்தில் உயரதிகாரியாக இருந்த அ.வி. மயில்வாகனம், உயர் கல்வி வித்தியாதிபதியாக இருந்த முகாந்திரம். தி. சதாசிவஐயர், வித்துவான் க. வேந்தனார் முதலியோரும் இரசனைமுறைத் திறனாய்வின் வழிவந்தவர்களாவர். இவர்களது இலக்கியப் படைப்புகளும் இதனையே வெளிக்காட்டி நிற்கின்றன.

ஈழத்து இரசனைமுறை விமர்சன வளர்ச்சியிலே திருப்பத்தை ஏற்படுத்தியவர் கனகசெந்திநாதன். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் மரபினருள் ஒருவராகவும், அவரது மாணவராகவும் விளங்கியவர் இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்கள். இவர் பழைமையையும், புதுமையையும் இலக்கியத் துறையில் வரவேற்று நின்றவர். யாழ் இலக்கிய வட்டத்தினை உருவாக்கி அதன் தலைவராகவும் நீண்ட காலம் பணியாற்றியவர். "ஈழகேசரி"ப் பத்திரிகையில் 'ஈழத்துப் பேனா மன்னர்கள்', 'ஈழத்து ஒளிவிளக்குகள்' என்னும் கட்டுரைகளைத் தொடராக எழுதியதன்மூலம் ஈழத்துத் தமிழ் இலக்கிய ஆளுமைகளை விமர்சன ரீதியாக அறிமுகம் செய்தவர். ஈழத்து இலக்கிய வரலாற்றிலும் கூர்மையான பார்வைகொண்டு அக்கறை செலுத்தியவர். "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" (1961) என்னும் நூலினை முதன்முதல் எழுதி, ஈழத்தமிழ் வரலாற்றை எழுதுபவர்களுக்கு வழிகாட்டியவர். இந்நூலில் ஈழத்தமிழ் எழுத்தாளர்களைப் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புக்கள் விமர்சன ரீதியாகச் சுருக்கமாக முன்வைக்கப்பட்டிருந்தன. முதன்முதலாகத் தனிப்பட்ட ஆளுமைகளை அத்தகு விமர்சன நோக்கில் அணுகித் தனி நூல்களாக வெளிப்படுத்தியவரும் கனகசெந்திநாதனே. பண்டிதமணி கணபதிப்பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப்புலவர், அல்வாயூர் மு. செல்லையா ஆகியோர் பற்றித் தனித்தனி நூல்கள் எழுதியுள்ளார். இளம் எழுத்தாளர்களையும் விமர்சகர்களையும் இனங்கண்டு, கவனத்திற்குரிய விமர்சனத் தொடர் குறிப்புகளை முதன்முதலில் எழுதியவரும் அவரே. நமது இலக்கிய இரசனையும் அதன் மதிப்பீடும் நமது மண்ணிலேயும் தமிழ் நெஞ்சங்களிலேயும் வேரூன்றிய மரபிலே நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்று, ஆணித்தரமாகக் குறிப்பிட்டு அதனை இனங்காண முற்பட்டவர் கனகசெந்திநாதன். சிறுகதையாசிரியராகவும், நாவலாசிரியராகவும். விமர்சகராவும் விளங்கிய இவர், இரசனை இலக்கியவாதப் போக்குடையவரானாலும், நவீன இலக்கியங்களிலும், நவீன திறனாய்வு முறைகளிலும் அக்கறை கொண்டவர். இலக்கிய விமர்சனம் என்பது வேறு, இரசனை என்பது வேறு என்ற தெளிவு கனகசெந்திநாதனிடம் காணப்பட்டது என்பதும் விதந்துரைக்கப்படவேண்டியதே. அதுமட்டுமன்றி, ஈழத்துத்தமிழ் உரைநடை மரபில் 1940 களில் இருந்து பண்டிதர் சோ. இளமுருகனார், அவரது துணைவியார் பண்டிதை பரமேஸ்வரி இளமுருகனார், போன்றவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

## 3.3. வரலாற்றுமுறைத் திறனாய்வைப் பேணியவர்கள்

இரசனைமுறைத் திறனாய்வுடன் வரலாற்றுமுறைத் திறனாய்வையும் பேணிய இலங்கைத் தமிழறிஞர்கள் சிலரை அடையாளங்காண முடிகின்றது. வரலாற்றுமுறை வழிநின்று தங்கள் இரசனைக்கு ஏற்ப நூல்களை ஆராய்ந்து ஒப்புநோக்கி எழுதியவர்களில் சைமன்காசிச்செட்டி, சுவாமி விபுலாநந்தர், ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை ஆகியோர் முன்னோடிகளாவர். சைமன்காசிச் செட்டி எழுதிய "தமிழ்புளூராக்" (1856) ஆங்கில நூலானது, தமிழ்ப்புலவர்களைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்து எழுதப்பட்ட முதற்றொகுதியாக அமைந்தது. இதனைப் பின்பற்றி நானூற்றுக்கு மேற்பட்ட புலவர்களைப் பற்றியும், அதிலும் நாற்பது ஈழத்தமிழ்ப் புலவர்களைப் பற்றியும் உள்ளடக்கி ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை எழுதிய நூல்தான் பாவலர் சரித்திரதீபகம் (1896) ஆகும். இந்த நூலானது வரலாற்றுமுறைத் திறனாய்வின் குணாம்சங்களைக் கொண்டிருந்ததெனக் கருதமுடியும். சுவாமி விபுலாநந்தரவர்கள் மகாகவி பாரதியாரை ஒப்பியல் ரீதியான விமர்சனங்களுடன் அவரைத் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அத்துடன் 'மேற்றிசைச் செல்வம்', 'எகிப்திய நாகரிகம்', 'கிரேக்க நாகரிகம்', 'யவனபுரத்துக் கலைச்செல்வம்' முதலான கட்டுரைகள்மூலம் மேலைத்தேய இலக்கிய வரலாற்றையும், தமிழிலக்கிய வரலாற்றையும் ஒப்புநோக்கி, வரலாற்றுமுறைத் திறனாய்வின் அடிப்படையிலும், இரசனைமுறைத் திறனாய்வு அடிப்படையிலும் பல கட்டுரைகளை எழுதியிருந்தார். அந்தக்காலத்தில் திறனாய்வு முறைபற்றிய நவீனகாலப் புரிதல்கள் இல்லாவிடினும் விபுலாநந்தர் மேற்கொண்ட பணியானது மிகவும் நுண்ணியமான இலக்கிய வரலாற்று ஆய்வுகளோடும், இலக்கிய ரசனையோடும் தொடர்பு பட்டதாகும். வில்லி பாரதத்தில் வரும் இலக்கியக் காட்சிகளைக் கிரேக்கக் கவிஞரான ஹோமரின் படைப்புக்களோடு ஒப்பிட்டு நோக்கும் முன்னோடிப் பார்வையை நாம் விபுலாநந்தரிடம் காணலாம். 'ஐயமும் அழகும்' (செந்தமிழ், தொகுதி 38, 1940), 'வண்ணமும் வடிவும்' (செந்தமிழ், தொகுதி 38), 'நிலவும் பொழிலும்', 'கவியும் சால்பும்' (1941), 'யாழ் நூல்', 'இயலிசை நாடகம்', 'உலக புராணம்' முதலிய அவரது கட்டுரைகள் தமிழியல் சார்ந்த கூறுகளை அலசி ஆராயும் இயல்புடையன.

வரலாற்றியல் ஆய்வு முறையில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், "சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி", "யாழ்ப்பாணச் சரித்திரம்", "யாழ்ப்பாண வைபவ விமர்சனம்" முதலிய நூல்களையும், ஆய்வறிவியல் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். 1928ஆம் ஆண்டு இவர் எழுதி வெளிவந்த "யாழ்ப்பாண வைபவ விமர்சனம்" என்னும் நூல், ஏற்கனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சன்மார்க்க போதினி" எனும் பத்திரிகையில் வெளிவந்திருந்தது. இதில் 13 பிரிவுகளாக ஆதி யாழ்ப்பாணத்தின் வரலாறும், யாழ்ப்பாண வைபவமாலை நூலின் உட்செறிவும், விமர்சன ரீதியாக முன்வைக்கப்பட்டுள்ளது. தமிழக இலக்கிய வரலாற்றில் 1944ஆம் ஆண்டு பேராசிரியர் ஆ. முத்துசிவன் என்பவர், "விமரிசனம்" என்ற சொல்லை முதன்முதலாகப் பயன்படுத்தினார் எனக் கூறப்படுகின்றது. ஆனாலும் இச்சொல்லினை 1928இல் சுவாமி ஞானப்பிரகாசர் பயன்படுத்தியுள்ளார் என்பது இங்கு நோக்கத்தக்கதாகும். இதே போன்று 'தமிழில் இலக்கிய விமர்சனம்' எனும் கட்டுரையை "ஈழகேசரி" எனும் இதழில் 21.10.1945 இல் எழுத்தாளர் சோ. சிவபாதசுந்தரம் எழுதியிருப்பதும் இங்கு கருதத்தக்கதாகும். ஓர் இலக்கிய விமர்சனம் எவ்வாறு அமையவேண்டும் என்பதை அவர் குறிப்பிடுகையில்,

"இலக்கியக் கலையை ஆராய்பவர்கள் காய்தல், உவத்தல் என்ற இரு குணங்களையும் தூரத்தே கட்டிவைத்துவிட்டு ஆராய்தல் வேண்டும். சின்ன உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தா விட்டால் நடுநின்று ஆராயமுடியாது. இலக்கியக் கலைக்கு இன்றியமையாத பண்பு கலை – இலட்சணங்களை வைத்துக்கொண்டு, அவற்றைக் கருவியாகக் கொண்டு சமன்தூக்க வேண்டும். அதுதான் உண்மையான ஆராய்ச்சி. கலை ஆராய்ச்சிக்கு அளவுகோல் இல்லை என்று வாதாடுவது ஒப்புக் கொள்ளத்தக்கதல்ல. எந்தவொரு ஆராய்ச்சிக்கும் அடிப்படையான சில ஆதாரவிதிகள் இருக்கின்றன. ஆதார அளவில்லாமல் மதிப்பு என்ற முயற்சி நடைபெற முடியாது. பண்பாடுள்ள தமிழிலக்கியத்திற்கும் ஆதார பண்பாடொன்று இருக்கிறது. அதனைக் கொண்டே எல்லா இலக்கியச் சிருஷ்டிகளையும் அடையவேண்டும். அங்ஙனமின்றி ஒவ்வொருவர் மனப்போக்கின்படியும் அவ்வப்போது அவர்களின் மனதிலே இருக்கும் சந்தர்ப்பத்தில் ஓர் குறித்த இலக்கியம் என்ன சுவையைத் தருகிறது, என்று அளவுகொள்ளுதல் இலக்கிய ஆராய்ச்சி ஆகாது" (ஈழகேசரி, 21.10.1945) என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய ஆராய்ச்சி, இலக்கிய விமர்சனம், இலக்கிய மதிப்பீடு யாவும், ஒருமித்த ஆனால் வேறுபாடுள்ள விடயங்கள். சோ.சி.யின் கூற்றுப்படி இலக்கிய விமர்சனப் பண்புகள் அதன் ஆதார விதிமுறைகளுக்கு அமைவாக இடம்பெற வேண்டியுள்ளது. வரலாற்றுமுறைத் திறனாய்வின் வழிநின்று செயற்பட்டவர்களில் மகாவித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராசா அவர்களும் ஒருவர். இவரது "மட்டக்களப்பு மான்மியம்", "காரைநகர் மான்மியம்", "ஈழத்துத் தமிழ்நூல் வரிசை" முதலான நூல்கள் இதற்குத் தக்க உதாரணங்களாகும்.

### 3.4. "ஈழகேசரி"ப் பத்திரிகை

1930 – 1958 வரையுள்ள காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் குரும்பசிட்டிக் கிராமத்திலிருந்து நா. பொன்னையா என்னும் தமிழ்ப்பற்றுடையவரால் வாரந்தோறும் வெளியிடப்பட்ட "ஈழகேசரி" என்னும் பத்திரிகையே முதன்முதலில் தமிழிலக்கிய வளர்ச்சிக்கும், திறனாய்வுத்துறைக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றியது எனலாம். இப்பத்திரிகை தொடங்கிய காலப்பகுதியில் "வீரகேசரி", "தினகரன்" முதலான தேசியப் பத்திரிகைகள் தொடங்கப்பட்டுத் தினசரிகளாக இன்றும் வெளிவந்தவண்ணமே உள்ளன. ஆனால், "ஈழகேசரி"யின் ஆயுள் 28 ஆண்டுகளில் முடிந்துவிட்டது. ஆரம்பத்தில் திரு. நா. பொன்னையாவும், பின்னர் அ.செ. முருகானந்தம், சோ. சிவபாதசுந்தரம், கு. முத்துக்குமாரசுவாமி, ச. நமசிவாயம், இராஜ.அரியரத்தினம் போன்றோரும் ஆசிரியர்களாக இருந்து பத்திரிகையை நடத்தி வந்தனர். தமிழகத்திலும், இலங்கையிலும் செல்வாக்குப் பெற்ற ஏடாக இது விளங்கியது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் புகழ் பெற்று விளங்கிய தமிழகக் கவிஞர்களும், எழுத்தாளர்களும் இதில் எழுதி வந்தனர். கூடவே உள்ளூர்ப் படைப்பாளிகளின் ஆக்கங்களும் வெளிவந்தன. நிறையவே இலக்கியச் சர்ச்சைகளும், விமர்சனங்களும் பத்திரிகையில் இடம்பெற்றன. புதியபுதிய இலக்கிய முயற்சிகள் தொடங்கப்பட்டன. சோ. சிவபாதசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராக இருந்த நான்கு ஆண்டுகளும் (1939 – 1943) பத்திரிகை வேறுபட்ட தளத்தில் இயங்கத் தொடங்கிற்று. மாணவர்களுக்கான அநுபந்தமொன்று உருவாக்கப்பட்டதில் அதனூடாகப் பல மாணவர்களும், இளைஞர்களும் எழுதிப் பழகினர். பிற்காலத்தில் பிரபல எழுத்தாளர்களாக இருந்த வரதர், கனகசெந்திநாதன் முதலியவர்கள் இவர்களுள் அடங்குவர். புதிய திரைப்பட விமர்சனங்கள் அவ்வப்போது இடம்பெற்றன. கலை நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனங்களும் இடம்பெற்றன. கைதேர்ந்தவர்களைக் கொண்டு நூல் விமர்சனங்கள் எழுதப்பட்டன. மறுப்புக்களும் பிரசுரிக்கப்பட்டன. பயணக்கட்டுரைகளும் சுவாரஸியமாக எழுதப்பட்டன.

சிறுகதையாசிரியர்களான சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சோ.சிவபாதசுந்தரம் முதலியோர் விமர்சனத்துறையிலும் ஈடுபட்டு உழைத்தனர். நவீன இலக்கியத்தின் தேவை உணரப்பட்ட நிலையில் புதிய செல்நெறிகளுக்குப் பத்திரிகை, களமமைத்துக் கொடுத்தது. மொழிபெயர்ப்புக் கதைகளும் பத்திரிகையில் இடம்பெற்றன. ஆக்கபூர்வமான விமர்சனங்கள் பலதுறைகளிலும் முன்னெடுக்கப்பட்டிருந்தமையால் வாசகர்களிடையே வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. பழந்தமிழ் இலக்கியங்களைத் தழுவியும், நவீன இலக்கியங்களைத் தழுவியும் தர்க்கங்கள் இடம்பெற்றன. 1948 இல் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களால் தொடக்கி வைக்கப்பட்ட சிலப்பதிகாரம் பற்றிய கருத்துத் தொடருக்கு மறுப்பாக, வித்துவான் க. வேந்தனார் முன்வைத்த விமர்சனக் கருத்துக்கள் ஆறு வாரங்கள் தொடர்ந்து வெளிவந்தன. இந்த இலக்கியச் சர்ச்சையானது நீண்டகாலம் ஈழத்துத் தமிழிலக்கிய உலகில் பேசுபொருளாக இருந்தது. பொதுவாகவே கம்பராமாயணத்தின் மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்த பண்டிதமணி அவர்கள், சிலப்பதிகாரத்தைப் பெருமளவு நேசிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபவனம் எனும் பகுதியை "ஈழகேசரியில்" தொடக்கி ஆடல், பாடல், சினிமா, நாடகம் முதலான கலை அளிக்கைகளை 'வஸந்தா' என்ற புனைபெயரில் விமர்சித்தவர் சோ.சி. அவருக்கு முன்னர், 'கலாசாகரம்' என்ற பகுதியாக இப்பகுதி காணப்பட்டது. சோ.சி.யின் விமர்சன எழுத்துக்கள் இலேசான நகைச்சுவையும், குத்தலான போக்கும், வீறார்ந்த மொழிநடையும் கொண்டவை. தனக்குத் தோன்றியதை எடுத்துரைப்பதில் அவர் பின் நிற்காத துணிவினர். கலாபவனத்தில் 'சகுந்தலை' (எம்.எஸ். சுப்புலட்சுமி நடித்தது — 1940இல் வெளிவந்தது) என்னும் திரைப்படத்தைப் பற்றி விமர்சிக்கையில் மிகவும் பாராட்டி எழுதியிருந்தார்.

"மேனகையாக ஓரிடத்தில் இலங்கைப்பெண் தவமணிதேவி நடனமாடுகிறார். இவ்வளவு திறமையாக நடனத்தை அவர் கற்றுக்கொண்டிருப்பது, ஆச்சரியந்தான். ஆனால் கைவீச்சும், உடலமைப்பும் மட்டுமிருந்தால் போதாது. முகபாவமும் தேவையல்லவா?"

"சுப்புலட்சுமியின் நடிப்புத் திறமை இப்போது உண்மையிலேயே பாவவிகற்பங்களோடு கூடி உன்னதத்திற்கு வந்துவிட்டதென்பதே எனது அபிப்பிராயம். குதூகலம், சாந்தம், சோகம் முதலிய உணர்ச்சிகளை அப்படியே இருதயத்தைத் தாக்கும்படி செய்திருக்கிறார். ஆனால் கதாநாயகனாக நடிக்கும் ஜி.என். பாலசுப்பிரமணியம் சினிமாத்திரைக்குப் புதியவர். நடிப்புக்கும் புதியவரென்றுதான் தெரிகிறது. முகபாவமும், நடையும், பேச்சுக்களில் இயல்பும் சிறிதாயினும், பாலசுப்பிரமணியத்திடம் காணப்படவில்லை" (ப.40).

மேலே உள்ள எடுத்துக்காட்டுக்கள் "தமிழ் வளர்த்த தீவகச்சான்றோர்கள்" (2021) நூலில், முனைவர் செ. திருநாவுக்கரசு அவர்களால் எடுத்துக்காட்டப்பட்டவைகளாகும். "ஈழகேசரி"யின் ஆசிரியராக சோ.சிவபாதசுந்தரம் இருந்த காலத்தில் 'பாட்டைசாரி' என்ற புனைபெயரில் அரசியல், சமூக, இலக்கிய விடயங்கள் பத்திரிகையில் விமர்சிக்கப்பட்டு வந்தன. தமிழக இலக்கிய வாதிகள் பலரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபாதசுந்தரம் சந்தித்துத் தனது பயணக்கட்டுரைகளில் அவர்களைப்பற்றி எழுதியிருந்தார். "ஈழகேசரி"யில் எழுதியவர்களில் சோ.சி.யின் சகோதரர், சோ. தியாகராஜபிள்ளையும் ஒருவர். அவர் நூல்களுக்கான இலக்கிய விமர்சனங்களை அதில் எழுதியுள்ளார். கவிதை, கட்டுரை, சிறுகதை முதலானவற்றையும் எழுதியுள்ளார்.

### 3.5. "மறுமலர்ச்சி"ச் சஞ்சிகை

1943ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் மறுமலர்ச்சிச் சங்கக் குழுவினரால் தொடங்கப்பட்ட "மறுமலர்ச்சி" என்னும் மாத இதழ், ஈழத்தமிழ் இலக்கிய விமர்சனத்திற்குக் காத்திரமான பங்களிப்பை நல்கியுள்ளது. தி.ச. வரதராசன் (வரதர்), அ.செ. முருகானந்தம், ச. பஞ்சாட்சரசர்மா ஆகியோர் ஆசிரியர்களாக இருந்து மாதந்தோறும் 23 இதழ்களை வெளிக்கொணர்ந்தனர். மிக நீண்டகாலத்திற்குப் பின்னர் வரதரின் உதவியுடன் மீண்டும் "மறுமலர்ச்சி", 2000ஆம் ஆண்டளவில் இரண்டு தடவைகள் வெளிவந்து நின்றுபோயிற்று. அவ்வப்போது இலக்கிய விமர்சனங்களும், இச்சஞ்சிகையில் வெளிவந்தன. எழுத்தாளர்கள் பற்றிய சந்திப்பின்போது, அவர்களது இலக்கியம் தொடர்பான விமர்சனக் கருத்துக்களும் இடம்பெற்றன. கவிதை, சிறுகதை, மொழிபெயர்ப்புப் படைப்புக்கள் ஆகியவற்றுடன் சிங்கள நாடோடிக்கதைகள் பற்றிய குல.சபாநாதனின் கட்டுரைகளும் இடம்பெற்றிருந்தன. ஈழத்தமிழ் இலக்கியப் பரப்பில் "மறுமலர்ச்சி" இதழானது, புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியதாகக் கருதப்படுகின்றது. "மறுமலர்ச்சி" இதழில் எழுதிய எழுத்தாளர்களாக அ.ந. கந்தசாமி, மஹாகவி, தில்லைச்சிவன், சாரதா, வித்துவான் க. வேந்தனார் (ஒரு கவிதை மாத்திரம்) முதலியோரைக் குறிப்பிடலாம்.

#### 3.5.1. அ. ந. கந்தசாமி

அறிஞர் அ.ந.கந்தசாமி அவர்கள் சிறுகதை, கவிதை, நாடகம், விமர்சனம் மற்றும் மொழிபெயர்ப்பு என இலக்கியத்தின் பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகளிலும் தனது காத்திரமான பங்களிப்பினை நல்கியவர். அவ்வப்போது இலங்கைத்தமிழ் இலக்கியம் பற்றி எழுதும் சிலர் அத்துறையில் போதிய புலமையற்றோ அல்லது திட்டமிட்டோ இவரது பங்களிப்பினை மறைத்துவிடுகின்றனர். அ.ந.க.வின் புலமை காரணமாகவே பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் தனது "ஒப்பியல் இலக்கியம்" நூலினை அ.ந.க.வுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார். "பல்லாண்டுகளாக எனது இலக்கிய முயற்சிகளை நேர்மையுடன் விமர்சித்து ஊக்கங்கொடுத்து வருபவரும், இன்றைய ஈழத்து எழுத்தாளர்களின் முன்னோடிகளில் ஒருவரும், பிறமொழி இலக்கியங்களைக் கற்றுமகிழ்ந்து அவற்றைத் தழுவியும் மொழிபெயர்த்தும் தமிழுக்கு அணி செய்தவரும், பலதுறை வல்லுனருமான காலஞ்சென்ற அ.ந.கந்தசாமி அவர்களது நினைவுக்கு இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன்" என்று பேராசிரியர் கைலாசபதி கூறுகிறார்.

இலக்கிய விமர்சனத் துறையில் 'தேசிய இலக்கியம்' என்ற கருத்தைப் பற்றி, அந்த இயக்கம் ஈழத்தில் வலுவடைந்த காலத்தில் அ.ந.கந்தசாமி பல அரிய கட்டுரைகள் எழுதியுள்ளார். 'சிலப்பதிகாரம்', 'திருக்குறள்', 'எமிலிஸோலா' முதலிய பரபரப்பான கட்டுரைகள் எழுதினார். அறிவுலகவாதியான அ.ந.கந்தசாமி எழுதும் கட்டுரைகள் புதுமை நோக்குடன் இருக்கும். சிலப்பதிகாரத்தைப் பற்றி எழுதிய கட்டுரைகள், பண்டிதர் முதல் பட்டதாரி வரை அதிகமானவர்களிடையே பெரும் சர்ச்சைக்குள்ளாகின. மேல்நாட்டு எழுத்தாளர் ஹென்றியின் சிறுகதை உத்திகளையும், திருப்பங்களையும் பாராட்டும் அ.ந.க, அவற்றை இளம் எழுத்தாளர்கள் படித்துப் பயனடைய வேண்டும் என்று அவற்றை மொழிபெயர்த்து வெளியிட்டார். எப்பொழுதும் தன் எழுத்துக்களால் பிறர் பயன் அடைய வேண்டும் என்று விரும்பும் அ.ந.கந்தசாமி, "வெற்றியின் இரகசியங்கள்" என்ற தத்துவ நூல் ஒன்றினையும் எழுதியுள்ளார். மேலும், "இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்" என்னும் அரியதோர் ஆய்வு நூலை, முனைவர்களான சி. மௌனகுரு, மௌ. சித்திரலேகா, எம்.ஏ. நுஃமான் ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியுள்ளனர். அதில் 'விமர்சனம்' என்னும் பகுதியில் அ.ந.க.வின் பங்களிப்புப் பற்றிக் குறிப்பிட்டுள்ளமையும் அவதானத்திற்குரியது.

## 3.6. ஈழத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் அடுத்தகட்ட நகர்வு

"இலங்கையின் இலக்கிய விமர்சனத் துறையின் ஆரம்ப கட்டங்களில், இலக்கியத்தின் உருவம், உள்ளடக்கம் பற்றிய விமர்சனக் கண்ணோட்டங்கள் வெளியிடப்பட்டன. இலக்கியத்தின் நோக்கம் பற்றியும், அதன் சமூகப் பணி பற்றியும் விமர்சகர்கள் நோக்கத் தலைப்பட்டனர். அதனையடுத்து, தேசிய இலக்கியக் கோட்பாடு வளர்ச்சிபெறத் தொடங்கியது. இலங்கைக்கே தனித்துவமான மண்வாசனை, பிரச்சினைகள், பாத்திரங்கள் முதலானவை, இலக்கியத்தில் இடம்பெற வேண்டுமென்ற குரல்கள் விமர்சனத்துறையில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கின. இத்தகைய தேசிய இலக்கியம் பற்றிய பிரக்ஞை நாற்பதுகளிலிருந்து மெதுமெதுவாக வளரத் தொடங்கி, ஐம்பதுகளிலிருந்து அது முதன்மை பெற ஆரம்பித்தது. அத்தோடு, முற்போக்கு இலக்கிய நோக்கும் இலங்கையின் விமர்சனத்துறையில் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது (துரை மனோகரன், 1997: ப.190).

ஈழத்தமிழ் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சியின் அடுத்த கட்ட நகர்வு பற்றிப் பேராசிரியர் துரை மனோகரன் கூறியிருப்பது இதுவாகும். மேலைத்தேய நவீன இலக்கியங்களின் வருகையோடும் திறனாய்வுக் கொள்கைகளின் வருகையோடும் தமிழகத்தில் திறனாய்வு முயற்சிகள் தொடங்கப்பெற்றபோது, அதற்குச் சமாந்தரமாகவே சிறிது சிறிதாக ஈழத்திலும் திறனாய்வுச் செயற்பாடுகள் ஏதோவொரு விதத்தில் முன்னெடுக்கப்பட்டமையை இதுவரை நோக்க முடிந்தது. பின்னர் நவீன இலக்கிய வளர்ச்சியுடன் சுதந்திரத்திற்குப் பிந்திய காலத்திலேற்பட்ட வாய்ப்புகளும் ஒன்றுசேரும்போது புதியபுதிய திறனாய்வு முறைகளும் உள்வாங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.7. பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் பணி

நவீன திறனாய்வு முயற்சியை முன்னெடுப்பதில் முன்னர் ஆசிரியர்கலாசாலைப் பண்டிதர்கள் ஆற்றிய பணியைப்போல பல்கலைக்கழகங்கள் அல்லது உயர்கல்வி நிறுவனங்கள்சார் பேராசிரியர்களின் பணியும் முக்கியமானது. இவர்கள் தம்மைச் சார்ந்த கல்வியறிஞர்களுக்காகவும், பல்கலைக்கழக மாணவர்களுக்காகவுமே எழுதியுள்ளனர், எழுதுகின்றனர். தமிழிலக்கியதைப் பயிலும் மாணவர்கள், இவர்களின் விமர்சனக் கருத்துக்களால் பெரிதும் பயனடைகின்றனர். இலக்கிய விமர்சனம் சார்ந்த மொழி, மொழியியல், வரலாறுசார்ந்த ஆய்வு முயற்சிகளுக்கு இப்பேராசிரியர்களின் பணி முக்கியத்துவமுடையது. ஆங்கிலக் கல்வியால் எழுந்த திறனாய்வு வகைகளில் ஒன்றாகப் 'புலமைநிலைத் திறனாய்வு' காணப்படுகின்றது. உயர்நிலைகளில் இலக்கியம் கற்பித்தலை அடிப்படையாகக்கொண்டு இம்முறை வளர்ச்சியடைந்தது எனலாம். வரலாறு காணுதல், நயம்பட உரைத்தல், ஒப்பு நோக்கல், மீளச்சொல்லுதல், விளக்கிக்கூறல், பாத்திர இயல்பினை விபரித்தல், வருணனை விளக்கங்கள் போன்றவற்றை செவ்விய மொழித்தளத்தில் நின்று பேசுதல் புலமைநிலைத் திறனாய்வின் விசேடமாகும். புலமை நிலைத்திறனாய்வின் வளர்ச்சியில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பங்கெடுத்துள்ளமையை இனங்காணமுடிகின்றது. குறிப்பாக விபுலாநந்தர், க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம், சு. வித்தியானந்தன் போன்றோரின் பங்கு முக்கியமானது.

சுவாமி விபுலாநந்தரின் கட்டுரைகளில் கலைநோக்கும், அறிவியல் நோக்கும் இணைந்த திறனாய்வுப் பார்வையைக் காணலாம். விபுலாநந்தருக்குப் பிறகு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைக்குப் பொறுப்பாக இருந்த பேராசிரியர்களான க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம் ஆகியோர் இதில் அக்கறையுடன் ஈடுபட்டனர். தமிழிலக்கிய வரலாறு, இலக்கிய விமர்சனம் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளுக்கான பாடத்திட்டங்களை உருவாக்கி, நவீன இலக்கியங்களையும் பாடத்திட்டத்தில் சேர்த்தவர் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையவர்கள். இவரின் புலமைத்திறனாய்வில் வரலாற்று நோக்கும், பண்பாட்டு அணுகுமுறைகளும் ஒன்றிணைந்திருப்பது சிறப்பானதாகும். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விமர்சனத்துறை ஆழமாக வேரூன்றுவதற்கும், வளர்ச்சி காண்பதற்கும் அத்திவாரமிட்டவர் பேராசிரியர் வி. செல்வநாயகம் (1907 – 1972) அவர்கள். பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலக்கிய விமர்சனத்தைக் கற்பித்தவர். விமர்சனம் பற்றிய பயிற்சியைக் கொடுத்தவர். நுணுக்கமான நோக்குக் கொண்ட இவர், "தமிழிலக்கிய வரலாறு", "தமிழ் உரைநடை வரலாறு" எழுதியதன்மூலம் தமிழ்மொழிக்கு அரிய பணியாற்றியுள்ளார் எனலாம். இவை புலமை நிலையிலும், வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் கூடிய திறனாய்வுப் பார்வையைக் காட்டுகின்றன.

"சிந்தனை விருப்பம், இரசனையும் உடைய மாணவர்களுக்கு அவருடைய இலக்கியத் திறனாய்வு வகுப்புக்கள் சுவையுடையனவாக அமைவன. அப்படி இல்லாதவர்களுக்கு அவை வேப்பங்காயாகவே இருப்பதுண்டு. ஏதாவதொரு பாடலை, உரத்து அப்பாடல் ஓசைக்கு ஏற்ப வாசிப்பார். அப்பாடல் நல்ல பாடலா? அல்லது கூடாத பாடலா? என்று ஒவ்வொரு மாணவரிடம் கேட்பார். நல்ல பாடலென்றோ, கூடாத பாடலென்றோ கூறினால், அதற்குரிய காரணங்களைக் கூறும்படி கேட்பார். இலக்கியத்தைப் பகுத்துணர்ந்து சுவைக்கக்கூடிய பயிற்சியினை மாணவர்களுக்கு அளிப்பதே இப்பெரியாருடைய நோக்கமாக இருந்தது. இலக்கியத்தைச் சுவைக்கத்தெரியாமல் அதிலே சமூகவியல், வரலாற்றியல் தரவுகளை மட்டும் தேடுகின்ற நிலையுடைய இக்காலத்திலே பேராசிரியர் வி. செல்வநாயகத்தினுடைய இலக்கியத் திறனாய்வுப் பயிற்சியினை எம்போன்ற மாணவர்கள் இன்று திரும்ப அசைபோடுவதுண்டு" (சண்முகதாஸ்.அ, 1998: பக். 42 – 43). இவ்வாறு பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்களின் இலக்கிய விமர்சனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல்பற்றி அவருடைய மாணவர் பேராசிரியர் அ. சண்முகதாஸின் கூற்று அமைந்துள்ளது.

நவீன விமர்சனத்துறைகள் பற்றிய அனுபவம் ஏற்படுவதற்கு முன்னரே 1950களில் இரசனைமுறை, வரலாற்றுமுறை, விளக்கமுறைத் திறனாய்வுகள் பற்றிய கருத்தோட்டம் இவரிடம் காணப்பட்டது. அவருடைய நூல்கள் இதனை மெய்ப்பிக்கின்றன. விமர்சனத்துறையில் இவரும், பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் காட்டிய ஆர்வமானது பிற்காலத்தில் அத்துறையில் பலர் ஈடுபடுவதற்குக் காரணமாயிற்று. 'சொல்லும் பொருளும்', 'பாட்டும் ஓசையும்', 'வழக்கும் செய்யுளும்', 'கடலோசை', 'கடல்', 'கண்ணுற்றான் வாலி', 'கம்பனில் ஒருபாட்டு', 'புறநானூற்றில் ஒருபாட்டு' ஆகிய இவரது கட்டுரைகள் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்க இதழான "இளங்கதிரில்" வெளிவந்துள்ளன. இலங்கைப் பல்கலைக்கழகப் பின்னணியில் மேலே குறிப்பிட்ட இரு தமிழ்ப்பேராசிரியர்களுக்குப் பின்னால், பேராசிரியர்களான அ. சதாசிவம், ஆ. வேலுப்பிள்ளை, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, அ. சண்முகதாஸ், எஸ். தனஞ்சயராஜசிங்கம், நா. சுப்பிரமணியன், க. அருணாசலம், ம.மு. உவைஸ், சி. தில்லைநாதன், எம்.ஏ. நு∴மான், சித்திரலேகா, மௌனகுரு, செ. யோகராசா, துரை மனோகரன், அம்மன்கிளி முருகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ், முதலியோர் இரசனைமுறைத் திறனாய்வு, தமிழ் வரலாற்றியல் முறையிலான திறனாய்வு ஆகியவற்றைத் தழுவிக் கட்டுரைகளையும், நூல்களையும் அவ்வப்போது எழுதியுள்ளனர். சிலர் சிறப்பான முறையில் நவீன திறனாய்வு இயங்கு தளங்களில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டுள்ளனர். துரைமனோகரன் அவர்கள் பல ஆண்டுகளாக "ஞானம்" சஞ்சிகையில் 'எழுதத்தூண்டும் எண்ணங்கள்' என்னும் தலைப்பில் எழுதிவரும் விடயங்கள் அரசியல், சமூக, இலக்கியம் சார்ந்தவைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகப் பேராசிரியரான நா. சுப்பிரமணியன் (1942), "ஈழத்தில் தமிழ் நாவல்கள்", "இந்தியச் சிந்தனை மரபு", "நால்வர் வாக்கும் வாழ்வும்", "தமிழ் ஆய்வியலில் க. கைலாசபதி", "கந்தபுராணம் ஓர் பண்பாட்டுக் களஞ்சியம்" முதலான நூல்களை ஆய்வுநிலையில் எழுதியவர். "கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆய்வுகள் : பார்வைகள் - பதிவுகள்", "காலத்தின் குரல்", "திறனாய்வு நோக்கில் தமிழன்பன் கதைகள்" முதலான நூல்களையும் இவர் எழுதியுள்ளமையை அறிய முடிகின்றது. இலங்கையில் இருந்து வெளிவரும் "ஞானம்" இதழில் இலக்கியத் திறனாய்வு பற்றித் தொடர் கட்டுரைகளை இவர் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தற்போது கனடாவில் வாழ்ந்துவரும் இவர் அவ்வப்போது இலக்கியத் திறனாய்வு முயற்சிகளில் தமது பங்களிப்பை நல்கி வருகின்றார். பேராசிரியர். சி. தில்லைநாதன், பேராசிரியர் அ. சண்முகதாஸ் போன்றவர்கள் இரசனை, அழகியல் திறனாய்வு முறையில் பல கட்டுரைகளையும், நூல்களையும் அவ்வப்போது எழுதியுள்ளனர். தமிழ்மொழி வரலாற்று ஆய்வறிவியல் பார்வையில் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்களின், "தமிழ் வரலாற்றிலக்கணம்", "காலமும் கருத்தும்", "சாசனமும் தமிழும்" போன்ற நூல்கள் விமர்சன ரீதியான ஆய்வுகளைக் கொண்டமைந்தவை. தமிழகத்தின் வரலாற்று அய்வாளர்களது நூல்களோடும், இரசனைமுறை ஆய்வாளர்களின் நூல்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கவை. பேச்சுமொழி வழக்கத்தைத் தழுவி, ஆக்க இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்களுடன் மாறுபட்டுக்கொண்ட பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள், மரபுத் தமிழியல் ரீதியாக விமர்சனங்களை முன்வைத்தவர். பிற்காலத்தில் பேராசிரியர் செ. யோகராசா, பேராசிரியர் சி. சிவலிங்கராசா, பேராசிரியர் ம. இரகுநாதன் போன்றவர்கள் நூல்களுக்கான விமர்சனங்கள், தமிழிலக்கிய வரலாற்று நூல்களை எழுதும்போது கொண்டிருக்கும் விமர்சன ரீதியான பார்வை, நவீன தமிழ் இலக்கியச் செல்நெறிப்போக்குகள் பற்றிய ஆய்வுகளின்போது காட்டும் விமர்சனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வைகள் போன்றவற்றினால் தமிழிலக்கிய விமர்சனத்துறைக்குத் தம்மாலான பங்களிப்பை நல்கியுள்ளனர்.

தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் அப்போது இடம்பெற்றிராத நவீன இலக்கியவாதிகள் பற்றியும், புதுமைப்பித்தன் போன்றோர் பற்றியும் இலங்கைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் இடம்பெறுவதற்கு இம்முயற்சிகள் வலுவான பங்கை அளித்தன. இவ்வேளையில் தமிழிலக்கிய விமர்சனம், ஆய்வறிவியலாகிய துறைகளில் புதிய பார்வையும், புதிய வீச்சும் கொண்டு ஒளிபாய்ச்சியவர்கள் பேராசிரியர்களான க. கைலாசபதியும், கா. சிவத்தம்பியும் ஆவார்கள். இவர்கள் ஈழத்தமிழ்த் திறனாய்வுத் துறையில் மாற்றங்களை ஏற்படுத்தியவர்களாகவும், ஆழ அகலமாகத் தூரநோக்குடன் இலக்கியப்படைப்புக்களை நோக்கியவர்களாகவும், புதிய சொல்லாடல்களைப் பயன்படுத்தியும் திறனாய்வு முறையினை நெறிப்படுத்தியவர்களாகவும் காணப்படுகின்றனர். 1950களின் பின்னர் தோன்றிய இப்புதிய சூழலானது, 1957ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட "இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின்" ஆதரவுடனும், அதனைச் சார்ந்த எழுத்தாளர்களின் விசுவாசத்துடனும், மார்க்சியக் கோட்பாட்டுத் தளத்தில் திறனாய்வுத்துறை வளர்வதற்கு ஏதுவாயிற்று. பேராசிரியர்களான க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோர் ஈழத்தமிழ் இலக்கிய உலகில் திறனாய்வுத் துறைக்கு அரிய பங்களிப்புச் செய்ததன்மூலம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் துணைநின்றார்கள்.

### 3.7.1. பேராசிரியர் க. கைலாசபதி

பேராசிரியர் க. கைலாசபதி (1933 – 1982) திறனாய்வு, ஒப்பியல் ஆகிய துறைகளில் புதிய பார்வையும், புதிய வீச்சும்கொண்டு செயற்பட்டவர். சுமார் கால் நூற்றாண்டுக்கு மேலான காலப்பகுதியில் இலக்கியப்பணி செய்தவர். ஈழத்திலும், தமிழகத்திலும் நன்கு அறியப்பட்டவர். இலங்கையில் தேசிய ஜனநாயக சக்திகள் வளர்ச்சி பெறத்தொடங்கிய காலத்தில் அரசியல், சமூகம் மற்றும் கலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டுத் துறைகளில் முற்போக்குச் சிந்தனைகளும், செயற்பாடுகளும் சக்திபெறத் தொடங்கிய ஒரு நிலைமையின் பிரதிபலிப்பாக விளங்கியவர். 1955க்குப் பிறகு வளர்ச்சிபெற்று 1965வரை தீவிரமாகச் செயற்பட்ட 'இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' எனும் இலக்கிய இயக்க காலத்தில், முற்போக்குச் சிந்தனைகளை உந்துசக்திகளாகப் பெற்ற இந்த இயக்கத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கு முன்னுதாரணமாய், விமர்சகராய்ப் பணிபுரிந்தவர். இலங்கை முற்போக்கு இலக்கிய இயக்கத்தின்வீச்சு இவரின் விமர்சனங்களில் அறிவார்த்தமாகப் பிரதிபலித்தது. அவருடைய விமர்சனங்களுக்கு அந்த இலக்கியச் சூழலும், அந்த இயக்கமும் ஒரு தளமாக அமைந்துள்ளது எனலாம். லண்டன் பர்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தில் புறநானூற்றை முக்கியமாகக் கொண்டு Tamil Heroic Poetry என்ற தலைப்பில் ஆய்வு செய்து கலாநிதிப் (முனைவர்) பட்டம் பெற்றவர். கல்வியியல் வழிவந்த சிறந்த திறனாய்வாளராகவும், மார்க்சியத் திறனாய்வு முறையில் ஒரு சாதனையாளராகவும், பல திறனாய்வாளர்களுக்கு முன்மாதிரியாகவும் விளங்கிய கைலாசபதி, பழைய இலக்கியம் முதல் நவீன படைப்பிலக்கியம் வரை ஆராய்ந்துள்ளார். அவை பற்றிய சமூக வரலாற்று உள்ளடக்கங்களை ஆழ்ந்து வெளிப்படுத்தியுள்ளார். சமூகத்தின் வளர்நிலைகளிலுள்ள அவலங்கள் முதலியவற்றை இலக்கியங்கள் எவ்வாறு சித்திரிக்கின்றன என்று காட்டுவதில் அக்கறை கொண்ட இவர், 'இருப்புக்களும் மாற்றங்களும், காரண– காரியங்களோடு அமைந்திருக்கின்றன' என்ற கருதுகோள் கொண்டவர். "சுவாமி விபுலாநந்தரின் ஒப்பியல் நோக்கும், பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையின் ஆய்வறிவுப் பார்வையும், பேராசிரியர் வி. செல்வநாயகத்தின் கூர்த்த விமர்சனக் கண்ணோட்டமும் பேராசிரியர் கைலாசபதியிடம் முழுமைபெறுகின்றன" (துரைமனோகரன், 1997: ப.193) என்கிறார் துரை மனோகரன் அவர்கள்.

கைலாசபதியின் இலக்கியத் திறனாய்வில் வரலாற்று நெறியையும் பார்க்க முடியும். வரலாற்று நெறியென்பது கால வரிசையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவதோ, பட்டியல்களை நிரல்படுத்துவதோ அல்ல. அது காரணகாரியத் தொடர்புடன் பிணைக்கப்பட்டுள்ள சமுதாய இயக்கத்தின் கூட்டு, மொத்தமாக விளக்குகின்ற காலங்களின் வளர்ச்சி நிலையாகும். வளர்ச்சியின் காரணிகளாகவுள்ள மாற்றங்களை அடையாளங்காண்பதோடு, திசைமுகங்களை உணர்த்துவதும் முக்கியமானதாகும். குறிப்பாக அவருடைய "பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்", "அடியும் முடியும்", "தமிழ் நாவல் இலக்கியம்" ஆகிய நூல்களைக் குறிப்பிடலாம். இங்கேதான் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் பெரிதும் துணை செய்கின்றது. பொருளாதார உற்பத்தி, உறவுகளை அடிப்படையாகக்கொண்ட சமுதாயத்தின் முரண்பட்ட அமைப்பு நிலைகளையும் அதன் மாற்ற நிலைக்கூறுகளையும் தக்க சான்றாதாரங்களோடு ஆராய்வதாலும், இயக்கப்போக்குகளுக்கு அடிப்படைக் காரணங்களை இனங்காண்பதாலும் ஆய்வுமுறை விஞ்ஞான பூர்வமானதாக அமைகின்றது. இந்த முறையியலைக் கைலாசபதி முற்கால இலக்கியங்களை அணுகும்போதும், சமகால இலக்கியங்களை அணுகும்போதும் பின்பற்றுவதை நோக்கலாம். நாவல் இலக்கியம்பற்றி விரிவாகப் பேசுகின்ற இவர், அதனை வரலாற்றுக் கண்ணோட்டத்துடன்தான் அணுகுகின்றார். நாவல் தோன்றுவதற்குரிய சமுதாயநிலைக் காரணங்களை அவர் மிகவிரிவாகப் பேசுகிறார். மத்தியதர வர்க்கம் தோன்றும்போதும், சமூகத்தில் புதிய முரண்பாடுகள் முகிழ்க்கும்போதும், உரைநடையின் வீச்சு ஆதிக்கம் செலுத்த ஆரம்பிக்கும்போதும் நாவல் எனும் இலக்கிய வடிவம் தோன்றுகின்றது என்பதே அவரின் சிந்தனையாகும்.

இந்திய சுதந்திரப் போராட்டமும், காந்தியத்தின் பரவலும், சுய மரியாதைப் போராட்டங்களும் இலக்கியங்களின் சமூகநோக்கை வலியுறுத்தின. இதனால் சமூகச் சார்புடைமை நோக்கிலான இலக்கியப் பரம்பல் அதிகரித்தது. 'இலக்கியம் இலக்கியத்திற்காக' என்ற தளத்தில் மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆங்கிலக் கல்வியுடன் கூடிய சமூகவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகுமுறைகள் கலை இலக்கியங்கள்மீது செல்வாக்குச் செலுத்தின. மேலைப்புலத்தில் வளர்ச்சியுற்றுவந்த கோட்பாடுகள், இலக்கியங்களுக்கும் சமூகத்திற்குமுள்ள உறவுகளை வலியுறுத்தின. தொடர்ந்து மார்க்சியப் புலக்காட்சிவாயிலாகக் கலையிலக்கியத் தரிசித்தல் என்ற மாற்றநிலையானது வளரலாயிற்று. இந்நிலையில் மார்க்சியத் திறனாய்வும் அதனை அடியொற்றிய அழகியலும் மேலெழுந்தது. இதனால் கைலாசபதிக்கு மார்க்சியக் கோட்பாடுகளில் ஆழ்ந்த பற்றும், பிடிப்பும் உண்டு. இவர் உயிர்த்துடிப்புள்ள படைப்பாற்றல் மிக்க மார்க்சியத்தை விரும்பினார். அதனைப் பின்பற்ற முனைந்தார். அத்துடன் தேசியவாதியாக மட்டுமன்றி சர்வதேசியவாதியாகவும் செயற்பட்டார்.

மார்க்சியப் பார்வையுடன் இலக்கியங்களை அணுகும்விதம் அவரை ஏனையவர்களிடமிருந்து பிரித்துக்காட்டியது எனலாம். சிறுகதைகள், கவிதைகள், குழந்தை இலக்கியங்கள், நாடகங்கள், நாவல்கள், இலக்கிய முன்னோடிகள் பற்றிய ஆய்வுகள், சாதியம், பெண்ணியம், மொழியுணர்வு நிலை, நாட்டு நல நாட்டம், ஆகியனவற்றை நவீன இலக்கியங்களின் அடிப்படைக் கூறுகளாக ஏற்று, திறனாய்வினை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி அவற்றை உலகு தழுவிய பார்வையில் நின்று நோக்கிய வகையில் பேராசிரியர் கைலாசபதி முக்கியம் பெறுகின்றார். இலக்கியம் படித்து இரசிப்பதற்கு மட்டுமே உரியதென்ற 'கலை கலைக்காக' கோட்பாட்டை வன்மையாகக் கண்டித்தார். உருவத்தை விட உள்ளடக்கத்திற்கு முக்கியத்துவம் வேண்டுமெனவும், இலக்கியத்திற்குச் சமூகப்பணி இருக்கிறதெனவும் அவர் வலியுறுத்தினார். இக்கருத்துக்களால் வந்த எதிர்வாதங்களை துணிவுடன் எதிர்கொண்டு தகர்த்தெறிந்தார். இக்காலத்தில் அவ்வப்போது பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, மேடைகள் பலவற்றிலும் அவர் வெளியிட்ட கருத்துக்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றை அறிய முயல்வோர்க்குப் பாடங்களாக உதவிடும் எனலாம். 1950 ஆம் ஆண்டுகளில் எழுதத் தொடங்கியவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 ஆம் ஆண்டுகளில் தமிழ்த் திறனாய்வுத்துறையில் ஒரு புதுநெறி காட்டிய சக்தி வாய்ந்த மனிதனாக முத்திரை பதித்தார்.

தமிழிலக்கியங்களைப் பிறமொழி இலக்கியங்களுடன் ஒப்புநோக்கும் பார்வையானது, இவரை ஒருதளத்திற்கு உயர்த்தியது. ஒப்புநோக்கை வெறுமனே 'புலமைப் பயிற்சி' என்ற நிலைக்கப்பால் நகர்த்திச் சென்றவர்களில் இவரின் செயற்பாடு முக்கியமானதாகும். இணைநிலை மற்றும் பண்பாட்டியல் நோக்குகளுக்கு அப்பால் கருத்தியல் ரீதியான ஒப்பியல் ஆய்வினைக் கைலாசபதி அவர்கள் தமிழில் வளம்படுத்தியமை சிறப்புக்குரியதென்றே கூறலாம். இவரது பத்தொன்பது தமிழ் நூல்களும், நான்கு ஆங்கில நூல்களும் இதுவரை வெளிவந்துள்ளன. அத்துடன் 238 கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. பாரதியையும், தாகூரையும் ஒப்புநோக்கி எழுதிய "இருமகாகவிகள்" (1962) இவரது முதல் நூலாகும். "தமிழ் நாவல் இலக்கியம்" (1968), "ஒப்பியல் இலக்கியம்" (1969), "அடியும் முடியும்" (1970), "கவிதை நயம்" (இ. முருகையனுடன் இணைந்து எழுதியது), "இலக்கியமும் திறனாய்வும்" (1972), "சமூகவியலும் இலக்கியமும்" (1979), "திறனாய்வுப் பிரச்சினைகள்" (1980), "நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்" (1980), "இலக்கியச் சிந்தனைகள்" (1983), "பாரதி ஆய்வுகள்" (1984), "Tamil Heroic Poetry" (1968), "The Relation of Tamil and Western Literature" (1984), "Art and Literature" (1987) ஆகியவை திறனாய்வு பற்றிய நூல்களில் முக்கியமானவை. "Tamil Heroic Poetry" சங்ககாலத்தை வீரயுகக் காலமாகக்கொண்டு அதன் பாடல்களையும், கிரேக்க வீரயுகப் பாடல்களையும் ஒப்பிடுவதாக அமைந்துள்ளது. அதற்குத்துணையாக நாட்டுப் பாடல் மரபின் பொதுப்பண்புகள் காட்டப்பட்டுள்ளன. இந்த ஒப்பியல் ஆய்வில் ஒத்தமைவுக்கொள்கை பின்பற்றப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இவரின் "ஒப்பியல் இலக்கியம்" எனும்நூல் தமிழில் கோட்பாட்டு அளவிலான முன்னோடி நூல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவரது இலக்கியக் கொள்கைகள் உலகம் தழுவியவையாகவும், அறிவியல் பூர்வமானவையாகவும் அமைந்திருந்தன. தமிழுலகப் பழைமையை அவர் என்றும் நிராகரித்தவர் அல்லர். பழையவற்றின் அடித்தளத்திலிருந்து புதியன நோக்கிய நகர்வுகளுக்கு வழிகாட்டியவர். அவரிடம் வாய்க்கப்பெற்றிருந்த ஆங்கிலப் புலமையும் இதனைச் சாத்தியமாக்கிற்று. உலக வியாபகமாகிய சமவுடைமைக் கோட்பாட்டினை ஏற்றுச் செயற்பட்ட இடதுசாரி அரசியலாளர் இவர். உலக ரீதியான மக்கள் போராட்டங்கள் பற்றியும், அவற்றின் உன்னதங்கள் பற்றியும் எழுதாத இலக்கியப் படைப்புக்களை அவர் கருத்திற் கொள்ளவில்லை. சமூகப்பிரச்சினைகளைச் சித்திரித்து அவற்றை இலக்கியமாக்குவதுடன், சமூக மாற்றத்திற்கான பணிகளில் ஈடுபட்டு உழைப்பவர்களையே அவர் விரும்பியிருந்தார் எனலாம். வெறும் இயற்பண்புசார் இலக்கியங்களில் மேன்மை காட்டியவர்களையும், 'கலை கலைக்காகவே' என்பதில் மனநிறைவு கண்டவர்களையும் கைலாசபதியவர்கள் கவனத்தில் கொள்ளாதது உண்மையே ஆகும். பொருண்மையும் கலைத்துவமும் இணைந்த படைப்பிலக்கியங்களே அவரை ஆகர்சித்துக்கொண்டன. அவை பற்றி எழுதுவதிலும், ஆய்வு செய்வதிலும் அவர் முக்கிய கவனம் செலுத்தினார்" (திருநாவுக்கரசு.செ, 2012: 5 – 7).

இலக்கியத்தின் அடிப்படையில் வாழ்க்கை சார்ந்த தேடல் இருக்கும். இருப்பையும் பிரபஞ்ச இயக்கத்துக்கான தத்துவார்ந்த கேள்விகளுக்கான விடைகளையும் நோக்கிச் செல்லும். ஒரு வாழ்க்கையை, வெறும் முதலாளிக்கும் – தொழிலாளிக்கும் இடையிலான இலாப நட்டக் கணக்கிலிருக்கும் சமத்துவத்தின் ஊடாகப் பார்க்க இயலாது. சரியான ஊதியப் பகிர்வும், அந்தஸ்தும் கிடைத்தால், ஊழியர்கள் விடுதலை அடைந்துவிடப் போவதும் இல்லை. வாழ்க்கை என்பது எண்ணற்ற கேள்விகளாலும் தனிப்பட்ட அகங்கார மோதல்களாலும் நிரம்பியது. உண்மை என்று நாம் நம்பும் ஒன்றில், பாதிதான் உண்மை. மிச்ச உண்மை மற்றைய தரப்பிலிருப்பது. இதனைத் துழாவிக் கண்டடைய வைப்பது இலக்கியம். கைலாசபதி அவர்கள், அக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைப்பட்ட அளவுகோல்களைக்கொண்டு இலக்கியத் திறனாய்வு செய்வதை ஏற்கவில்லை. வரலாற்றுப் பார்வை, சமுதாயநோக்கு, அழகியல் அக்கறை ஆகியனவே முக்கியம் என்றும் கருதினார். உருவம், உள்ளடக்கத்தில் அமிழ்ந்து போகத்தேவையில்லை என்றும் கூறியுள்ளார். உலகத்தை மாற்றி அமைப்பதற்கு ஓயாது பயன்படுத்தும் ஆயுதமாக விமர்சனம் இருக்கவேண்டும் என்றும் கருதினார். 1955இல் முதன்முதல் இந்தியா சென்று கல்கத்தாவில் நடந்த இந்திய எழுத்தாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார். இதன்பிறகு பலதடவைகள் இந்தியா சென்றுள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பொற்கோ அவர்கள் பேராசிரியராக இருந்தபோது, அங்கு "தமிழ்த்துறையில் ஆய்வுகள்" என்ற தலைப்பில் இவர் ஆற்றிய உரை பலராலும் பாராட்டப்பட்டது.

சிதம்பரரகுநாதன், செ குழந்தைசாமி (குலோத்துங்கன்), கு. அழகிரிசாமி, ஜெயகாந்தன் ஆகியோர் இவரது நீண்டகால நண்பர்கள். 1979இல் மனைவியுடன் சீனா சென்றார். ஈழத்திலும், தமிழகத்திலும் இவரது எழுத்துக்களில் கரிசனை கொள்பவர்கள் பலபேர் உளர். இரசனைமுறை, அழகியல் திறனாய்வைப் பின்பற்றி தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மு. வரதராசன் போன்றோர் வழியில் குழு வட்டங்கள் செயற்பட்டதாகவும், அதேபோன்று 1980ற்குப் பின்னர் கைலாசபதி அவர்களின் வழித்தடத்தில் ஒருகுழுவினர் செயற்பட்டதாகவும் க. பஞ்சாங்கம் தமது "தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு" நூலில் எடுத்துக் கூறியுள்ளார் (பஞ்சாங்கம்.க, 2004: ப.85). கைலாசபதி அவர்கள், தமது "திறனாய்வுச் சிந்தனைகள்" (2001) என்ற நூலில் மேலைத்தேய அறிஞர்களின் கருத்துக்களை உள்வாங்கி இலக்கியக் கொள்கைகள் ஐந்தினையும், திறனாய்வுக் கொள்கைகள் நான்கினையும் எடுத்துக்காட்டிப் பல்வேறு உதாரணங்களுடன் தெளிவுபடுத்தியுள்ளார். "அதீத தனிமனித வாதத்தாலும், அர்த்தமற்ற கோஷ்டி மனப்பான்மைகளாலும் வலுவிழந்து கிடக்கும் இன்றைய தமிழிலக்கியத் திறனாய்வு குறைந்த பட்சமான பொதுப்பண்புகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுபடுத்துவதன்மூலம் எழுத்தாளருக்கு மட்டுமன்றி, சமுதாயம் முழுவதற்குமே பயன்தரும் ஓர் ஆய்வறிவுத்துறையாக அமையும் என்பதில் ஐயமில்லை"

இவ்வாறு கைலாசபதி "இலக்கியமும் திறனாய்வும்" (1972: ப.135) எனும் நூலில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. மார்க்சியத் தளத்தில் சமூகவியல் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு செயற்பட்ட கைலாசபதி அவர்கள் திறனாய்வு பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள், ஆதரவும் – எதிர்ப்பும் கொண்டிருந்தவையாக விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். இலக்கிய ஆய்விற்கும். இலக்கிய விமர்சனத்திற்கும் இடையிலான தூரத்தைக் கைலாசபதி பெருமளவு குறைத்திருந்தார் எனக்கருதுவோர்கள் உளர். அவரது வரவு தமிழிலக்கிய உலகின் அடைபட்ட சாளரங்கள் பலவற்றைத் திறப்பதற்கு உதவிற்று. அவர் மறைந்துபோய் 40ஆண்டுகள் சென்ற போதிலும், இன்றும் அவரது திறனாய்வுக் கொள்கைகள் விமர்சனத்திற்கு உட்பட்டவையாகவே விளங்குகின்றன. அதேவேளையில் அவருடைய கருத்துக்கள் ஏராளமான இலக்கியகாரர்களால் தமிழகத்திலும், ஈழத்திலும் ஏற்றுக்கொள்ளப்படுவதையும் அறியமுடிகின்றது. பட்டப்பின் கல்வித்துறையில் உயர் ஆய்வுகளை மேற்கொள்ளும் பல்கலைக்கழகம் சார்ந்த மாணவர்கள், தமது ஆய்வுகளில் கைலாசபதியின் எழுத்துக்களைப் பெரிதும் எடுத்துக்காட்டுக்களாகத் தந்துள்ளனர் என்பதைப் பரீட்சகர்கள் கூறியுள்ளனர். கைலாசபதி அவர்கள், திறனாய்வாளர் என்ற வகையில் தமிழுலகிலே பெரிதும் கணிக்கப்பட்டுள்ளார். அவருடைய ஆய்வுச்செயற்பாடுகளில் அவரது திறமையும், கண்ணோட்டமும் வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடிகின்றது. அவர் தமிழிலக்கியப் பரப்பு முழுவதையும் கற்றறிந்து ஆய்வு முடிவுகளை முன்வைத்தார். அவற்றை மார்க்சியம், சமூகவியல் சார்ந்த திறனாய்வு அணுகுமுறைகளுடன் வெளிப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கைலாசபதி ஒரு திறனாய்வாளர் என்ற வகையில் அனைத்துலக இலக்கியங்கள் முதல், தமிழரின் பிரதேச மண்வாசனை இலக்கியங்கள் வரை அனைத்து இலக்கியப் பரப்பையும் கருத்திற்கொண்ட சிந்தனையாளராவர். அவர் ஒரு மார்க்சியச் சமூகவியல் சிந்தனையாளர் என்ற வகையிலே ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் விடுதலைக்கான போராட்டத்தில் கலை, இலக்கியம் என்பன ஆற்றக்கூடிய பங்களிப்பில் திடமான நம்பிக்கை கொண்டவர். இவ்வாறு பரந்துபட்ட தளத்தில் நின்று நம்பிக்கையுடன் செயற்பட்ட அவர் திறனாய்வை ஒரு அறிவாயுதமாகக் கருதியவர்" (சுப்பிரமணியன்.நா, 1999: ப.60). இவ்வாறு பேராசிரியர் நா. சுப்பிரமணியன் எடுத்துக்கூறியுள்ளதன்மூலம் கைலாசபதியவர்களின் இலக்கியத்தளம், திறனாய்வுத்தளம், அறிவுத்தளம் ஆகியவற்றை அறிய முடிகின்றது. ஈழத்தமிழ் இலக்கியத்தில் நவீன சிந்தனைகளைப் புகுத்தித் திறனாய்வுத் துறையை மேம்படுத்தியதில் முன்னிலையில் திகழ்பவர் இவர் என்பதில் ஐயமில்லை.

### 3.7.2. பேராசிரியர் கா. சிவத்தம்பி

பேராசிரியர் கைலாசபதியைப் போலவே பேராசிரியர் கா. சிவத்தம்பி (1933 – 2014) அவர்களும் சமூகவியற் கொள்கைகளின் அடிப்படையில் மார்க்சிய இயங்குதளத்தில் செயற்பட்ட இலக்கியவாதி ஆவார். ஐந்து ஆங்கில நூல்கள் உட்பட 38 நூல்கள் வரையில் எழுதியுள்ள இவர் பல்வேறு துறைகளிலும் தனது ஆளுமையைப் பதித்தவர். நூற்றுக்கணக்கான கட்டுரைகளைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தந்தவர். பேராசிரியர் கைலாசபதியையும் இவரையும் சேர்த்துத் தமிழ் இலக்கிய உலகம் "இரட்டைக் கலாநிதிகள்" என அழைப்பதுண்டு. கைலாசபதி அவர்களைக் காட்டிலும் முப்பத்தொரு ஆண்டுகள் கூடுதலாக வாழ்ந்த இத்தமிழறிஞர், தமிழ் இலக்கிய உலகில் சாததித்தவை ஏராளம். பழந்தமிழ் இலக்கியம் முதல் நவீன தமிழ் இலக்கியம் வரை இவர் தொடாத பகுதியே கிடையாது எனலாம். தமிழகத்தில் திரு. வி.க. விருதுபெற்ற தமிழ்ப்புலமையாளர் இவர். 2010இல் தமிழக முதல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர் மு.கருணாநிதியால் கோவையில் நடத்திய செம்மொழி மாநாட்டிற்கு, சிறப்பான முறையில் அழைக்கப்பட்டவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி. தமிழில் புதிய புதிய கலைச்சொற்களை உருவாக்கித் தந்ததன்மூலம் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தியவர். நாடகங்களையும் திரைப்படத் துறையையும் தம்முடைய ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டவர். இலக்கிய வரலாறு எழுதும் முறைகளில் அறிவியல் நிலைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இன்று ஏற்பட்டு வரும் நவீனச் சிந்தனை முறைகள் பற்றியும், அவை தமிழ் இலக்கியத்தில் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பது பற்றியும் விரிவாகப் பேசியுள்ளார். பேராசிரியர் கா.சிவத்தம்பியின் விமர்சனங்கள்: வரலாறு, சமூகம் என்ற இருநிலைப்பட்ட இயங்கியல் தளங்களினூடே நகர்ந்து, பார்வை வீச்சினை ஆழ – அகலப் படுத்தியுள்ளன. இவருடைய நூல்களில் பொதுவாக அரசியல், சமூக, பொருளாதாரப் பின்னணிகள் அதிகம் பேசப்படுவதையும் ஒருவிதமான மார்க்சிய சிந்தனைத் தளத்தின் விரிவான பார்வை வீச்சினையும் அவதானிக்க முடிகின்றது.

ஈழத்திலும், தமிழகத்திலும் இவரது அணிந்துரைகள், கருத்துரைகளைத் தாங்கி வந்த நூல்கள் ஏராளம். தமிழ் இலக்கியத் திறனாய்வின் புதியபுதிய பரிமாணங்களுக்கு ஏற்ப தனது சிந்தனைகளைச் செலுத்தியவர். "நவீனத்துவம் – தமிழ் – பின்நவீனத்துவம்" (2001), "விமர்சனச் சிந்தனைகள்" (2001) ஆகிய நூல்கள் இங்கு குறிப்பிடத்தக்கவை. "இலக்கியத்தில் முற்போக்குவாதம்" (1978), "இலக்கணமும் சமூக உறவுகளும்" (1981), "இலக்கியமும் கருத்து நிலையும்" (1981), "தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும்", "ஈழத்தில் தமிழிலக்கியம்", "யாழ்ப்பாணத்தில் புலமைத்துவ மரபு" முதலான நூல்கள் இவரது திறனாய்வுச் சிந்தனைகளுக்கும், எழுத்தாற்றலுக்கும் எடுத்துக்காட்டுக்களாகும். எதையும் கூர்ந்த மதிகொண்டு நோக்கிப் புதுமை படைப்பவர். இவருடைய மொழிநடை சற்றுக் கடினமாக இருந்தாலும், புதியன பிறப்பிக்கும் ஆவல் அதில் பிரதிபலிக்கும். இவரது இலக்கிய விமர்சனங்கள், படைப்புக்களின் அக ரீதியான, புற ரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களை மையப்படுத்தி, படைப்பாளியின் பலம், பலவீனங்களைத் துருவி ஆராய்ந்து சொல்ல வேண்டியதைச் சொல்லுவதாக அமைந்திருக்கும். தமிழ்கூறும் இலக்கிய உலகில் பேராசிரியர்களான கைலாசபதியும், சிவத்தம்பியும் மார்க்சியத் தளத்தில் நின்று செயற்பட்டபோதும், பிற்காலத்தில் தமிழிலக்கியத்துறையில் புகுந்துவிட்ட நவீனத்திறனாய்வு முறைகளை உள்வாங்கிக் கருத்துரைக்கக்கூடிய வாய்ப்புச் சிவத்தம்பி அவர்களுக்கே கூடியளவு கிட்டியிருந்தது. நிறைவாழ்வு வாழ்ந்த அவர், நிறையவே எழுதி இலக்கியப் பணி புரிந்திருந்தார். தமிழிலக்கியத்தையும் திறனாய்வையும் உலகளாவிய விதத்தில் எடுத்துச் சென்றதில் கைலாசபதியைவிட சிவத்தம்பி ஒருபடி மேல் என்று சொல்லத்தக்கதாக அவருடைய பணிகள் அமைந்திருந்தன.

ஈழத்துத் தமிழிலக்கிய விமர்சனம் முனைப்புப் பெற்றமைக்குப் பல்வேறுபட்ட காரணிகள் பங்களித்தாக "ஈழத்தில் தமிழிலக்கியம்" என்ற நூலில் பேராசிரியர் சிவத்தம்பி கூறியிருப்பது அவதானிக்கத்தக்கது. அவை கீழ்வருமாறு:

- தனிநபர் இலக்கிய முயற்சிகளும், அவற்றைச் சமூகப் பண்பாட்டுக் கோலத்துடன் இணைத்துப் பார்க்கும் ஆர்வமும் காணப்பட்டமை.
- தமிழகத்து இலக்கியப் பயில்வாளர்களிலும் பார்க்க, ஈழத்துத் தமிழிலக்கியப் பயில்வாளர்கள், பிரதேச – பிற பண்பாட்டுப் பாரம்பரியங்களை அறிவதற்கு அதிக வாய்ப்புக்கள் இருந்தமை.
- ஈழத்துப் பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு.
- ஆக்க இலக்கியப் படைப்பாளர்களுக்கும் – விமர்சகர்களுக்குமிடையே பேணப்பட்ட நன்மைத்தன்மையுடைய பரஸ்பர நல்லுறவு.

இக்காரணிகளே ஈழத்துத் திறனாய்வு ஓர் புதிய வளர்ச்சி நிலையை அடைவதற்கு ஏதுவாக அமைந்தன என்பதைச் சிவத்தம்பி சுட்டிக்காட்டியிருப்பது அவர்கால ஈழத்துத் தமிழ்த்திறனாய்வுப் போக்கினைக் காட்டுகின்றது. மேலும், கைலாசபதியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்புக்காரணமாகவே, தான் இலக்கியத் திறனாய்வில் ஈடுபாடு கொள்ள ஆரம்பித்ததாகக் கூறும் சிவத்தம்பி, 1954ஆம் ஆண்டிலிருந்து முற்போக்கு எழுத்தாளர் சங்க ஆரம்ப காலத்தில், மார்க்சியக் கோட்பாட்டைக் கருத்திற்கொண்டு செயற்பட்டு வந்தார். கைலாசபதியின் ஒரு கட்டுரை பற்றி "எழுத்து" சஞ்சிகையில் க.நா.சு மோசமாக எழுதிவிட்டமையால் அதனை எதிர்த்து, சிவத்தம்பி எழுதிய விமர்சனக் கட்டுரை தமிழ்நாடு சம்பந்தப்பட்ட அவரது முதலாவது ('புதுமை இலக்கியம்' சஞ்சிகையில்) கட்டுரையாக அமைந்தது. 'பொருளும் விமர்சனமும்' என்ற தலைப்பில் அது அமைந்திருந்தது. பின்னர் சிவத்தம்பியின் "விமர்சனச் சிந்தனைகள்" நூலில் இடம்பெற்றது. அதிலிருந்து விமர்சனத்தறையில் ஏற்பட்ட ஆர்வமும், தொ.மு.சி ரகுநாதனுடன் ஏற்பட்ட தொடர்பும் இலக்கிய விமர்சனம் தொடர்பாக இலங்கையிலும், தமிழகத்திலும் செயற்பட இவரைத் தூண்டியது.

"விமர்சனக்கட்டுரையில் செய்த முக்கியமான விடயமென நாங்கள் கருதுவது, பழைய தமிழிலக்கியத்தையும், நவீன இலக்கியம்போன்ற ஒரு விமர்சன நெறிக்குள் கொண்டு வந்தது. நவீன காலத்துக்கு முற்பட்ட இலக்கியங்களை அப்படிப் பார்த்தோம். 'திருவாசகம் காட்டும் மணிவாசகர்' இதில் எதைக்கூறினேன் என்றால், மணிவாசகரை ஒரு கவிஞனாக 'மதமும் கவிதையும்' என்ற நூலிலும் இது கூறப்படுகின்றது. Religion And Poetry இல், சுந்தரருடைய, சம்பந்தருடைய, மாணிக்கவாசகருடைய கவித்துவத்தை மறந்து, அவற்றை வெறும் பாராயணமாகக் கொள்ளக்கூடாதென்று கூறியுள்ளேன். மேல் நாட்டில் அப்படிப் பார்ப்பதில்லை. North Rop Frye என்பவர் Bible as Litertature எனப் பைபிளை ஓர் இலக்கியமாகப் பார்க்கிறார். குர்ஆனின் வாசகங்களில் இருக்கும் திறம் பற்றி எத்தனையோ ஆசிரியர்கள் எழுதியிருப்பதை நான் பார்த்திருக்கிறேன்." (சிவத்தம்பி.கா, 'ஞானம்' இருநூறாவது இதழ், நேர்காணல், 2017: ப.142) இவ்வாறு நவீனகாலத்திற்கு முற்பட்ட இலக்கியங்களை விமர்சனத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்படுத்தியது பற்றிப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளமை அவரின் திறனாய்வுப்போக்கைக் காட்டுகின்றது.

### 3.7.3. பேராசிரியர் எம்.ஏ. நு∴மான்

பல்கலைக்கழக மட்டத்தில் இருந்து தோன்றிய புலமையாளர்களில் எம்.ஏ.நு∴மானும் (1944) ஒருவர். "திறனாய்வுக் கட்டுரைகள்" (1985), "மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்" (1987), "சமூக யதார்த்தமும் இலக்கியப் புனைவும்", "பாரதியின் மொழிச்சிந்தனைகள்" (1999), "மொழியும் இலக்கியமும்" (2006) ஆகியவை உட்பட 16 நூல்கள் வரையில் இவர் எழுதியுள்ளார். தமிழகத்திலும், ஈழத்திலும் நன்கு அறிமுகமான இப்பேராசிரியர் ஆரம்ப காலத்தில் கவிதை, சிறுகதை போன்றவற்றில் அதிக நாட்டம் செலுத்தினார். பின்னர் திறனாய்வு, மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளில் கரிசனை காட்டி வருகிறார். சமூகவியல் ஆய்வில், முன்னர் சொன்ன கைலாசபதி, சிவத்தம்பி போன்று அக்கறை கொண்ட இவர், இலக்கியத்தில் மொழியியல், நடைச்சிறப்பு, அழகியல் ஆகியவை பற்றிய அக்கறையும் வேண்டும் என வலியுறுத்தியவர்.

"என்னை மார்க்சிய விமர்சகன் என்பதைவிட, ஒரு நடுநிலையான விமர்சகன் என்பதையே விரும்புகின்றேன். மார்க்சிய விமர்சனத்திலிருந்த வரட்டுப்போக்கை விமர்சித்திருக்கிறேன். அதன் விளைவுதான் 'மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்' என்ற நூலாகும். இலக்கியம் பற்றிய விமர்சனப் பார்வைகளும், கொள்கைகளும் பல. அதில் ஒன்றுதான் மார்க்சியப் பார்வை. இலக்கியத்தின் சமூக வேர்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தது. இலக்கியத்தை ஒரு உன்னத நிகழ்வாக அமைத்து ஒரு சமூக உற்பத்தியையும் (Sociol Product) நிறுவியதில் மார்க்சியத்தின் பங்கு முக்கியமானது. ஆயினும் இலக்கியத்தில் எல்லா அம்சங்களையும் அதனால் விளக்கிவிட முடியுமென்று நான் நம்பவில்லை. பல்வேறு விமர்சனக் கொள்கைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்குப் பயனுள்ளவற்றை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் நம்புகின்றேன்" (வல்லினம், 25. 07. 2015).

இவ்வாறு மலாயாப் பல்கலைக்கழகத்தில் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றும்போது நு.ஃமான் அவர்கள், நவின் என்பவருக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். 1960களில் கவிதை, சிறுகதைமூலம் இலக்கியத்துறையில் எழுத்தாளராக நுழைந்தவர், 1980களில் ஆராய்ச்சி, விமர்சனத்துறைகளில் ஈடுபாடு காட்டத் தொடங்கினார். மார்க்சியத்தை ஒரு அரசியலாக அன்றி, சமூகக்கோட்பாடாக நோக்கினால் அதன் ஒளியில் இன்றைய சமூகத்தையும் அதன் கலாசார நடவடிக்கைகளையும் புரிந்து கொள்ளமுடியும் என்கிறார். மேலும், இன்றைய சமூகத்தைப் புரிந்து கொள்ளாமல் அதன் இலக்கியத்தையும், ஏனைய பண்பாட்டுக் கூறுகளையும் புரிந்துகொள்ள முடியாது என்கிறார். நாம் மரபுக்கும், நவீனத்திற்கும் இடையில் சிக்கித் தவிக்கிறேன் எனக்கூறும் இவர், இவற்றின் வெளிப்பாடாகவே இன்றைய இலக்கியத்தைப் புரிந்துகொள்கிறோம் என்கிறார். அமைப்பியல் வாதம் பற்றி விமர்சிப்பதில் அக்கறை கொண்டவர் நு.ஃமான். பின்நவீனத்துவச் சிந்தனைகள் உலகமயப்பட்ட முதலாளித்துவத்திற்கு அனுசரணையாக அமைகிறது என்கிறார். தமிழ் இலக்கண நூல்களையும் எழுதியுள்ள இவர், ஒரு மொழியியல் பேராசிரியராவார். ஓர் இலக்கியப் படைப்புக்கான இடம் காலத்துக்குக்காலம் வேறுபடுகின்றது என்பதே விமர்சன நோக்குத்தான் எனக் குறிப்பிடும் இவர், இலக்கியத்தின் உடன் விளைவுதான் இலக்கிய விமர்சனம் என்கிறார். இலக்கியம் தோன்றும்போது விமர்சனமும் தோன்றியிருக்கிறது என்பது உண்மை. காலந்தோறும் இலக்கியப்பொருளிலும், வடிவத்திலும் ஏற்படும் வேறுபாடுகள்தான் இலக்கியக்கோட்பாடுகள், விமர்சனப் பார்வைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றன. இலக்கியத்தின் உள்ளார்ந்த அம்சங்களையும், அதன் இயக்கவிசையையும் புரிந்துகொள்வதற்கு விமர்சனம் தேவைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தின் தேவையும், வளர்ச்சியுமே விமர்சனத்தின் தேவையையும், வளர்ச்சியையும் தீர்மானிக்கின்றது. இவ்வாறு வல்லினம் கட்டுரையில் தனது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார் பேராசிரியர் நு.்.மான்.

தமிழகத்தில் வெளிவந்த படைப்புகளை உற்றுநோக்கிப்படித்து திறனாய்வு செய்துள்ளார். 'ஈழத்துக் கவிதை இதழ்கள்' என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரை ஈழத்தில் வெளிவந்த, கவிதைப்பணியாற்றிய பல இதழ்களை அறிமுகம் செய்கிறது. சமகாலப் படைப்புகளான புதினங்கள், சிறுகதைகள் பற்றிய திறனாய்வும் செய்துள்ளார். 'ஈழத்துத் தமிழ்நாவல்களின் மொழி' என்னும் கட்டுரையில் ஈழத்துத்தமிழ் நாவலில் இடம்பெற்றுள்ள மொழியின் பரிணாமத்தைச் சான்றுகளுடன் விளக்கியுள்ளார். 'நவீனத் தமிழ்க் காவியங்கள்' என்ற தலைப்பில் ஈழத்தில் தோன்றிய நவீனத் தமிழ்க்காவியங்கள் பற்றி ஆராய்ந்துள்ளார். ஈழத்தில் தோன்றிய 'பா நாடகங்கள்' பற்றியும் ஆராய்ந்து எழுதியுள்ளார். நு.்.மான் கல்வித்துறைக்குரிய புறவயமான ஆய்வுமுறைமையை, இலக்கியம் உள்ளிட்ட தளங்களிலும் பயன்படுத்தினார். அடிப்படையில் மார்க்சியச் சார்புள்ள இலக்கிய நோக்குக் கொண்டவராயினும் கைலாசபதி, சிவத்தம்பி போன்றவர்களிடமுள்ள கட்சிச்சார்பு நிலைப்பாட்டுக்குப் பதிலாக, புறவயமான ஆய்வுச்சட்டகத்தையே எப்போதும் கையாண்டார். ஆகவே தனிப்பட்ட ரசனை அல்லது தனிப்பட்ட சார்புநிலைகளுக்கு அப்பாற்பட்ட சமநிலை கொண்டவையாக நு.்.மானின் ஆய்வுகள் அமைந்தன. 1985 முதல் தமிழின் பின்நவீனத்துவச் சிந்தனைகள் அனைத்தும் நிராகரிக்கும் பார்வையுடன் முன்வைக்கப்பட்டபோது, அந்த மிகையான ஆர்வத்துக்கு எதிராக, நிதானமான கல்வித்துறை சார்ந்த முறைமையை முன்வைத்து விவாதிப்பவராக நு.்.மான் செயற்பட்டார்.

நு.்.மானின் மொழியியல் ஆய்வுகள் அத்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகளாகக் கருதப்படுகின்றன. மொழியின் வளர்ச்சிப் பரிணாமத்துக்கு ஏற்ப அதை மறுவரையறை செய்து இலக்கணப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியில் முக்கியமான பங்களிப்பை ஆற்றியிருக்கிறார். நு.ஃ.மானின் இலக்கியப் பங்களிப்பு அவர் தொடர்ச்சியாக ஈழத்துக் கவிதைகளை தமிழகச் சூழலில் அறிமுகம் செய்துகொண்டே இருந்ததிலும், பாலஸ்தீனக் கவிதைகளை மொழியாக்கம் செய்ததிலும் உள்ளது. 1980 முதல் தமிழில் புதுக்கவிதை எழுதியவர்களில் குறிப்பிடத்தக்கவராக இருந்த நு.ஃ.மான் இலங்கையின் பிற்கால அரசியல்சூழல் காரணமாகவும், தன் ஆய்வுப்பணிகள் காரணமாகவும் அதில் தீவிரமாக ஈடுபடவில்லை என்பதே உண்மை.

### 3.7.4. பேராசிரியர் அ. சண்முகதாஸ்

பேராசிரியர், 1969 – 1970 காலப்பகுதியில், எடின்பரோ பல்கலைக்கழகத்தில், 'பொது மொழியியல்' பற்றிய கற்கைநெறியில் 'டிப்ளோமா'ப் பட்டம் பெற்றவர். அதன்பின் 1970 – 1972 வரையான காலப்பகுதியில், இப்பல்கலைக்கழகத்திலேயே "Phonology of the Verbal forms in Colloguial Ceylon Tamil" என்ற தலைப்பில் Dr. Rom. E. ஆசர் என்பவரின் கீழ், மொழியியல் சம்பந்தமான ஆய்வை மேற்கொண்டு 'கலாநிதி'ப்பட்டம் பெற்றவர். இவருடைய திறனாய்வுப் போக்கை வெளிப்படுத்தக்கூடிய முக்கிய சில நூல்களாக: "நமது மொழியின் இயல்புகள்", "தமிழ்மொழி இலக்கண இயல்புகள்", "கிறிஸ்தவத் தமிழ் இலக்கிய வளர்ச்சி", "ஈழத்தில் திறனாய்வு முன்னோடி -- பேராசிரியர் வி. செல்வநாயகம்", "ஈழகேசரித்தமிழ்", "இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர்களின் தமிழ்ப் பணிகள்", "தமிழின் பாவடிவங்கள்", பழந்தமிழர் வாழ்வியலில் நிலம்" முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

பேராசிரியரவர்கள் மரபிலக்கணப் பின்னணியில் "தமிழ்மொழியின் இலக்கண இயல்புகள்" (1982) எனும் நூலினை எழுதியுள்ளார். மரபிலக்கண அறிவையும், மொழிசார்ந்த அறிவையும் இந்நூல் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளமையைக் காணமுடிகின்றது. இலக்கணக் கல்விக்கு மொழியியலின் அறிவு என்பது முக்கியமானதாகும். இங்கு அவர் மரபு இலக்கணத்தையும், நவீன மொழியின் இலக்கணத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கின்றார். எழுத்து, சொல், வாக்கியம் என்றவகையில் இலக்கணம் அமைய வேண்டும் என்பதை இங்கு வலியுறுத்தும் நோக்கு முக்கியமானதாகும். இந்நூலில் தமிழ் ஒரு திராவிட மொழி, இலக்கணம்: நமது மரபும் நவீன நோக்கும், தமிழ் இலக்கணக் கோட்பாடுகளின் அடிப்படைகள், எழுத்துப்பற்றிய சிந்தனைகள், புணர்ச்சி விதிகளின் அடிப்படைகள், சொல்லும் சொற்பாகுபாடும், தமிழ் இலக்கண வகைமைகள்: பண்பும் பணியும், தமிழ் வாக்கிய அமைப்பு, சொல்லும் பொருளும் முதலிய தலைப்புக்களில் தன்னுடைய கருத்துக்களை முன்வைத்துள்ளார். இலக்கணம், திறனாய்வு நோக்கில் நோக்கப்பட வேண்டும் என்பதையே இந்நூல்மூலம் வலியுறுத்துகின்றார் பேராசிரியர்.

மேலும், இவருடைய "தமிழின் பா வடிவங்கள்" (1998) எனும் நூல் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். இந்நூலில் காலந்தோறும் மாறிவரும் பாவடிவங்கள் பற்றியும், பாவினங்கள் பற்றியும் கூறியுள்ளமையைக் காணமுடிகின்றது. இலக்கிய வரலாற்று நோக்கில் பாவினங்கள் குறித்து ஆய்வு செய்கின்றார். இந்நூலில் வரலாறும் இலக்கியப் பின்னணியும், ஆசிரியப்பாவின் வளர்ச்சி நிலைகள், வெண்பாவும் இதன் வளர்ச்சி நிலைகளும், பாவினம் பிறந்தது, பாவினங்களில் நாட்டுப்புறப்பாடற் செல்வாக்கு உள்ளிட்ட பல விடயங்கள் திறனாய்வு நோக்கில் ஆராயப்பட்டுள்ளன. அத்துடன், "தமிழ்மொழியும் யப்பானிய மொழியும் இலக்கண ஒப்புமை" (1990) என்ற மொழி ஒப்பீட்டாய்வு சார்ந்த நூலும் முக்கியமானதாகும். இந்நூலாக்கப்பணியினைத் துணைவியார் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களுடன் இணைந்து மேற்கொண்டிருந்தார். இந்நூலில் வகைநிலையான ஒப்புமை, ஒப்புமை நோக்கில் யப்பானிய மொழியின் துணைவினைகளும் தமிழ்மொழியின் துணைவினைகளும் உள்ளிட்ட விடயங்கள் பேசப்பட்டுள்ளன. அத்துடன் "யப்பானிய மொழியினதும் தமிழ் மொழியினதும் ஒலிப்புமுறை" (1985) எனும் ஆய்வும் முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மொழியியல் சார்ந்து 'மொழியியல் நோக்கில் நாவலர்', 'சுவாமி ஞானப்பிரகாசரும் மொழியாய்வும்', 'இலங்கையில் தமிழ் கற்பித்தல்' (கலாநிதி மனோன்மணியுடன் இணைந்து எழுதியது), 'சுவாமி விபுலானந்தரும் ஈழத்துத் தமிழும்', 'Some Aspects of the Syntax of the Inscriptional Tamil', 'Some of Aspects of the Tamil spoken in Sri Lanka', 'Separation of Sri Lanka Tamil from the Continental Tamil', 'Epigraphy and Sri Lankan Tamil Dialects' முதலான கட்டுரைகளை எழுதியுள்ளார். ஜப்பானிய தமிழ் உறவுமுறை பற்றிய கட்டுரைகளில் 'தமிழர் – யப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல்' (கலாநிதி மனோன்மணியுடன் இணைந்து எழுதியது), 'திராவிட மொழியாய்வின் இன்றைய நிலையில் தமிழ் – யப்பானிய உறவு' முதலியவை சிறப்புக்குரியவையாகும். மேலும், 'கண்ணன் பாட்டில் அணிநயம்', 'ஈழத்து நவீன தமிழ் இலக்கியம்', 'புறநானூறு காட்டும் தமிழர் சால்பு: ஒரு மீள்பார்வை', 'இராமநாதனின் செந்தமிழ் இலக்கணம்', 'Reconstruction and Redevelopment of Culture in northern Sri Lanka', 'Social Science and modern Tamil Fiction', 'The Impact of Ramayana and Mahabharata on Sri Lankan Tamil folklore' முதலிய கட்டுரைகளும் இவருடைய விமர்சனப் புலமையைக் காட்டுகின்றன. பேராசிரியரவர்கள் இலக்கண, இலக்கிய, சமய, நாட்டாரியல் நோக்கில் தனது ஆய்வுகளை மேற்கொண்டிருந்தாலும், 'மொழியியல்' ஆய்வுக்களமே தமிழுலகில் ஓர் தனியான இடத்தினைப் பெற்றுக்கொடுத்தது. இதற்கு அவரது பன்னாட்டு மொழிப்புலமையும், மொழியியல் பற்றிய அவரது படைப்புலகுமே காரணமாகும்.

### 3.7.5. பேராசிரியர். சி. தில்லைநாதன்

1950களின் இறுதியிலும். 1960களின் தொடக்கத்திலும் பேராதனைப் பல்கலைக்கழக மாணவராக விளங்கிய சி. தில்லைநாதன் இயல்பாகவே ஆக்க இலக்கியத்துறை மட்டுமன்றி விமர்சனத்துறையிலும் ஈடுபாடு காட்டி வருகிறார். இலக்கிய விமர்சனத் துறையில் சமூகவியல் அணுகுமுறையைக் கையாண்டுள்ளமையையும் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலமாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இலக்கிய விமர்சனம் பற்றி மாணவர்களுக்கு விரிவுரைகளையும் நிகழ்த்தி வந்தவர். இவரின் "வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை", "இலக்கியமும் சமுதாயமும்" ஆகிய நூல்கள் முக்கியமானவை. இவரின் விமர்சனக் கட்டுரைகள் இலக்கியத்திற்கும் – சமூகத்திற்கும் இடையிலான தொடர்பினைப் பேசுபவையாகவே இருக்கின்றன. இலக்கியமென்பது சமூகத்தின் விளைபொருள். எனவே இலக்கியத்தை சமுதாய இயக்கப்போக்கினின்றும் பிரித்தறிய முடியாது என்பது இவரின் இலக்கியக் கொள்ளையாகும். இதுவே இவரின் விமர்சனப் படைப்புகளின் அடிநாதமாகவும் அமைந்துள்ளது. இவரது விமர்சனக் கட்டுரைகள் இலக்கிய விமர்சனங்களாக அமைந்தவைகளாகவும், இலக்கிய வரலாற்று நோக்கில் எழுதப்பட்டவைகளாகவும், பழந்தமிழ் – நவீன இலக்கியங்கள் பற்றிய விமர்சன நோக்குக் கொண்டவையாகவும், இலக்கியம் குறித்த பல்வேறான சிந்தனைகளை வெளிப்படுத்துவனவாகவும், படைப்பாளிகளின் படைப்புத்திறன் பற்றியனவாகவும் அமைந்துள்ளன. மேலும், இலக்கியத் திறனாய்வு தொடர்பான கட்டுரைகளில் 'மரபு பற்றிய மார்க்சீய நிலை', 'இலக்கியமும் திறனாய்வும் மாணவர்களும்' முதலிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கன. தமிழ் இலக்கிய வரலாற்று நோக்கில் அவரால் எழுதப்பட்ட கட்டுரைகளும் உள்ளன. 'தமிழ் இலக்கிய வடிவங்கள்', 'இலக்கியமும் சமுதாயமும்', 'இலக்கிய வரலாறு கற்றல்' முதலியவை முக்கியமான கட்டுரைகளாகும்.

பழந்தமிழ் இலக்கியங்கள் தொடர்பாகவும் பல்வேறுபட்ட விமர்சனக் கட்டுரைகளை எழுதியுள்ளார். 'சங்க இலக்கியமும் மனிதாபிமான சிந்தனைகளும்', 'இறைக்காதல்', 'கவியரசும் புவியரசும்' முதலியவை அவதானிக்கத்தக்கன. நவீன இலக்கியங்கள் பற்றியும் இவரின் சிந்தனைகள் பரந்து விரிந்தவையாகும். நவீன இலக்கிய வாதிகளான மாதவையா, பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை, புதுமைப்பித்தன், மஹாகவி முதலியோர் பற்றிக் கட்டுரைகளும் எழுதியுள்ளமை அவதானிக்கத்தக்கது. 'பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்த தேர்ப்பாகன்', 'பண்டை இலக்கிய மரபுகளும் பாரதியும்', 'பிறர் துயர் துடைக்க விழைந்த பாரதி'. 'பாரதி கண்ட கண்ணன்', 'விநாயகரைப் பாடும் பாரதி' முதலிய கட்டுரைகள் பாரதி தொடர்பாக எழுதப்பட்டவையாகும். இவரால் ஒப்பியல் மற்றும் ஒப்புமை நோக்கில் எழுதப்பட்ட கட்டுரைகளாக, 'இரு தேசியக் கவிஞர்கள்: இக்பாலும் பாரதியும்', 'அனுபவித்த உணர்வும் அறிந்த உண்மையும்', 'புதிய ஆத்திசூடியொன்றினைப் பாரதி புனைந்ததேன்?' முதலியவற்றைக் குறிப்பிடலாம். அதுமட்டுமன்றி 'கருணைமிகுந்த கவிமணி', 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்' முதலான கட்டுரைகளும் விமர்சனப்பாங்குடைய கட்டுரைகளாகவே காணப்படுகின்றன. 'மறுமலர்ச்சி' எனும் கட்டுரை நவீன இலக்கியத்தோடு தொடர்புடைய கட்டுரையாகக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இவரால் எழுதப்பட்ட 'சுவாமி விபுலாநந்தரின் ஆளுமையும் பெறுமானங்களும்', 'விபுலாநந்தர் கவித்திறன்', 'சூழலும் சமூகமும் பண்பாடும் – சுவாமி விபுலாநந்தர் நோக்கு', 'விபுலாநந்த அடிகளாரின் மானிட நோக்கு', 'சுவாமி விபுலாநந்தரின் தமிழார்வம்' முதலிய கட்டுரைகள், விபுலாநந்தர் பற்றிய விமர்சனப் பார்வையைத் தெளிவாக்குகின்றன. மார்க்சியத்திலும், மனிதாபிமானத்திலும் இறுக்கமான பிடிப்பும், பற்றும் கொண்ட தில்லைநாதன் அவர்கள், உலகில் காலத்திற்குக் காலம் ஏற்படும் புதுமைகளையும், மாறுதல்களையும் அவற்றுக்கான காரணங்களையும் வெளியிடும் இயல்புடையவர். இவரது 'தலைமுறை முரண்பாடு', 'மரபும் மாற்றமும்', 'தமிழ் இலக்கிய வடிவங்கள்' முதலான கட்டுரைகள் சமூக மாறுதல்களோடு தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

### 3.7.6. பேராசிரியர் சி. சிவசேகரம்

பேராசிரியர் சி. சிவசேகரம் (1942) அவர்கள், மார்க்சியச் சித்தாந்தத்தை வரித்துக்கொண்ட ஓர் எழுத்தாளராவார். ஈழத்தின் பிரபலமான பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் தமது கட்டுரைகளை எழுதி வந்திருக்கின்றார். 'இமையவரம்பன்' என்ற புனைபெயரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார். அரசியல், சமூக, இலக்கிய விமர்சகராக அறியப்பட்ட இவரது எழுத்துக்கள் பொருண்மையும், கலை நயமும் மிக்கவை. ஒரு பகுதியினருக்குக் கசப்பாக இருந்தாலும், இவரது விமர்சனக் கருத்துக்களைப் பலர் வரவேற்கிறார்கள். தமிழ்த்தேசியவாதிகள் பற்றிய இவரது விமர்சனங்கள் அடிக்கடி ஈழத்துப் பத்திரிகைகளில் வெளிவந்தவண்ணமே உள்ளன. இடதுசாரிச் சிந்தனையாளர்களின் இலக்கியப் படைப்புகளுக்கு இவர் அளித்திருக்கும் அணிந்துரைகள், கருத்துரைகள் விமர்சன ரீதியில் பெறுமதியானவை. இவரது கட்டுரைகளில் நவீன திறனாய்வுத் துறைகள் பற்றியும் எடுத்தாண்டிருக்கிறார். 'விமர்சகர்கள் என்றால் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதுவோர் மாத்திரமன்றி, விமர்சனம் என்ற பெயரில் வியாபாரக் கும்பல்கள் நடாத்துகின்ற விற்பனைக் கூடங்களில் துணிந்து நின்று விமர்சிப்பதும் விமர்சனம்தான்' என்ற கருத்துப்போக்குடையவர் சிவசேகரம் அவர்கள். மார்க்சியத் தளத்தில் திறனாய்வுத்துறையிலான இவரது பங்களிப்புக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவர் எழுதிய 'ஒரு பழம் புதுக்கவிஞர்' (தாயகம், 1984) எனும் கட்டுரை தருமு சிவராமுவின் கவிதைகள் பற்றிய விமர்சனமாக இருக்கிறது. அதில் பின்வருமாறு கூறுகிறார்.

"தருமு சிவராமுவின் கவிதைகள் பற்றி விமர்சிப்பதில் அவற்றின் உள்ளடக்கம், கவித்துவம் என்பன பற்றியே எழுத விரும்புகிறேன். அவரது இலக்கியக் கொள்கையையும், சமுதாயப் பார்வையையும் முடிந்தவரை அவரது கவிதைகள்மூலமே காணமுனைகிறேன். அவருக்கும், அவரது இலக்கிய வட்டத்திற்குமிடையிலான வாதங்களில் கைவைக்க நான் விரும்பவில்லை. தருமு சிவராமு தன் கவிதைகட்கு வழங்கிய முன்னுரைகளைக்கூட என் விமர்சனத்தில் நேரடியாகப் பயன்படுத்தாமலிருக்க முயல்கிறேன்" (1955:ப.21) என்று தருமு சிவராமுவின் கவிதைகள் பற்றிய விமர்சனத்தை முன்வைத்திருந்தார் சிவசேகரம். மேலும், 'முருகையன்: அது அவர்கள்' (வீரகேசரி, 11.01.1991), 'எலும்புக் கூடுகளின் ஊர்வலம் கவிதைத் தொகுதி விமர்சனம் (சுவடுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசி, 1991), 'சிவரமணியின் கவிதைகள்: விமர்சனத்தின் தற்கொலை (சுவடுகள், சித்திரை,1991), 'மறையாத மறுபாதி: புகலிடப் பெண்கள் கவிதைகள் (ஓசை, 1993), 'இருத்தலியல்வாதம் என்கிற எக்சிஸ்டென்ஷியலிசம் தொடர்பாக" (அலை, 1993) முதலிய கட்டுரைகள் இவரின் விமர்சன ஆளுமையின் வெளிப்பாடுகளாகவே இருக்கின்றன.

## 3.8. முக்கியமான விமர்சகர்களின் பங்களிப்பு

### 3.8.1. கவிஞர் இ. முருகையன்

விஞ்ஞானப் பார்வையும், முற்போக்குச் சிந்தனையும். மரபு தழுவிய கவிதைச் செல்நெறியும், ஒடுக்கப்பட்ட உழைப்பாளி மக்கள் மீதான அக்கறையும் கொண்ட இ. முருகையன் (1935 – 2009), ஈழத்து நவீனத் தமிழ்க் கவிதை உலகில் திருப்பு முனையை ஏற்படுத்திய ஒருவராகக் காணப்படுகின்றார். க. கைலாசபதி அவர்களுடன் இணைந்து எழுதிய "கவிதை நயம்" இவரது திறனாய்வுச் சிந்தனைகளுக்கு ஒரு உதாரணம். இந்நூல் பற்றி முன்னுரையில் குறிப்பிடும்போது, "கவிதை நயத்தல் என்பது முடிவற்ற பயிற்சி ஆகும். அதனைக் கருதியே 'நவில் தொறும் நூல் நயம்' என்றனர் வள்ளுவர். 'அறிதொறும் அறிதொறும் அறியாமை கண்டறிதல்' என்னும் கற்றல் விதி, கவிதையையும் உள்ளடக்கியதுதான். இவ்வுணர்வுடன் இயற்றப்பட்டதே இந்நூல்" என்கிறார் முருகையன். இந்நூலில் படைப்பும் நயப்பும், உவமையும் உருவகமும், கற்பனையின் பங்கு, ஓசைமேல் ஆசை, சொல்வளம், பரவசமும் பகுப்புணர்வும், கவிதையின் உயிர் முதலிய தலைப்புக்களில் கவிதை பற்றிய திறனாய்வினை முன்வைத்துள்ளார். பல்கலைக்கழக மாணவர்கள், இலக்கியக் கோட்பாடுகளிலும் பார்க்க கவிதையின் இயல்புகளையே முக்கியமாகத் தெரிந்திருத்தல் வேண்டும். கவிதை பற்றிய மூலாதாரங்களை அறிந்திருக்க வேண்டும் என்ற காரணம் கருதியே, இந்நூலை ஒரு வழித்துணையாக எழுதியுள்ளார் எனலாம். ஏராளமான விமர்சனக் கட்டுரைகளை எழுதியுள்ள இவர், மல்லிகையில் 'கடுங்கோபத்துடன் ஒரு கட்டுரை' என்ற தலைப்பில் இலக்கியச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்ச்சையை ஏற்படுத்தும் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். "இன்றைய உலகில் இலக்கியம்", "ஒரு சில விதிசெய்வோம்" ஆகியன இவரது திறனாய்வு நூல்களுக்குச் சிறந்த உதாரணங்கள் ஆகும்.

### 3.8.2. தருமு சிவராமு (பிரமிள்)

தருமலிங்கம் சிவராமலிங்கம் என்ற இயற்பெயர் கொண்ட பிரமிள் (1939 – 1997) கவிஞராக, விமர்சகராக, ஓவியராக, சிறுகதையாசிரியராக, களிமண் சிற்ப வல்லுனராகத் திகழ்ந்தவர். தருமு சிவராம் என்ற பெயரிலும் எழுதியவர். கூடுதலான காலம் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர். இரசனைமுறை, அழகியல் திறனாய்வை அதிகம் இலக்கியத் திறனாய்வுகளில் பேணியவர். 1960இல் "எழுத்து" பத்திரிகையின்மூலம் எழுதத்தொடங்கியவர். "விமர்சன ஊழல்", "தமிழில் நவீனத்துவம்", "ஸ்ரீலங்காவின் தேசிய தற்கொலை" முதலிய நூல்கள் உட்பட பலநூல்களை எழுதியவர். வெங்கட்சாமிநாதனுக்கும், இவருக்கும் இடையிலான இலக்கியச் சர்ச்சைகள் பற்றியும், அதன் அருவருப்பான போக்குநிலை பற்றியும் பலர் முகஞ்சுழித்ததுண்டு. சிறந்த கவிஞரான இவர், திறனாய்வுத்துறையிலும் தனது பங்களிப்பை நல்கியுள்ளார்.

### 3.8.3. ஏ.ஜே. கனகரட்னா

சிறந்த திறனாய்வாளரான ஏ.ஜே.கனகரட்னா (1934 – 2006) அவர்கள், அலோசியஸ் ஜெயராஜ் என்னும் இயற்பெயரைக் கொண்டவர். பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றிவிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பாட விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். சிலோன் டெயிலி நியூஸ் (ceylon daily news), சற்றடே றிவியூ (Saterday review) ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர். சண்டே றிவியூ (Sunday Review) பத்திரிகையின் இணையாசிரியராக விளங்கியவர். சிறந்த மொழிபெயர்ப்பாளரான இவர், மார்க்சியக் கோட்பாடுகளில் பொருத்தமானவற்றை ஏற்றுக்கொண்டவர். றெஜி ஸ்ரீவர்த்தனாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கங்களை தமிழில் மொழிபெயர்த்து இரு தொகுதிகளாக வெளியிட்டவர். எதையும் விமர்சன நோக்கில் சிந்திக்கும் இப்பெரியார் "மார்க்சியமும் இலக்கியமும்", "மத்து", "செங்காவலர் தலைவர் யேசுநாதர்" ஆகிய நூல்களின் சொந்தக்காரர். இவர் இலங்கைச் சாகித்திய அகாடமி விருதினைத் தமது எழுத்துக்காகப் பெற்றவர். கனடாவிலிருந்து வெளிவரும் "காலம்" சஞ்சிகை சிறந்த தமிழறிஞராக இவரைச் சிறப்பித்தது. 'மார்க்சிய வாதமும் தேசிய இனப்பிரச்சினையும்', 'மௌனி வழிபாடு' (சரஸ்வதி, 1961), 'தேசிய இலக்கியம் : சில சிந்தனைகள்' (மரகதம், 1961), 'The Magic Gobbles Up The Realism' ஆகிய கட்டுரையையும் எழுதியவர். இவரது நூல்களும் , கட்டுரைகளும் திறனாய்வு நோக்கில் எழுதப்பட்டவை. நவீன இலக்கியத்தின் அடிப்படைகளைப் புரிந்துகொண்டு சமகால இலக்கியக்கோட்பாடுகளுக்கு ஏற்றதாக, தான் வரித்துக்கொண்ட சித்தாந்தங்களைத் தழுவி தனது எழுத்துக்களை நகர்த்திச் சென்றவர் கனகரட்னா. "அலை", "மல்லிகை" முதலான பத்திரிகைகளில் இவரது தமிழ்க் கட்டுரைகள் அதிகம் வெளிவந்துள்ளன. அவற்றினூடாக மார்க்சியத் திறனாய்வையும், திறனாய்வின் அடிப்படைகளையும் புரிந்துகொள்ள முடிகின்றது. ஜமுனா ராஜேந்திரன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, மு. புஸ்பராஜன், ஜோன் தம்பிராஜா, பேராசிரியர் எம்.ஏ. நு.ஃமான், மு. பொன்னம்பலம், மேமன்கவி, ஜீ.ரீ. கேதாரநாதன் போன்றோர் இவரைப்பற்றியும், இவரின் சிந்தனைகள் பற்றியும், இவரின் எழுத்தாக்கங்கள் பற்றியும் கட்டுரைகள் எழுதியுள்ளனர். "எல்லாளன் சமாதியும் வரலாற்று மோசடியும்" ஆகிய நூல் கனகரட்னாவின் விமர்சனச் சிந்தனைகளின் வெளிக்காட்டு.

### 3.8.4. சுபைர் இளங்கீரன்

முஹம்மது கலீல் (1927 – 1997) என்ற இயற்பெயரை உடைய சுபைர் (வீட்டுப்பெயர்) அவர்கள் 1947 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மலேசியாவில் 'இளங்கீரன்' என்ற புனைபெயரில் எழுதத்தொடங்கினார். இவர் சிறுகதை, நாடகம், திறனாய்வு முதலான துறைகளில் ஈழத்தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்திற்குப் பாரிய பங்களிப்பைச் செய்தவர். பேராசிரியர் கைலாசபதியை எழுத்துலகிற்கு அழைத்து வந்தவர் இவரே. அரசியல், பொருளாதாரம், சரித்திரம், சமூகம் சார்ந்த பிரச்சினைகளைத் தனது எழுத்துக்களில் பிரதிபலித்தவர். 1954ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திற்கு' மூலவராகவும், அதன் ஸ்தாபன உறுப்பினர்களுள் ஒருவராகவும் செயற்பட்டார். மதம் சார்ந்த கட்டுரைகளையும் விமர்சன ரீதியில் எழுதியுள்ளார். மலேசியாவில் "இனமணி" எனும் வார இதழின் ஆசிரியராகச் செயற்பட்டு, அதனைத் தரமுள்ள கலையிலக்கியச் சஞ்சிகையாக மாற்றியது மட்டுமன்றி முற்போக்கு இதழாகவும் மாற்றினார். 1960ஆம் ஆண்டு "தேசாபிமானி" பத்திரிகை ஆசிரியராகவும் பணிபுரிந்தார். 1961இல் "மரகதம்" என்ற இலக்கியச் சஞ்சிகையைத் தொடங்கித் தரமான படைப்புக்களை அதில் வெளிவரச்செய்தவர். 1965 – 1970வரை "தொழிலாளி", 1971 – 1977வரை "ஜனவேகம்" ஆகிய பத்திரிகைகளுக்கு ஆசிரியராகவும் பணியாற்றினார். மார்க்சியக் கோட்பாடுகளை வரித்துக் கொண்டவரானாலும், மத ரீதியான விடயங்களில் அதனுடன் சமரசம் செய்துகொண்டவர். 'ஆணும் பெண்ணும்' (1954), 'இலங்கையின் இருமொழிகள்' (1957), 'பாரதி கண்ட சமுதாயம்' (1955) முதலிய இவரின் கட்டுரைகள் நூலுருப்பெற்றுள்ளன. "தேசிய இலக்கியமும் மரபும் போராட்டமும்" (1993), "பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துக்களும்" (1992), "ஈழத்து முற்போக்கு இலக்கியமும் இயக்கமும்" (1994) முதலான நூல்கள் இவரின் விரிந்த விமர்சனப் பார்வைக்கு எடுத்துக்காட்டுக்கள். இவரது "நீதியே நீ கேள்" நாவலுக்குப் பேராசிரியர் கைலாசபதி எழுதிய விமர்சனம் ஈழத்தமிழ் இலக்கிய உலகில் திருப்பு முனையை ஏற்படுத்தியது. "தென்றலும் புயலும்" நாவல் தொடங்கி 20க்கும் மேற்பட்ட நாவல்களை எழுதிய இவர் சிறுகதைகளையும், விமர்சனக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஈழத்துத் தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையில் இளங்கீரனின் பங்களிப்புக் காத்திரமானதெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.8.5. எஸ்.பொன்னுத்துரை

அறுபதுகளின் ஆரம்பத்திலேயே, கைலாசபதிக்கும் அவர் தலைமை தாங்கிய முற்போக்கு மார்க்சிய சித்தாந்த அமைப்புக்கும் அவர்கள்மூலம் வெளிவந்த மார்க்சிய விமர்சனத்திற்கும் எதிராகச் சில குரல்கள் எழத்தொடங்கின. இவை தம்மை முழுமையாக இயக்கியவியல் போக்கிற்கு அர்ப்பணித்த ஒப்பீட்டளவில் இளம் தலைமுறையினரைச் சேர்ந்த எழுத்தாளர்களிடமிருந்து எழுந்தன. முதலாவது எஸ். பொ.வினாலும், இரண்டாவது எதிர்ப்புக்குரல் மு. தளையசிங்கத்திடமிருந்தும் எழுந்தது. ஆரம்பத்தில் முற்போக்கு எழுத்தாளர் அணியில் எஸ்.பொன்னுத்துரை இருந்தாலும், அவரது தனிப்பட்ட தேடல் என்பது வெறுமே வர்க்கம், சாதியம் சார்ந்த ஒன்றல்ல. யாழ்பாண இடைநிலை வர்க்கத்து அகவுலகத்தை நுண்மையாகக் காட்சிப்படுத்துவதில் அவர் எழுத்து வென்ற ஒன்று. காமம், வாழ்க்கை சார்ந்து அவர் எழுதியவை, முற்போக்கு எழுத்தாளர்களால் கடுமையாக மறுக்கப்பட்டன. இவை மஞ்சள் பத்திரிகை வகையான எழுத்து என்று அன்றைய காலப்பகுதியில் ஒதுக்கப்பட்டது. இதனால் சீண்டப்பட்ட எஸ்.பொ, முற்போக்கு முகாமிலிருந்து வெளியேறி நற்போக்கு முகாமை உருவாக்கினார். உண்மையில் இந்த முகாம் முற்போக்கு எழுத்தாளர்களைச் சீண்டிப்பார்ப்பதிலே அதிக நேரத்தைச் செலவிட்டது. இதுவோர் ஆரோக்கியமான விவாதமாக இருக்காமல், இலக்கியப் பூசலாகவே அதிகம் இருந்ததாக மு.தளையசிங்கம் குறிப்பிடுகிறார். அதேநேரம் முற்போக்கு அணியின் தலைமைப் பொறுப்பை யார்? கைப்பற்றுவது என்ற போட்டியில் ஒதுக்கப்பட்டதாலே எஸ்.பொ விலகினார். அதுவே அந்தரங்க காரணமாக இருக்கிறது என்று மு.தளையசிங்கம் "ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி" நூலில் குறிப்பிடுகிறார். இன்று எஸ்.பொ.வைத் திரும்பி வாசிக்கும்போது இயல்புவாத அழகியலில், ஈழ இலக்கியத்தின் முன்னோடி என்று புரிந்துகொள்ள இயலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். பொன்னுத்துரையின் 'முற்போக்கா பிற்போக்கா' (கலைச்செல்வி, 1950, கார்த்திகை) எனும் கட்டுரை, முற்போக்கு இலக்கிய வாதிகளான கணேசலிங்கன், டொமினிக்ஜீவா, டானியல் முதலானவர்களின் கதைகளை முன்வைத்து, முற்போக்கு இலக்கியம் என்றால் என்ன? என்பதனையும், அவ்விலக்கியத்தின் உருவம் – உள்ளடக்கம் தொடர்பான விமர்சனக் கருத்துக்களையும் முன்வைக்கிறது. வாழ்க்கையின் எதிரொலியே முற்போக்கு என்று கூறும் எஸ்.பொ, இவர்களின் கதைகளில் முற்போக்கு எங்குள்ளது? என்று வினாவித் தன் விமர்சனத்தை முன்வைத்துள்ளமையைக் காணமுடிகின்றது. அதுமட்டுமன்றி இவரின் 'கம்யூனிஸ்ட் எழுத்தாளரும் ஈழத்துத் தமிழ் இலக்கியமும்' (இளம்பிறை, 1970, செப்டம்பர்) எனும் கட்டுரையும் இவரின் விமர்சனத்தின் பிரதிபலிப்பைக் காட்டுகின்றது. இதற்குச் சவாலாக மு. தளையசிங்கம், 'இலக்கியத்தில் எஸ்.பொ.வின் போக்கு' (1971) என்ற தலைப்பில் விமர்சனப் பார்வையுடன் கூடிய கட்டுரையை எழுதியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### 3.8.6. மு. தளையசிங்கம்

முருகேசு தளையசிங்கம் அவர்கள் (1935 – 1973) குறுகிய காலமே வாழ்ந்தாலும் தமிழிலக்கியத் துறையில் நிறையவே ஆழமான பணிகளை ஆற்றிவிட்டுச் சென்றவர். விரிந்து கிடந்த மார்க்சியத் தத்துவத்தினை நீக்கிப் புதியதோர் இலக்கியக் கருத்தியலாக மெய்முதல்வாதத்தை முன்வைத்தவர். அறிவியல் சார்ந்த கருத்தியல்களைத் தர்க்கம் சார்ந்த சிந்தனா தளத்தில் பார்த்தவர். மொழியை முன்வைத்து அறிவியல், அரசியல், தத்துவம் ஆகிய துறைகளுடன் இலக்கியத்தை ஒப்பிட்டுத் தன்னுடைய விமர்சனங்களை வெளிப்படுத்தினார். இதனைப் பிரபஞ்ச யதார்த்தவாதம், பூர்ண சர்வோதய அணுகுமுறை எனவும் கருத்துரைத்தவர். இராமகிருஷ்ணர், விவேகாநந்தர், அரவிந்தர், வினோபாவே முதலிய ஆன்மீக ஞானிகளின் வழியே தமது இலட்சிய வாழ்வுக்குரிய செல்நெறியினை ஏற்றுக்கொண்டவர். இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியவியல் பிரிவிலிருந்து விமர்சனத்துறைக்குள் பிரவேசித்தாலும் ஏற்கனவே இப்பிரிவிலிருந்த க.நா.சு, தருமு சிவராமு, கனக செந்திநாதன், எஸ்.பொ, ஏ.ஜே. கனகரட்னா ஆகியோரிடமிருந்து தனது கருத்தியில் ரீதியான பார்வையால் வேறுபடுகின்றார். க.நா.சு, தருமு சிவராமு, கனகசெந்திநாதன், எஸ்.பொ போன்றவர்களை ஓர் அணியாகவும் கைலாசபதி, கா. சிவத்தம்பி, முருகையன், அவர்களுக்குப் பின் அவர்களை அடியொற்றி எழுதிய எம்.ஏ. நு.ஃமான், சித்திரலேகா மௌனகுரு, சிவசேகரம், கே.எஸ். சிவகுமாரன் போன்றவர்களை இன்னோர் அணியாகவும் கொண்டால் மிஞ்சுபவர் மு. தளையசிங்கமே. அதாவது மு. தளையசிங்கம் மூன்றாம் அணியாக நிற்கிறார். மூன்றாம் பக்கத்துக்குரியவரான மு.தளையசிங்கத்திடமிருந்துதான் கலை இலக்கியங்கள் மனிதனுக்குத் தடையா விடுதலையா? என்னும் கேள்வியை நோக்கி விமர்சன ஆய்வுகள் அவரை இட்டுச் சென்று, இறுதியில் இவற்றுக்கு விடை காணும் கோட்பாடுகளாகவே நிறைவெய்துகின்றன. அவரின் ஆய்வின் முடிவு, இன்றைய கலை இலக்கியங்கள் என்பவை மனிதனை அகரீதியான பண்படுத்தலுக்கும், பரவசத்துக்கும் இட்டுச்செல்லும் ஆற்றல் அற்றவையாகவும் இருக்கின்றன. அதே நேரத்தில் ஆற்றல் உள்ளவை போன்ற போலித் தோற்றத்தைத் தரும் பெரும் மாயையாகவும் இருப்பதால், அவை மனிதனின் வளர்ச்சியைத் தடுத்து விடுதலையைக் கடத்திப் போடுகின்றன என்பதேயாகும். இப்பார்வையின் அடிப்படையில்தான் இவரின் இலக்கிய விமர்சனக் கோட்பாடு ஒரு தத்துவார்த்த தளத்திற்குச் சென்றது. இவர் மரபு இலக்கிய வாதிகளின் மீதும், முற்போக்கு வாதிகள் மீதும் கருத்து வேறுபாடுடையவராகக் காணப்பட்டார். இலக்கியத்தைப் பொருளாதாரக் கண்கொண்டு பார்ப்பது தவறு என்ற பார்வை உடையவர்.

ஈழத்திலக்கியமானது முற்போக்கு, நற்போக்கு என வேறுபட்ட போக்கில் இயங்கிய வேளையில் மு. தளையசிங்கத்தின் விமர்சனம் ஆரம்பமாகியது. முற்போக்கு, நற்போக்கு குழுமோதலின்போது மு. தளையசிங்கம் மெய்யுள் எனும் கோட்பாட்டை முன்வைக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யுளை ஓர் கோட்பாடாக முன்வைத்தாலும் உண்மையில் அது இலக்கியத்தை, வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கான ஓர் சிந்தனை முறைமைதான் என்றே கொள்ள வேண்டியுள்ளது. முற்போக்கு முகாமில் இருக்கும் எழுத்தாளர்களையும் சரி, நற்போக்கு அணியில் எஸ்.பொவுடன் இருந்த எழுத்தாளர்களையும் சரி தனக்குரிய இலக்கியப் பார்வையில் மிகக்கறாராகவே அணுகினார் தளையசிங்கம். அன்றைய காலத்தில் இவ்விரண்டு முகாங்களை விமர்சிக்கவும், புதிய சிந்தனையை உருவாக்கவும் மு. தளையசிங்கம் வைத்த கோணத்தை மூன்றாம் கோணம் எனலாம். உண்மையில் முற்போக்கு எழுத்தாளர்கள் என்ற பெயரைத் தங்களுக்குத் தாங்களே சூட்டிக்கொண்டாலும் அது உண்மையில் 'முற்போக்கு' எழுத்துத்தானா? என்பதை மு. தளையசிங்கம் விமர்சனத்துக்கு உள்ளாக்குகின்றார். அவை அவ்வாறு இருப்பதில்லை என்பதையும் குறிப்பிடுகிறார். எஸ். பொன்னுத்துரையின் எழுத்துப் பாணியைத் தழுவி எழுதியவர்களும் முற்போக்கு அணியில் இருந்ததை ஆதாரத்துடன் முன்வைக்கிறார். கிட்டத்தட்ட எல்லாமே ஒன்றுதான் என்ற பார்வையும் பல இடங்களில் மு. தளையசிங்கத்திடம் வெளிப்படச் செய்கின்றது.

கருத்து முதல் வாதமானது 'அன்பு, அகிம்சை, கடவுள், ஜனநாயகம், சுதந்திரம்' ஆகியவற்றைப் பிரகடனப்படுத்தியபோதும் அவற்றின்பேரில் மக்களைச் சுரண்டி, முதலாளித்துவத்திற்கே குற்றேவல் புரிகின்றது. மார்க்சியமானது 'சமதர்மம்', 'மக்கள் புட்சி' என்பவற்றைக் கூறியபோதும், மக்களின் சுதந்திர வாழ்வுக்கு எதிரான தனியொருவரின் சர்வாதிகாரமாகவே மாறுகின்றது. பொருள்முதல்வாதம் முன்வைக்கும் பொதுவுடைமைக்கு எதிரான முதலாளித்துவத்திற்குக் குற்றேவல்புரியும் கருத்துமுதல்வாதமோ, கருத்துமுதல்வாதம் வழிவந்த அகப்பண்பாட்டை நிராகரிக்கும் பொருள்முதல்வாதமோ மனித வளர்ச்சிக்கு இனிமேல் உதவப்போவதில்லை என்று மு. தளையசிங்கம் கருத்தினை முன்வைக்கின்றார். இதனால் இவ்விரண்டு பண்புகளின் இணைப்பைக் கோரும் போக்கே இனிவரும் தத்துவப்பார்வையாக இருக்கவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறி, அதனைக் கொண்டுவரும் புதுயுகத் தத்துவமே மெய்முதல்வாதம் என்கிறார். மெய்முதல்வாத நோக்கில் இதுவரை இருந்துவந்த கலையிலக்கியப்போக்குக் கேள்விக்குள்ளாக்கப்பட்டு, மனிதனை புதுயுக வளர்ச்சிக்கு ஆற்றுப்படுத்த முயலும் புதுக்கலை இலக்கிய வடிவங்கள் முன்வைக்கப்படுகின்றன என்றும், அதனை 'மெய்யுள்' என்றும் தளையசிங்கம் கூறுகின்றார். இவரின் இச்சிந்தனைகள் இன்றைய பின்நவீனத்துவக் கலையிலக்கியச் சிந்தனைகளோடு சமாந்தரமாகச்செல்வது அவதானத்துக்குரியதாகும்.

"புதுயுகம் பிறக்கிறது" (சிறுகதைத்தொகுதி, 1965, 2001), "போர்ப்பறை" (1970), "மெய்யுள்" (1974), "ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி" (1984), "முற்போக்கு இலக்கியம்" (1984), "ஒரு தனிவீடு" (நாவல் 1985), "கலைஞனின் தாகம்" (குறுநாவல், 1974, 1985), "கல்கி புராணம்" (நாவல், 2011), "மு. தளையசிங்கம் படைப்புக்கள்" (2011) ஆகியன இதுவரை வெளிவந்த இவரது இலக்கியப் படைப்புக்களாகும். "ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி" கட்டுரையாக 1964 – 1965 காலப்பகுதியில் கண்டியில் இருந்து வெளிவந்த 'செய்தி'ப் பத்திரிகையில் விமர்சனக் கட்டுரைத் தொடராக வெளிவந்தது. பின்னர் நூலாக வெளிவந்தது. 1956 – 1963 வரையான ஈழத்துத் தமிழ் இலக்கியப் போக்குகளை ஆராயும் நூல் இது. அக்காலத்து அரசியல், பொருளாதார, சமூகப் பின்னணியை அறிமுகப்படுத்துவதோடு தொடங்கி அக்கால இலக்கியப் போக்குகள், முற்போக்கு இலக்கியம், நற்போக்கு இலக்கியம் தொடர்பாக விரிவான முறையில் விமர்சனக் கண்ணோட்டத்துடன் நூலில் உள்ள கட்டுரைகள் அமைந்துள்ளன. பொதுப் பின்னணியைப் பிரதிபலிக்காது முன்னுக்குத் தள்ளப்பட்ட முற்போக்கு இலக்கியம், சோஷலிச யதார்த்த வாதமும் முற்போக்கு இலக்கியமும், நற்போக்கின் ஆரம்பப் பின்னணி, நற்போக்கும் முற்போக்கும், முற்போக்கு எழுத்தாளர்கள் பற்றிய அருவருக்கத்தக்க காட்சிகள், சர்வாதிகாரத்தைக் கண்டு தப்பி ஓடியவர்கள், சர்வாதிகாரத்தைத் தனித்து எதிர்த்து நின்றவர்கள், பொதுப்பின்னணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடித்த இலக்கியப்போக்கு ஆகிய தலைப்புகளின்கீழ் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இந்நூல் பற்றிய வாதப்பிரதிவாதங்கள் அக்காலத்தில் பெருமளவிற்கு எழுந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் "தினகரன்" பத்திரிகையில் மு. தளையசிங்கம் எழுதிய "விமர்சக விக்கிரகங்கள்" என்ற கட்டுரைத்தொடர் வெளிவந்தது. இலக்கிய விமர்சகர்களையே ஆக்கரீதியில் விமர்சித்தமையை இதில் காணமுடிகின்றது. 'மூன்றாம் பக்கம்' (1961), 'முற்போக்கு இலக்கியம்' ஆகிய இவரது விமர்சனக் கட்டுரைகளும் நடுநிலைப்போக்குடன் நல்லதைப் பாராட்டியும், கெட்டதைக் கண்டித்தும் எழுதப்பட்டு ஒரு மூன்றாம் பக்கத்தை உருவாக்கவேண்டும் என்ற ஆலோசனையையும் முன்வைப்பதாக அமைந்திருந்தன. 'மூன்றாம் பக்கம்' எனும் கட்டுரையில், குறுகிய அளவில் தம்மைக் குறுக்கிக்கொண்ட முற்போக்குவாதிகளின் கையிலிருந்து இலக்கியத்தை மீட்க வேண்டும் என்ற இவரின் தீர்க்க சிந்தனையைக் காணலாம். அதில், 'கைலாசபதி தலைமையிலான முற்போக்கு எழுத்தாளர் அமைப்பும், அதற்கெதிரான பண்டிதர் சதாசிவம் தலைமையிலான கல்வியில் இலக்கியவியல் அமைப்பும் பகைமையை நீக்கி நல்லனவற்றைப் பேணவேண்டும் என்று எழுதினார். 'விமர்சக விக்கிரகங்கள்' என்ற கட்டுரையில், தமிழில் ஆக்கபூர்வமான விமர்சனத்திற்கு வழிபாடுகள் நந்திகளாக அமையக்கூடாது என்பதை எடுத்துரைக்கிறார். மேலும் ஏ.ஜே கனகரட்னா, செந்தில்நாதன், சிவகுமாரன், சில்லையூர் செல்வராசா, காவலூர் ராசதுரை, எஸ். பொன்னுத்துரை, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி பற்றி அவர்களது விமர்சன முறைமையில் உள்ள ஆழமற்ற தன்மையையும், இலக்கியம் மீதான நுண்ணுணர்வுப் போதாமையையுங் காரசாரமாகக் குறிப்பிட்டு விவாதிக்கிறார். காந்தியம் – சர்வோதயம் என்ற கருத்து நிலையின் பின்னணியில் இலக்கியத்தையும் பண்பாட்டையும் திறனாய்வு செய்கின்றார். இலக்கியத் துறையில் அவரது எதிர்பார்ப்பு இதுவாகவே இருந்தது. "போர்ப்பறை", "மெய்யுள்" ஆகிய இவரது நூல்கள், இவர் காண விரும்பிய மார்க்சியத்திற்கும் அப்பாலுள்ள ஆன்மீக வழியிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியவாதமாகிய 'பிரபஞ்ச யதார்த்தவாதத்தை' எடுத்து விளக்குவனவாக அமைந்திருந்தன. இவரது இலட்சியக் கருத்துக்களே சிறுகதைகள், நாவல்கள் முதலிய ஆக்க இலக்கியங்களிலும் பெருமளவு பிரதிபலித்திருந்தன. தமிழ்நாட்டின் எழுத்தாளர்களான சுந்ததரராமசாமி, வெங்கட்சாமிநாதன் போன்ற சிலர், மு. தவின் கருத்துக்களில் ஈடுபாடு காட்டியதுடன் அவற்றைத் தங்கள் எழுத்துக்கள்மூலம் முன்னெடுத்துச் சென்றனர்.

### 3.8.7. கே.எஸ். சிவகுமாரன்

ஈழத்தமிழ் இலக்கியத் திறனாய்வைச் செழுமைப்படுத்தியவர்களில் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதிவந்த கே.எஸ் சிவகுமாரன் முக்கியமானவர். 60ஆண்டுகளுக்கு மேற்பட்ட இவரது தமிழ் இலக்கியப் பணியில் கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள், சிறுகதைகள்மூலம் கணிசமான பங்களிப்பினை இவர் நல்கியுள்ளார். "திஐலன்ட்", "சண்டே லீடர்", "ரைம்ஸ் ஒவ் ஓமான்", "டெயிலி மிரர்" ஆகிய ஆங்கில இதழ்களில் நீண்ட காலம் எழுதி வந்த இவர், ஆங்கிலத்திலும், தமிழிலுமாக சுமார் 35க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். நீண்டகாலமாகவே ஈழத்தமிழ் இலக்கியப்படைப்புக்கள் பற்றிப் பத்தி எழுத்துக்களையும், விமர்சனங்களையும் எழுதி வருகிறார். "சுவையான இலக்கியத் திறனாய்வுகள்", "ஏடுகளில் திறனாய்வு — மதிப்பீடுகள் சில", "காலக்கண்ணாடியில் கலை இலக்கியப் பார்வை", "ஈழத்து எழுத்தாளர்கள் – விரிவான பார்வை", "ஈழத்துச் சிறுகதைகளும் ஆசிரியர்களும் – பாகம் 1, 2", "ஒரு திறனாய்வாளரின் இலக்கியப் பார்வை", "இந்திய – இலக்கியம் ஒரு கண்ணோட்டம்", "திறனாய்வு என்றால் என்ன?", "மரபு வழித்திறனாய்வும் ஈழத்து இலக்கியமும்", "திறனாய்வுப் பார்வைகள்", "கலையிலக்கியத் திறனாய்வு", "கே.எஸ். சிவகுமாரன் திறனாய்வு" முதலான இவரது நூல்கள் குறிப்பிடத்தக்கன.

"தமிழ் நாட்டில் 'விமர்சனம்' என்பது அக்காலத்தில் கேலிக்கூத்தாகவும், தனிப்பட்ட குரோதங்களை வெளிப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்த்தரமான 'மஞ்சள்' வெளிப்பாடாகவும் வெளிவந்தது. இப்பொழுதும்கூட இந்தப்போக்கு இருப்பதற்குத் தருமுசிவராமுவும், வெங்கட்சாமிநாதனும் நடத்திய 'கண்டனச்' சண்டைகளும், 'நையாண்டிகளும் நக்கல்களுமே' காரணமென ஒருவிதத்தில் கூறலாம். 'அங்கதம்' என்பது விமர்சனத்தின் ஓர் அம்சமாகக் கருதப்பட்டு தமிழ்நாட்டிலும் இங்கும் பெருகுவதற்கு மூலவித்து விதைத்தவர்கள் தருமு சிவராமு, வெங்கட்சாமிநாதன், ஞானக்கூத்தன் போன்றோர் என்பது எனது நம்பிக்கையாய் இருந்து வந்துள்ளது. இந்தப்போக்கை மாற்றுவதற்கு ஈழத்து மார்க்சியப் பேராசிரியர்கள், குறிப்பாகக் கைலாசபதி, சிவத்தம்பி போன்றோர் எடுத்த முயற்சிகள் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழக மட்டங்களிலும், இங்கும் ஓரளவு பயனளித்தன" (சிவகுமாரன்.கே.எஸ், 2013, ப.02).

இவ்வாறு எழுதியுள்ள சிவகுமாரன், தான் எளிமையாக விமர்சனங்களை எழுதுவதாகவும், அதனால் தனது விமர்சனங்களில் ஆழமில்லை என்று சிலர் கருதுவதாகவும், ஆங்கில இலக்கிய மதிப்பீட்டுக் குழுவில் தன்னையும் நியமித்திருந்தார்கள் என்றும், தான் எதிலும் நல்லம்சங்களைப் பார்ப்பவன் என்றும், திறனாய்வு ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும் என விரும்புபவனாகவும், எழுத்தாளனை ஊக்குவிக்க வேண்டும், குறைகளைப் பக்குவமான முறைகளில் சுட்டிக்காட்ட வேண்டும் என நம்புபவன் என்றும், விமர்சனம் என்றால் கண்டித்துத் தமது வித்துவ மேலாண்மையைக் காட்ட விரும்பக்கூடாது என்றும், விமர்சனம் என்ற பெயரில் நக்கல், நையாண்டி செய்பவர்களை, தான் திறனாய்வாளர் எனக் கருதுவதில்லை எனவும், 'ஞானம்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் (தை, 2017, ப.57) குறிப்பிட்டிருந்தமையும் அவதானிக்கத்தக்கது.

### 3.9. ஏனைய திறனாய்வாளர்கள்

இவர்களுக்குப் புறம்பாக இரசனை முறையின் அடிப்படையில் பண்டிதர் க. சச்சிதானந்தன் ஏராளமான கட்டுரைகளைத் தந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபுலாநந்த அடிகளாரின் மாணவரான இவர், அடிகளாரின் யாழ் நூல் எழுத உதவியவர். 'மனவோசை' என்ற இவரது கட்டுரை (கலைப்பூங்கா, 1963: 29 — 36) மிகவும் சிறந்ததாகும். கவிஞரும், எழுத்தாளரும், உளவியல் விரிவுரையாளருமான இவரது பல எழுத்தாக்கங்கள் தமிழியல் வரலாற்று ஆய்வுடனும், இரசனைமுறைத் திறனாய்வுடனும் தொடர்புடையவை. பெண்களில் ஊடகவியலாளர்களான, ம. தேவகௌரி, செல்வி திருச்சந்திரன் போன்றவர்களும் தமிழிலக்கியத் திறனாய்வில் அவ்வப்போது ஆர்வங்காட்டி வருகின்றனர்.

மு. பொன்னம்பலம். அ. யேசுராசா, சில்லையூர் செல்வராஜன் போன்றவர்களும் திறனாய்வுத்துறையில் அவ்வப்போது ஈடுபட்டவர்கள். "ஈழத்து நாவல் இலக்கிய வளர்ச்சி" (1967) பற்றிச் சில்லையூர் செல்வராஜன் விமர்சன அடிப்படையில் எழுதிய சின்ன நூலொன்று வெளிவந்துள்ளது. "அலை" சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும், 25ஆவது இதழிலிருந்து பிரதம ஆசிரியராகவும் செயற்பட்ட அ. யேசுராசா, பத்தி எழுத்துக்களில் ஆர்வம் காட்டி வருபவர். கவிதைகள், சிறுகதைகள் பொன்றவற்றையும் எழுதியுள்ளார். கலை இலக்கியப் படைப்பு, சினிமா சார்ந்த விமர்சனங்களிலும் ஈடுபட்டு உழைப்பவர். "மரணத்துள் வாழ்வோம்" (1960) என்னும் கவிதைத்தொகுதியின் தொகுப்பாளர்களில் ஒருவர். "தேடலும் படைப்புலகமும்", "தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்", "அறியப்படாதவரின் நினைவாக", "குறிப்பேட்டிலிருந்து", "திரையும் அரங்கும் – கலைவெளியில் ஒரு பயணம்", "தூவானம்" முதலிய நூல்களின் ஆசிரியர். "கவிதை" இதழையும், "தெரிதல்" பத்திரிகையையும் நடத்தியவர். இவரது சினிமா விமர்சனங்களும், இலக்கியச் சர்ச்சைகளும், ஏனைய கலையிலக்கிய விமர்சனங்களும் ஈழத்தமிழ் இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்கவை.

மு. தளையசிங்கத்தின் சகோதரரான மு. பொன்னம்பலம் அவர்கள், தனது தமையனாரின் கோட்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதில் முக்கிய பங்காற்றினார். குறிப்பாகப் 'பிரபஞ்ச யதார்த்தவாதக்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகளை முன்னெடுத்துச் சென்றவர் மு. பொன்னம்பலம் அவர்கள். சிறுகதை, கவிதைத் துறைகளில் ஆர்வங்காட்டி வந்த இவர், பிற்காலத்தில் விமர்சனத்துறையிலும், மொழிபெயர்ப்புத் துறையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தேசிய சாகித்திய விருதினைப் பெற்ற "நோயில் இருத்தல்" நாவல் இவருக்குப் பெருமை சேர்த்தது. "யதார்த்தமும் ஆர்த்மார்த்தமும்" (1992), "திறனாய்வு சார்ந்த பார்வைகள்", (2000), "திறனாய்வின் புதிய திசைகள்" ஆகிய மு.பொவின் விமர்சன நூல்கள் திறனாய்வு உலகில் வரவேற்பைப் பெற்றுள்ளன. "விமர்சனம் சார்ந்த சில பார்வைகள்" எனும் நூல், ஈழத்து இலக்கிய வரலாற்றின் கணிசமான பகுதிகளையும், முக்கியமான இளம் படைப்பாளிகளை இனம் காட்டுவதையும் நோக்கமாகக்கொண்ட கட்டுரைத் தொகுப்பாக அமைந்துள்ளது.

ஈழத்தமிழ் இலக்கிய உலகில் தனது விமர்சனத் திறத்தினால் கவனிப்புக்குரிய விமர்சகராக இவர் இன்றும் செயற்பட்டு வருவதை அறிய முடிகின்றது. பல்வேறு திருப்புமுனைகளோடு வளர்ச்சியடையும் ஈழத்து இலக்கியக் கூறுகளின் வகைமாதிரி உதாரணங்களை, மு. பொன்னம்பலத்தின் விமர்சனப் படைப்புக்களில் காண்பது, அவரது விமர்சன ஆற்றலுக்குச் சாட்சியமாக அமைகின்றது எனலாம். கவிதை சார்ந்து அவர் எழுதிய கட்டுரைகள் ஈழத்து இலக்கிய விமர்சனத்திலும், கவிதையின் உருவ – உள்ளடக்கங்களைச் செம்மைப்படுத்துவதிலும் பாரிய செல்வாக்குச் செலுத்துகின்றன. மேல் நாட்டிலும், கீழ் நாட்டிலும் இலக்கியத் திறனாய்வு சார்ந்த விடயங்களை எழுதுவோரில் பலர், பல்வகை நோக்கங்களை முன்வைத்து எழுதுகின்றனர் என்று கூறும் இவர், ஆரம்பகால இலக்கியம், மறுமலர்ச்சிக்கால இலக்கியம், காலனித்துவ – பின்காலனித்துவ இலக்கியம் என்று காலப்பகுப்புக்களைப் புகுத்தி, அதற்குள் அழகியல், கருத்தியல் என்று கண்டுபிடிப்புச் செய்வதுதான் இன்று அனேகர் செய்யும் விமர்சனமாக உள்ளது என்கிறார் (ஞானம், செப்டெம்பர், 2018: ப.05).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஜராத்தி மேமன் சமூகத்தைச் சேர்ந்த அப்துல்கரீம் அப்துல்ரசாக் என்ற இயற்பெயரை உடைய மேமன்கவி (1957), தமிழிலக்கியத் திறனாய்வுத் துறையில் அக்கறை செலுத்திய ஒரு கவிஞராவர். 'பின்காலனியம் – கலை இலக்கியமும் கோட்பாடும்', 'ஒரு வாசகனின் பிரதிகள் பற்றிய பிரதிகள்' முதலான கட்டுரைகள் இவரது இலக்கியத் திறனாய்வின் ஆற்றலை வெளிக்காட்டுவன. புதுக்கவிதைத் துறையில் அதிக ஈடுபாடு கொண்ட இவர், பல கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். மொழிபெயர்ப்புக் கவிதைகளையும் தந்துள்ளார். நீர்வை பொன்னையன் பிறநாட்டு இலக்கிய மொழிபெயர்ப்பாளராகவும், மார்க்சியத்தை வரித்துக்கொண்ட முழுநேர செயற்பாட்டாளராகவும் விளங்கியவர், ஆக்க இலக்கியம் மற்றும் கலைசார்ந்த விடயங்களில் தம்மாலான பங்களிப்பை நல்கியவர். சமூகத்தை மாற்றியமைக்க வேண்டும் என்ற இலட்சிய வேட்கையுடன் படைப்புக்களைப் படைத்த முற்போக்குவாதியாவார். 'நீர்வை', 'ஞானி' முதலிய புனைபெயர்களில் கட்டுரைகள், ஆக்க இலக்கியங்களைப் படைத்த இவர், பிறநாட்டு இலக்கிய மொழிபெயர்ப்புக்களையும் செய்துள்ளார். 1969 – 1983வரை அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றினார். "கலைமதி", "வசந்தம்" முதலிய முற்போக்குக் கலையிலக்கியச் சஞ்சிகைகளின்மூலம் தன் கருத்துக்களை விதைத்தவர். "தேசாபிமானி", "தொழிலாளி" முதலிய அரசியல் வாரப் பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் பணியாற்றி ஆக்கபூர்வமான விமர்சன ரீதியான கட்டுரைகளைப் படைத்துள்ளார். "முற்போக்கு இலக்கிய முன்னோடிகள்", "நாம் ஏன் எழுதுகின்றோம்? (கட்டுரைத் தொகுப்பு)" முதலிய படைப்பிலக்கியங்களைத் தந்தவர். "முற்போக்கு இலக்கிய முன்னோடிகள்" என்ற நூலில் முற்போக்கு இலக்கிய முன்னோடிகளைப் பற்றியும், அவர்கள் எழுதிய சிறுகதைகளையும் தந்து, எழுத்துலகப் பார்வையை வியாபிக்க வைத்துள்ளார். அதில், 'ஒரு படைப்பாளன் தன்னுடைய வாழ்வினை – மக்களின் வாழ்வு, விடுதலை, மேம்பாடு ஆகியவற்றுக்கான போராட்டத்தோடு இணைக்கின்றபோதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய படைப்புக்கள் வலுவடைகின்றன' என்ற பார்வையை முன்வைக்கின்றார். 1996 இல் இருந்து "விபவி மாற்றுக் கலாசார மையத்தில்" தமிழ்ப் பிரிவின் இணைப்பாளராகச் செயற்பட்ட இவர், அவ்வப்போது தனது எழுத்துக்களினூடே விமர்சனப் பணியையும் மேற்கொண்டுள்ளார்.

"அறிமுகங்கள் விமர்சனங்கள் குறிப்புகள்" என்ற நூலின் ஆசிரியரான குப்பிழான் ஐ. சண்முகன், "அலை" ஏட்டின் ஆசிரியர் குழுவில் செயற்பட்டவர். ஆக்க இலக்கியப் படைப்புக்களுடன் விமர்சனத்துறையிலும் தனது கருத்துக்களை முன்வைத்தவர். மயிலங்கூடலூர் பி. நடராஜன், "தாயகம்" ஆசிரியர் க. தணிகாசலம், எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம், அந்தனி ஜீவா, லெனின் மதிவானம், திருமலை க. நவம், ந. பார்த்திபன், பா. மகாலிங்கசிவம் போன்றவர்களும் தமிழிலக்கியத் திறனாய்வு முயற்சியாளர்கள்.

## 3.10. அண்மைக்காலப் போக்குகள்

ஈழத்தில் ஆக்க இலக்கியம் படைப்பவர்களில் அனேகமானோர் திறனாய்வாளர்களாக அல்லது விமர்சகர்களாக விளங்கியுள்ளனர், விளங்குகின்றனர். ஈழத்தில் நூல் விமர்சனங்கள், இறுவட்டு விமர்சனங்கள், கலை அளிக்கைகள் பற்றிய விமர்சனங்கள் போன்றவற்றில் இவர்களின் பங்களிப்புக் கணிசமானது. முன்னைய நாட்களைப்போல் அல்லாமல் பத்திரிகைகள், இதழ்கள், ஊடகங்கள், மேடைகள் என்றில்லாமல், இன்று இலத்திரனியல் ஊடகங்களிலும் விமர்சனம் புகுந்துவிட்டது. முன்பு ஒரு படைப்பு வெளிவந்து அதற்கான விமர்சனத்தைப் பார்ப்பதற்கு நீண்டநாட்கள் எடுக்கும். இப்பொழுது உடனுக்குடன் இணையத்தள ஊடகங்களில் விமர்சனங்கள் வந்துவிடுகின்றன. இன்று படைப்புக்கள் பெருகிய அளவிற்கு விமர்சகர்கள் பெருகவில்லை என்பதும் உண்மையே. அதிகமானோர் கலை இலக்கியத் திறனாய்வு முயற்சிகளில் பாராட்டுமுறைத் திறனாய்வையே பெரிதும் மேற்கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்க்கமுடியாது. இரசனை — அழகியல் முறையிலான திறனாய்வுப் போக்கு, தமக்குப் பிடித்தமான விடயங்கள் பற்றிக் கிலாகித்துக் கூறிவிட்டுக் குறைபாடுள்ள அம்சங்கள் பற்றி எதுவும் பேசாது விட்டு விடுகின்றனர். சிலர் தமக்குப் பிடிக்காத — குறைபாடுள்ளவை எனத் தாம் நினைத்த விடயங்களைப், பெரிதுபடுத்திக் 'குளோசப்பில்' காட்டிவிட்டுத் திறனாய்வு வேலையை முடித்து விடுகின்றனர். இன்னும் சிலர், "முதுகைச் சொறிதல்" என்ற பாணியில் அவருடைய ஆக்கத்தை இவர் புகழவும், இவருடைய ஆக்கத்தை அவர் புகழவும் கூடியதாக, இலக்கியத் திறனாய்வு என்ற பெயரில் கூத்தடிக்கின்றனர். விமர்சகர்கள், ஒரு படைப்பை எடுத்து ஆழமாக விமர்சிப்பதை விடுத்து, பல படைப்புக்களை மேம்போக்காக அகலப்பாங்கில் பேசுவதைக் காணமுடிகின்றது. விமர்சனம் என்றால் 'உச்சி குளிர வைத்தல்', 'தனி நபரைத் தாக்குதல்', 'ஒருவரை ஒருவர் புகழ்பாடித் துதிபாடுதல்' எனவும் சிலர் நினைத்துக் கொள்கிறார்கள். இவை சிலருக்கு உற்சாகத்தைக் கொடுக்கக்கூடும். ஆனால் இச்செயற்பாடு நல்ல படைப்புக்களைத் தோற்றுவிக்காது என்பதே உண்மை.

சமகால ஈழத்தமிழ் இலக்கியச் செல்நெறியில் புற்றீசல்போலக் கவிதை, கட்டுரை, நாவல், நாடக நூல்கள் வெளிவந்துகொண்டேயிருக்கின்றன. இறுவட்டுக்களும், இசைத்தட்டுக்களும் இன்னொரு புறமாக வெளிவருகின்றன. எல்லாவற்றுக்கும் வெளியீட்டு விழாக்களும் நடைபெறுகின்றன. ஆய்வுரை, மதிப்புரை, நயவுரை, கருத்துரை என்றவாறு உரைகளும் மேடைகளில் நிகழ்த்தப்படுகின்றன. இலக்கியத் திறனாய்வு அனுபவம் உள்ளவர்களும், அனுபவம் இல்லாதவர்களும்கூட மேடையில் உரையாற்றுகின்றனர். பத்திரிகை, சஞ்சிகைகளில் நூல் விமர்சனம் செய்கின்றனர். ஒரு காலத்தில் மறுமலர்ச்சி, பாரதி, மல்லிகை, மலர், தீர்த்தக்கரை, நந்தலாலா, கொழுந்து, பூரணி, மரகதம், வசந்தம் முதலான சஞ்சிகைகளும் தற்காலத்தில் ஞானம், கலைமுகம். ஜீவநதி, மகுடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற சஞ்சிகைகளும், ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கும் குறிப்பாகத் திறனாய்வுத் துறைக்கும் அரியபணி ஆற்றியுள்ளன – ஆற்றுகின்றன. பழையவர்களையும், புதியவர்களையும் கொண்டு நூல் விமர்சனங்களைச் செய்து வருகின்றன.

ஈழத்தின் தேசியப் பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், தினபதி, சிந்தாமணி முதலானவைகளும் (இவற்றுள் சில நின்றுபோய் விட்டன) ஈழகேசரி, ஈழநாடு, 80களுக்குப்பின் முரசொலி, ஈழமுரசு, உதயன், சஞ்சீவி, வலம்புரி போன்றவைகளும் அவ்வப்போது இலக்கியத் திறனாய்வுகளுக்கும், நூல் விமர்சனங்களுக்கும், ஏனைய படைப்பு விமர்சனங்களுக்கும் இடமளித்து வந்துள்ளன – வருகின்றன. இருப்பினும் இன்று கனதியான திறனாய்வினைக் காண்பது அரிதாகவே இருக்கின்றது. இன்றைய நாட்களில் பத்திரிகைகளும், பதிப்பகங்களை நடத்துவோரும் படைப்பிலக்கியத்தை விரும்பி வரவேற்கும் அளவிற்கு, விமர்சனத்தை வரவேற்பதில்லை. வாரந்தோறும் திரைப்பட விமர்சனங்களைத் தவறாமல் வெளியிடும் பத்திரிகைகள், படைப்பிலக்கியம் பற்றிய விமர்சனங்களை வெளியிடுவதில் பின்னிற்பதை அவதானிக்க முடிகின்றது. தமிழகத்தைப்போல இங்கு திறனாய்வு சார்ந்த நூல்களின் வருகையும் குறைவானதாகும். பல்கலைக்கழக மட்டங்களிலும், ஏனைய உயர்கல்விப் புலங்களிலும் இருந்து தமிழிலக்கியத் திறனாய்வுகள் பற்றிய ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மந்தநிலை அடைந்து விட்டன. பாடத்துறைசார்ந்த சில விடயங்களை மாத்திரம் மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதன்மூலம் திருப்தி கண்டு விடுகிறார்கள். ஆக்கபூர்வமான திறனாய்வாளர்கள் தோன்றுவதும், வளர்ச்சியடைவதும் குறைவாகவே உள்ளது. இன்னொரு புறத்தில் விமர்சனக்கலை வரலாறு அண்மைக் காலத்தில் வீரியமிழந்து நிற்கின்றது. கைலாசபதி காலத்துத் துடிப்பைக் காண முடியவில்லை. ஆழமாகப் பார்க்கக்கூடியவர்கள் அரிதாகவே உள்ளனர். தத்துவ அல்லது அரசியல் கருதுகோள்கள் காரணமாக – நல்ல பல இலக்கியங்கள் சமூகத்துக்கு அறிமுகப்படுத்தப்படாமல் ஒதுக்கப்படுகின்றன, அதேவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமற்ற படைப்புக்கள் சமூகத்தில் பார்வைக்கு வைக்கபடுகின்ற நிலைமையே காணப்படுகின்றன. நேர்மை என்ற அளவுகோலுடன், உள்ளதை உள்ளவாறு சொல்லும் விமர்சனங்கள் அதிகம் இன்று வளரவேண்டும். ஆரோக்கியமான விமர்சனங்கள்தான் மேன்மையான இலக்கிய வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமையும். ஈழத்தில் இந்த இலக்கியத் திறனாய்வு குறைந்தமைக்கு முக்கிய காரணம், இலக்கிய இயக்கமோ, இலக்கியச் சிந்தனைக் கூடங்களை ஆக்கியவர்களோ எவரும் இன்று இல்லாமல் போனதேயாகும். கைலாசபதி, சிவத்தம்பியின் மார்க்சிய விமர்சன முறையைக்கூட, அவர்களிடம் கற்ற, அவர்களின் மாணவர்கள் வளர்த்தெடுத்தார்களா? என்ற கேள்வி எழுகிறது.

இன்று படைப்புக்கள் தவிர்க்கமுடியாமல் நவீனத்துவம், பின்நவீனத்துவம் என்ற ரீதியில் பார்வைக்குள்ளாகின்றன. இதன்காரணத்தினால் எழுத்தாளர்கள் விமர்சகர்களுக்குப் பயப்பட வேண்டியுள்ள நிலையும் இன்றுண்டு. ஆனாலும் கொள்கைப் பிடிப்புடன் வெளியீட்டுக் களத்தினுள் தம்மை இணைத்துக்கொண்ட எழுத்தாளர்கள் விமர்சனங்களுக்குப் பயப்படுவதில்லை. இன்றைய பக்கச்சார்பான விமர்சனங்களால் கனதி குறைந்த இலக்கியங்கள் கூட ஒருவகையான இலக்கிய அந்தஸ்தைப் பெற்று விடுகின்றன. உண்மையில் நல்ல படைப்பு என்பது நல்ல மனோநிலையுடன் சம்மந்தப்பட்ட விடயமாகும். ஒரு படைப்பின் உற்பத்திக்கு எவரும் கட்டளையிட முடியாது. படைப்பிற்குத் துணையாக, ஊக்கியாக விமர்சனங்கள் இருக்கலாமே தவிர நிர்ப்பந்தம் செய்வனவாக இருப்பது எந்த விதத்திலும் நியாயமானதல்ல என்பதை, இன்றைய விமர்சகர்கள் உணர்ந்து செயற்பட்டால், எதிர்காலத்தில் இன்னும் பல தரமான இலக்கியங்கள் தோன்ற வழி கிடைக்கும். இக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தமிழிலக்கியத் திறனாய்வுடன் தொடர்புடையோர் பட்டியல் முழுமையானதல்ல. ஒருசில திறனாய்வு முயற்சியுடன் நின்றவர்கள் ஈழத்தமிழ் இலக்கிய உலகில் நிறையப்பேர் உள்ளனர். தொடர்ச்சியாக இத்துறையில் ஈடுபட்டு வருபவர்கள் மிகச் சிலரே. இடைக்கிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சி மலர்போலக் குலுங்கிக் காட்டுபவர்களும் சிலர் உளர். கற்றறிந்த இளைய தலைமுறையினர் சிலர், இத்துறையில் ஆர்வங்காட்டி வருகின்றனர். க. குணேஸ்வரன், சி. ரமேஷ், இயல்வாணன், ந. குகபரன், த. அஜந்தகுமார், இ. ராஜேஸ்கண்ணன், தி. செல்வமனோகரன், க. பரணீதரன், வேல். நந்தகுமார் முதலான சிலரை இவ்விடத்தில் நினைவு கொள்ள முடிகின்றது. சமகாலத்தில் பல்கலைக்கழகங்களில் திறனாய்வைக் கற்பிக்கின்ற பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் பங்களிப்புக்களும் முக்கியமானதாகும்.

### 3.10.1. பேராசிரியர் ம. இரகுநாதன்

மரபு மற்றும் நவீன இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்ட பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் முப்பது வருடங்களுக்கும் மேலாகக் கற்பித்து வருகிறார். பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் மேற்பார்வையில், இவர் வன்னிப் பிரதேசத்தில் வாய்மொழியாக வழங்கி வந்த "சிலம்பு கூறல்" காவியத்தின் ஏட்டுச்சுவடிகளைப் பரிசீலித்துப் பாடபேதங்களை ஆராய்ந்து, முதுகலைமாணிப் பட்டத்தினைப் பெற்றவர். அதுமட்டுமன்றி பேராசிரியர் நா. சுப்பிரமணியனின் மேற்பார்வையில் "ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்" எனும் தலைப்பில் ஆய்வு செய்து கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றவர். தமிழ்த்துறை மாணவர்களுக்கு ஒரு பாட அலகாக 'மூலபாடத்திறனாய்வு' நீண்ட காலமாகக் கற்பிக்கப்பட்டு வந்தது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்குப்பின் இவரும் நீண்டகாலமாகக் கற்பித்து வருகிறார். இரசனைமுறை, ஒப்பியல் மற்றும் நவீனத்துவப் பார்வை கொண்ட இவர் பத்துக்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். "ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்" (2004), "வன்னிப் பிரதேச நாவல்கள்" (2006), "ஈழத்துத் தமிழ் நாவல்களில் இன உறவு" (2007), "ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் சாதியம்,பெண்ணியம், தேசியம்" (2007), "பண்டைத்தமிழர் பண்பாட்டுத் தடங்கள்" (2009), "தமிழ்ப் பாவடிவங்களை விளங்கிக் கொள்ளல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2009), "ஈழத்துத் தமிழ் நாவல்கள் – சில பார்வைகள்" (2009), "முற்போக்கு இயக்கமும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும்" (2013), "சிலப்பதிகாரமும் ஈழத்துக் கண்ணகி வரலாற்றுக் காப்பியங்களும் – ஒப்பாய்வு" (2014), "ஈழத்துத் தமிழ் நாவல்களில் மீனவக் களங்கள்" (2016), "நந்தியின் நாவல்களில் சமூக நோக்கு" (2016), "இலக்கிய இயக்கமும் ஈழத்துத் தமிழ்க் கவிதையும்" (2020) முதலியவை இவருடைய ஆய்வுத்திறமையைக் காட்டும் நூல்களாகும்.

"ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்" (2004) எனும் நூலில், 1960 – 1980 வரையான காலப்பகுதியில் எழுந்த, ஈழத்துத் தமிழ் நாவல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, அந்நாவல்களில் கூறப்பட்டுள்ள சமுதாயச் சிக்கல்கள் பேசப்பட்டுள்ளன. நாவல்களில் இடம்பெறுகின்ற சமுதாயச் சிக்கல்கள், கோட்பாட்டு ரீதியில் விரிவான சமூக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது. இலக்கியத்தையும், சமூகவியலையும் இணைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு இலக்கியமும் சமுதாயச் சிக்கலும், ஈழத்துத் தமிழரிடையே காணப்படுகின்ற பிரதான சமுதாயச் சிக்கல்கள், சாதியம் தொடர்பான சிக்கல்கள், தொழிலாளர் தொடர்பான சமுதாயச் சிக்கல்கள், பெண்கள் தொடர்பான சமுதாயச் சிக்கல்கள் சமூகவியல் அணுகுமுறையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"ஈழத்துத் தமிழ் நாவல்களில் மீனவக் களங்கள்" (2016) எனும் நூலினூடாக, கடல் சார்ந்த பிரதேசங்களில் தனித்துவமான வாழ்க்கை வாழும் மீனவர்களின் வாழ்க்கைக் கோலங்களைக், குறிப்பிட்ட சில ஈழத்துத் தமிழ் நாவல்களை மையப்படுத்தி ஆராய்கின்றார் பேராசிரியர். குறிப்பாக, கடற்காற்று (1972), வாடைக்காற்று (1973), தோழமை என்றொரு சொல் (1973), போராளிகள் காத்திருக்கின்றனர் (1975), கட்டு மரங்கள் (1976), புதிய தலைமுறைகள் (1976), கமலினி (1977), புயலுக்குப்பின் (2005), லோமியா (2008), கரையைத் தேடும் கட்டுமரங்கள் (2009), சொடுதா (2011), அத்தாங்கு (2012), உப்புக்காற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2012), வாசாப்பு (2010) முதலிய நாவல்களைத் திறனாய்வுக்கு உட்படுத்தி, மீனவச் சமூகத்தின் வாழ்வியலைப் பேசுகிறார். "இலக்கிய இயக்கமும் ஈழத்துத் தமிழ்க் கவிதையும்" (2020) எனும் நூலில், இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் ஈழத்தில் செயற்பட்ட மொழி, இலக்கியம் சார்ந்த இயக்கங்களை மையப்படுத்தி அவற்றின் கருத்து நிலையினைப் பிரதிபலித்த கவிதைகள் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதில், மறுமலர்ச்சி தொடர்பான சிந்தனையின் தோற்றம், மறுமலர்ச்சிக் கவிதைகள், முற்போக்கு இயக்கமும் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளும், தமிழ்த்தேசிய இயக்கமும் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளும், போரின் விளைவுகளைக் கூறும் புதிய அத்தியாயம்: அலெக்ஸ் பரந்தாமனின் மரணவலிகள் கவிதைத் தொகுப்பினூடான ஒருபார்வை முதலான தலைப்புக்களில் கவிதைகளைத் திறனாய்வுக்கு உட்படுத்தி ஆராய்கிறார்.

"சிலப்பதிகாரமும் ஈழத்துக்கண்ணகி வரலாற்றுக் காப்பியங்களும்: ஒப்பாய்வு" (2014) எனும் நூல், பேராசிரியரின் ஒப்பாய்வுத் திறனைக் காட்டுகின்றது. இந்நூலில், சிலப்பதிகாரமும் ஈழத்துச் சிலம்புக் காவியங்களான சிலம்பு கூறல், கோவலனார் கதை, கண்ணகி வழக்குரை ஆகியன ஒப்பாய்வு நோக்கில் ஆராயப்பட்டுள்ளன. கதைகளின் நூல் அமைப்பு, கோவலன் – கண்ணகி பிறப்பு, மாதவியின் பிறப்பு, காற்சிலம்பு, வெடியரசன் குடியேறியமை, கோவலன் – கண்ணகி திருமணம், கோவலன் – கண்ணகி பிரிவு, மாதவியின் உறவும் பிரிவும், மாதவியின் துயரம், வயந்தமாலை தூது, மதுரைப் பயணம், கோவலன் –கண்ணகி உடலுறவு, உயிர்மீட்சி, பாண்டியனின் மரணம், பத்தினி வழிபாடு முதலிய பல விடயங்கள் ஒப்பியல் நோக்கில் ஆராயப்பட்டுள்ளன. "முற்போக்கு இலக்கியமும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும்" (2013) எனும் நூலில், 1950, 1960 களில் வெளிவந்த முற்போக்கு எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்புக்கள் திறனாய்வு செய்யப்பட்டு, அச்சிறுகதைப் படைப்புக்களில் இடம்பெற்றிருந்த முற்போக்கு அம்சங்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக செ. கணேசலிங்கன், டானியல், டொமினிக்ஜீவா, நீர்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையன், செ. யோகநாதன் முதலியோரின் சிறுகதைகளில் இடம்பெற்ற முற்போக்கு அம்சங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம். மேலும் "பண்டைத் தமிழர் பண்பாட்டுத் தடங்கள்" (2009) எனும் நூலின்மூலம், பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கைத் தடங்களை ஆராய்கின்றார். குறிப்பாக, தமிழர் பண்பாட்டின் அடிப்படைகள், மனித சமுதாய வளர்ச்சி, வணிக எழுச்சி, நடுகல் வழிபாடு, கற்பு நெறி உருவாக்கம். தாய்த்தெய்வ வழிபாடு, திருமணப்பண்பாடு, புறநானூற்றுப்போர் முதலிய பல விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வில் பழந்தமிழ் இலக்கியங்கள் திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம்.

இவர் இரசனைமுறை, ஒப்பியல், ஒப்பாய்வு, மொழியியல், நாட்டாரியல், எடுத்துரைப்பியல், பண்பாட்டியல், வரலாற்றுமுறைத் திறனாய்வு, நவீனத்துவம், காலனித்துவம், பெண்ணியம் முதலான நோக்குநிலைகளில் ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளமை அவதானத்துக்குரியது. எடுத்துக்காட்டாக, "நடையியல் நோக்கில் நிலக்கிளி — கட்டாறு ஒப்பாய்வு" (சிந்தனை, மார்ச், 1994), "செங்கைஆழியானின் நாவல்களின் மொழி பற்றிய சில குறிப்புக்கள்" (சிந்தனை, நவம்பர், 1994), "திருவாசகத்தில் மொழிநடைஉத்தி" (2016), "திருவாசகத்தில் வெளியீட்டுநிலை உத்தி" (2016) முதலாவை இவரது மொழியியல் ரீதியான கட்டுரைகளில் சிலவாகும். அதுமட்டுமன்றி நவீன இலக்கியங்களைத் திறனாய்வுக்கு உட்படுத்தி விமர்சிக்கும் தன்மையைப் பேராசிரியரின் கட்டுரைகளில் காணமுடியும். நாவல், சிறுகதை, கவிதை முதலிய நவீன இலக்கியங்களின்வழி தன் விமர்சனத்தை முன்வைத்து சமூகம், அரசியல், வரலாறு, பண்பாடு முதலிய விடயங்களை ஆராய்ந்துள்ளார். உதாரணங்களாக, "கற்பு நெறியின் மதிப்பு மாற்றம் — ஈழத்துத் தமிழ் நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு" (1999), "சமகால ஈழத்துக் கவிதைகள் உணர்த்தும் தமிழர் வாழ்வு" (1999), "ஈழத்துப் புனைகதைகள் பற்றிய ஆய்வு முயற்சிகள்" (சிந்தனை, மார்ச்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000), "வன்னிப்பிரதேச நாவல்களில் மண்வாசனை" (2003), "டானியலின் படைப்புக்களில் நடை நயம்" (சிந்தனை, மார்ச், 2004), "புலம்பெயர்ந்தோர் புனைகதைகள் புலப்படுத்தும் பண்பாட்டுச் சிக்கல்கள்" (சிந்தனை, நவம்பர், 2004), "பாலமனோகரனின் நிலக்கிளியில் வன்னியின் மண்வாசனை" (2004), "ஈழத்தில் தமிழ் நாவல் தோற்றமும் தொடர்ச்சியும்" (2005), "ஈழத்துத் தமிழ் நாவல்களில் சாதியும் மதமும்" (2006), "நீண்ட பயணம் நாவல் புலப்படுத்தும் சமுதாயப் பிரச்சினைகள்" (2009), "ஈழத்துத் தமிழ்ப் புனைகதைகளின் போக்கு — ஓர் அறிமுகம்" (2011), "வன்னிப்பிரதேச நாவல்கள் புலப்படுத்தும் இன உறவு" (2011), "யாழ்ப்பாணத்தில் சாதியும் மதமும் – ஈழத்துத் தமிழ் நாவல்களை அடிப்படையாகக் கொண்ட தேடல்" (2014) முதலிய ஆய்வுக்கட்டுரைகளைக் குறிப்பிடலாம்.

அதுமட்டுமன்றி "வன்னியில் ஒரு புதிய மோடி — கோவலன் கூத்து" கலம், ஏப்ரல், 2004), "வன்னிப்பிரதேசக் கண்ணகி வழிபாட்டில் கோவலன் கூத்து" (2004), "நெடுநல்வாடையின் அகத்திணைச் சிக்கல்" (2013), "சிலம்புகூறல் புலப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகள்" (2014), "தமிழர் பண்பாட்டில் மேலை நாகரிகத்தின் தாக்கம்" (2014), "பெரியாழ்வாரும் மாணிக்கவாசகரும் கையாண்ட பொருளணி உத்திகள்" (2015), "தளைநீங்கிய சொற்கள் – அ. முத்துலிங்கத்தின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு" (2015), "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் மலையக மக்களின் கல்விநிலை" (2015), "ஆண்டாள் திருப்பாசுரங்களில் அகப்பொருள்மரபு" (2016), "திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் பாசுரங்கள் — ஓர் ஒப்பியல் நோக்கு" (2016) "பால்நிலையும் இலக்கியமும் — சுதாராஜின் உயிர்க்கசிவு சிறுகதைத் தொகுதியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு" (2016) முதலிய கட்டுரைகள் இவருடைய இரசனைமுறைத் திறனாய்வு, பண்பாட்டியல் நோக்கு, ஒப்பியல் நோக்கு, எடுத்துரைப்பியல் நோக்கு முதலிய அணுகுமுறைகளுக்குத் தக்க உதாரணங்களாகும். பெண்ணியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்வினைப் பேசும் விதத்தில் "சுதந்திரத்திற்குப் பிற்பட்டகால இலங்கைத்தமிழ் நாவல்களில் பெண்கள்" (2011), "செ. கணேசலிங்கனின் நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகளின் தாக்கம்" (2013), "ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்" (2014) முதலான கட்டுரைகளைப் பேராசிரியர் எழுதியுள்ளார். இன்றுவரை மரபு – நவீன இலக்கியங்களை மாணவர்களுக்குக் கற்பித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இவரது இலக்கியத் திறனாய்வுப் பண்புகள், மரபு மற்றும் நவீன சிந்தனைத் தளங்களை மையப்படுத்திய இருவகையான செல்நெறிகளைக் கொண்டமைந்தன. இருவிதமான இலக்கியப் பரிச்சயங்களும் இவருக்கு நிறையவே இருப்பதால், பழைய காலத் தமிழ் இலக்கியங்களைத் திறனாய்வு செய்யும்போது இரசனைமுறை, அறிவியல்முறை முதலிய அணுகுமுறைகளையும், நவீன இலக்கியங்களான சிறுகதை, நாவல், கவிதை பற்றித் திறனாய்வு செய்யும்போது, சமகாலத் திறனாய்வுச் சிந்தனைகளை உள்வாங்கியும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தி உள்ளார். ஆக்க இலக்கியங்களில் அதிக கவனம் செலுத்தாவிட்டாலும், இலக்கிய ஆய்வுகளிலும், புதிய கோணங்களிலும் படைப்பு இலக்கியங்களை நோக்குவதில் இவரது பாணி தனித்துவமானது எனலாம்.

### 3.10.2. விரிவுரையாளர் க. அருந்தாகரன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் இருபது வருடங்களுக்கும் மேலாகத் தமிழிலக்கிய விமர்சனத்தை ஒரு பாடமாக மாணவர்களுக்குக் கற்பித்து வருபவர். கா. சிவத்தம்பியின் மாணவரான இவர், சிவத்தம்பியின் பார்வையிலேயே தன் விமர்சனத்தை முன்வைப்பவர்.

- "தொல்காப்பியமும் தமிழ் அழகியலும்: விமர்சன நோக்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "இலக்கணமும் சமூகப்படிநிலையாக்கமும்: தொல்காப்பிய இலக்கணப்பிரதியை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு"
- "பால்நிலையும் இலக்கணமும்: தொல்காப்பியம் கட்டமைக்கும் பெண் பற்றிய படிமம்" (டிசம்பர், 2012)
- "இலக்கணமும் பால்நிலை வேறுபாடும்: தொல்காப்பிய இலக்கண ஆக்கத்தை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு" (2020)

முதலியவை இவருடைய முக்கியமான இலக்கணம்சார் விமர்சனக் கட்டுரைகளாக அவதானிப்புப் பெற்றுள்ளன. "இலக்கணமும் பால்நிலை வேறுபாடும்: தொல்காப்பிய இலக்கண ஆக்கத்தை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு" (2020) எனும் இவ்வாய்வுக் கட்டுரையானது, தொல்காப்பிய இலக்கண ஆக்கத்தினூடாக வெளிப்படும் பால்நிலை வேறுபாடு, பால்நிலை இடைவெளி குறித்து ஆராய்கின்றது. குறிப்பாகச் சொல்லப்போனால் "ஆண் முதன்மை பெற்ற தமிழ்ச் சமூகத்தின், குறித்த ஒரு காலச்சூழலின் வெளிப்பாடாகத் தொல்காப்பியம் அமைவதால், அதில் இடம்பெறும் பெண் பற்றிய கருத்துக்கள், விழுமியங்கள், மதிப்பீடுகள், தன்மைகள் பெரும்பாலும் அவற்றின் இயல்புகளோடும், உயிரியல் மற்றும் உளவியல் சாத்தியங்களோடும் விளக்கப்படவில்லை. மாறாக, ஆண்களின் உளவியல் மற்றும் அதிகார அரசியல் அபிலாசைகளின் வெளிப்பாடுகளாகவே, அவை முன்வைக்கப்பட்டுள்ளன. இவை யாவற்றுக்கும் மேலாகத் தந்தைவழிச் சமூகத்தின் பெண்கள் மீதான பாலியல் ரீதியான ஒடுக்குமுறைகளையும் தொல்காப்பியம் ஒழுங்குபடுத்தியுள்ளது. இச்சிந்தனை பெண்கள் பற்றிய பார்வையில் இன்றளவும் கண்ணுக்குப் புலனாகாத வகையில் செல்வாக்குச் செலுத்தி வருவதோடு, ஆண் – பெண் பற்றிய ஆரோக்கியமான புரிதலைக் கட்டியெழுப்பவும் தடையாக அமைகின்றது" என்ற கருத்தினை இக்கட்டுரையின்மூலம் முன்வைக்கிறார் விமர்சகர் அருந்தாகரன்.

மேலும், "இலக்கணமும் சமூகப்படிநிலையாக்கமும்" எனும் கட்டுரையில், சமூக அதிகாரப் படிநிலைகளைக் கட்டமைப்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணப் பிரதிகள் எவ்வாறு பங்காற்றியுள்ளன என்பதைத் தொல்காப்பிய இலக்கணப் பிரதியினை அடிப்படையாகக்கொண்டு விளக்குகின்றார். 'இலக்கணப் பிரதியாக்கம் என்பது மொழியின் ஆக்கக்கூறுகள் பொருள்தரும் வகையில் ஒன்றோடொன்று இணைவது பற்றிய விதிமுறை என்பதற்கும் அப்பால், சமூக வேறுபாடுகளையும், அதிகார அடுக்கமைவுகளையும் கட்டமைக்கும் நுண்ணரசியல் செயற்பாடாகவும் அமைந்திருக்கின்றது' என்ற கருத்தினை இக்கட்டுரைமூலம் அருந்தாகரன் முன்வைத்துள்ளமையைக் காணமுடிகின்றது. "தொல்காப்பியமும் தமிழ் அழகியலும்: விமர்சன நோக்கு" எனும் கட்டுரைமூலம், தொல்காப்பியத்தை தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியில் சூழமைவுப்படுத்தி, அது முன்வைக்கும் இலக்கிய அழகியல் கோட்பாட்டு அடிப்படைகளை இனங்காண்பதுடன், தமிழ் அழகியல் மற்றும் மதிப்பீட்டுக் கொள்கைகளை உருவாக்குவதற்கான அடிப்படைகள் பற்றியும் பேசுகிறார்.

இவர் இலக்கியங்களின் வழி சமூகத்தைப் பார்க்கும் மனிதர். "இலக்கியம் என்பது சமூக உற்பத்தி. சமூக விமர்சனம். சமூகத்திலிருந்து பிறந்து சமூகத்தையே உற்பவிக்கிறது" என்ற சிவத்தம்பியின் நோக்கின் வழியே இலக்கியங்களை அணுகுபவர். அதனைவைத்துப் பார்க்கும்போது, விரிவுரையாளர் அருந்தாகரன் சிவத்தம்பியின் விமர்சனப் பாங்கினைப் பின்பற்றுபவராகத் தெரிகின்றார். எந்தவொரு படைப்பாளியும் சமூகத்தைவிட்டுப் பிரிந்துநின்று எந்தவொரு படைப்பையும் படைத்துவிடமுடியாது என்ற சிந்தனையின் வழி, எந்தப் படைப்பையும் இலக்கியம் தோன்றிய அக்காலச் சமூகப் பின்புலங்களோடு பார்க்கும் பார்வை இவரிடம் இருக்கின்றது. இவர் உரை இலக்கியத்தைத் திறனாய்வு இல்லை என்பார். ஏனெனில் அதில் நவீன விமர்சனச் சிந்தனைகளுக்கு ஏற்பப் பகுப்பாய்வும், கோட்பாட்டுநிலைச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதில்லை என்பார். அதுமட்டுமன்றித் தரக்கணிப்பு செய்யும் மதிப்பீட்டுமுறையும் உரையில் இல்லாததால் உரையை நவீன திறனாய்வு என்று கூறமுடியாது என்ற கருத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையவர். படைப்பிலக்கியங்கள் பற்றிப் பேசுகின்றபோது, "ஒரு படைப்பாளி தன்னுடைய படைப்பின்மூலம் தன்னுடைய உள்ளத்தினை வெளிப்படுத்துகிறான். வாசகன் அப்படைப்பின்மூலம் படைப்பாளியின் படைப்புள்ளத்தினைப் புரிவதுடன், தனது உணர்வுகளையும் அதனோடு சங்கமிக்கச் செய்கிறான்" என்று அடிக்கடி கூறுவார். மேலும், "ஒரு படைப்பை வாசகன் நுகர்ந்த பின், அப்படைப்பு நல்ல படைப்பு என்பதை உணரும்போது, 'நெஞ்சுக்குள் ஏதோ ஏமஞம என்று செய்வதுபோல்' இருக்கும்" என்று கூறுவார். வாசகனைத் தன்னிலை இழக்கச்செய்யும் திறன் ஒரு நல்ல படைப்புக்கு இருக்கிறது என்பார்.

ஈழத்தவர்களின் தமிழிலக்கியத் திறனாய்வுப் பங்களிப்புக்கள் பற்றிப்பேசுகின்றபோது, "மேற்குலகத் தொடர்பினால் தமிழில் வந்து புகுந்த ஒரு புலமைத்துறையாகவே இலக்கியத் திறனாய்வு உள்ளது என்றும், ஈழத்துத் தமிழ் இலக்கியத் திறனாய்வு பற்றிய முழுமையான ஆய்வுகள் இல்லாமல் தமிழில் நவீன திறனாய்வு பற்றிய ஆய்வு முழுமை பெறாது என்றும் கூறுவார். அத்துடன் மார்க்சியம், மொழியியல், அமைப்பியல், பெண்ணியம் முதலான மேலைத்தேயக் கலையிலக்கியக் கோட்பாடுகளின் பின்னணியில் விமர்சனத்தை வளர்த்தெடுத்ததில் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, சோ.கிருஷ்ணராசா, எம்.ஏ.நு:.மான், சிவசேகரம், நா.சுப்பிரமணியன், சித்திரலேகா மௌனகுரு, ஏ.ஜே.கனகரட்னா முதலியோருக்குப் பங்குண்டு என்றும், கலையிலக்கிய ஆக்கங்களின் வாசிப்பு முறையை வளர்த்தெடுத்ததில் மு.தளையசிங்கம், எஸ்.பொன்னுத்துரை, அ.யேசுராசா, மு.பொன்னம்பலம், கே.ரஞ்சகுமார், உமாவரதராஜன், உ.சேரன், அ.அகிலன், எஸ்.சிவகுமாரன் முதலியோருக்கும் பங்குண்டு" என்ற கருத்தினை முன்வைப்பார். விளக்கமுறை, ஒப்பீடு, இரசனை, மார்க்சியம், வரலாற்றியல், உளவியல், மொழியியல், நவீனத்துவம், காலனித்துவம், தலித்தியம், பெண்ணியம் முதலிய நோக்குநிலைகளில் தன்னுடைய விமர்சனப்பார்வையை முன்வைப்பதை அவரின் ஆய்வுக்கட்டுரைகளின்வழி அவதானிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "ஈழத்துத் தமிழ் நவீன கவிதையின் தத்துவமும் தனித்துவமும், தா. இராமலிங்கத்தின் கவிதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு" (ஜீன், 2012)
- "முல்லைத்தீவு மாவட்ட நாட்டார் கலைகள்" (2012)
- "மொழியும் இலக்கியமும்: விமர்சன நோக்கு" (2013)
- "மதமும் இலக்கியமும்: யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலம்"
- "பண்பாடும் அபிவிருத்தியும்: பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் பண்பாட்டின் வகிபங்கு குறித்த விமர்சன நோக்கு"
- "பண்பாட்டு அடையாள உருவாக்கமும் கல்வியும்: தமிழர் பண்பாட்டு அடையாளத்தை உருவாக்குவதில் கல்வியின் பங்கு" (மே, 2015)
- "வன்னிப் பிரதேச நாட்டார் வழக்காற்றியலைச் சூழமைவுப்படுத்துதல்: நடைமுறைகளும் பிரச்சினைகளும்" (2016)
- "வன்னிப் பிரதேசக் கோவலன் கூத்தின் நிலைமாற்றம்: நம்பிக்கை, பிரதி, காண்பியம் மற்றும் ஆற்றுகை மீதான வாசிப்பு" (2016 )
- "கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் பயின்றுவரும் கதைப்பாடல்கள்: நாட்டுப்புறவியல் நோக்கு." (கார்த்திகை 2016)
- "வன்னிப் பிரதேசத்தில் தோன்றிய பள்ளு இலக்கியங்கள்: சமூகவியல் நோக்கு" (கார்த்திகை, 2016)
- "மொழியும் இலக்கியமும்: எஸ். பொன்னுத்துரையின் 'வீ' சிறுகதைத் தொகுதியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு" (ஜீலை, 2016)
- "உள சமூக ஆற்றுப்படுத்துகைகளாகக் கவிதைகள்: அகிலன் மற்றும் நிலாந்தன் ஆகியோரது கவிதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு" (2016)
- "வன்னிப் பிரதேசத்தில் நாட்டுப்புற நடனங்கள்: இருப்புக்களும் சவால்களும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "சமூக முரண்பாட்டுக்கான அடிப்படையாக பண்பாடு: தமிழர் பண்பாட்டு அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்ட ஆய்வு" (2017)
- "பண்பாட்டு உருவாக்கமும் இலக்கியமும்: விவாதத்துக்கான முன்னுரை" (2017)
- "நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர்கொள்வதில் கலை இலக்கியங்களின் வகிபங்கு: இலக்கியத்தை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு"
- "அரங்க ஆற்றுகையாக பள்ளு: பண்டிப்பள்ளினை அடிப்படையாகக்கொண்ட வாசிப்பு"
- "வன்னிப் பிரதேசத்தில் தொட்டுணரமுடியாத பண்பாட்டு மரபுரிமைகளைப் பேணவேண்டியதன் அவசியமும் பொறிமுறையும்: பறைமேள ஆற்றுகையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு" (2018)
- "தமிழில் அரசு, அரசன், அரச முறை மற்றும் இராஜதந்திரம் பற்றிய சிந்தனைகள்: திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு" (2018)
- "திருக்குறளில் கல்வியறிவு போற்றுதல்" (2019)

முதலிய சில கட்டுரைகளும் அருந்தாகரனின் விமர்சனப்போக்கினை அடையாளப்படுத்துபவையாகும். "நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர்கொள்வதில் கலை இலக்கியங்களின் வகிபங்கு: இலக்கியத்தை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு" (2021) என்ற ஆய்வுக்கட்டுரையின்மூலம், மனிதன் தனது வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவாலான சூழல்களை எதிர்கொள்வதற்கும், அவற்றைக் கடந்து செல்வதற்குமான அடிப்படைகளாக, எவ்வாறு கலைகள் அமைகின்றன என்பதை, இலக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு ஆராய்கிறார். சமூக உருவாக்கத்திலும், அதன் இயக்கப்போக்கிலும், கலை இலக்கியங்கள் பிரதானமாக அமைகின்றன என்பதை இனங்காண்பதையும், தனிமனித மற்றும் சமூக மீண்டெழுகைக்கான சாத்தியங்களாக அவற்றை முன்னிறுத்துவதையும், இவ்வாய்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்களாகக்கொண்டு, இலக்கியத்தைச் 'சமுக உளவியல்' மற்றும் 'அழகியல்' கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு ஆராய்ந்துள்ளமையை இங்கு காணமுடிகின்றது.

மேலும், "வன்னிப் பிரதேசத்தில் நாட்டுப்புற நடனங்கள்: இருப்புக்களும் சவால்களும்" என்ற கட்டுரைமூலம், வன்னிப் பிரதேசத்தில் பாரம்பரியமாக ஆற்றுகை செய்யப்பட்டுவரும் தொட்டுணராப் பண்பாட்டு மரபுரிமைகளுள், ஒருவகையாக விளங்கும் நாட்டுப்புற நடன ஆற்றுகைகள் பற்றியும், அவற்றின் சமூக, அழகியல் மற்றும் பண்பாட்டு முக்கியத்துவம் பற்றியும், வன்னிச் சமூகப் பண்பாட்டு உருவாக்கத்திலும் அதன் மீள் எழுச்சியிலும் அதன் வகிபங்கு எத்தகையது குறித்தும், மாறிவரும் உலகச்சூழலில் இவை ஆற்றக்கூடிய பங்களிப்புக் குறித்தும், உடனிகழ்காலத்தில் அவை அடைந்துள்ள நிலைமாற்றம் பற்றியும் விமர்சனக் கண்ணோட்டத்தில் ஆராய்கிறார்.

"உள சமூக ஆற்றுப்படுத்துகைகளாகக் கவிதைகள்: அகிலன் மற்றும் நிலாந்தன் ஆகியோரது கவிதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு" (2016) எனும் கட்டுரை, அருந்தாகரனின் கவிதை விமர்சனப்பாங்கிற்குத் தக்க சான்றாகும். இவ்வாய்வானது கவிதை என்னும் கலைவடிவம் எவ்வாறு கூட்டு மனக்காயங்களை – உள சமூக நெருக்கீடுகளைக் கடந்து செல்வதற்கான கலையூடகமாக தொழிற்படுகின்றது என்பது பற்றி ஆராய்கின்றது. இதற்கு அகிலனின் "பதுங்குகுழி நாட்கள்", "சரமகவிகள்" மற்றும் நிலாந்தனின் "யுகபுராணம்" ஆகிய கவிதைப் பிரதிகள் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன. கவிதை, அடிப்படையில் தனித்துவமான மன உணர்வெளிச்சிகளின் வெளிப்பாடாகவே அமையும் கலைவடிவமாதலால், தனிமனித மற்றும் சமூக உள நெருக்கீடுகளையும், கூட்டு மனக்காயங்களையும், துயரங்களையும் வெளிப்படுத்தவும், பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பான கலை ஊடகமாகவும், அவற்றைக் கடந்து செல்வதற்கான வழியாகவும் அமைந்து விடுகின்றது. உளவியல் மற்றும் அழகியல் முறைகளினூடாக அணுகி, அவை யுத்தத்தையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் குரூரத்தையும், அதை உந்தித்தள்ளிய கருத்து நிலைகளையும் எவ்வாறு கேள்விக்குள்ளாக்குகின்றன? அத்துயரங்களிலிருந்தும் காயங்களிலிருந்தும் எவ்வாறு கடந்து செல்ல முயல்கின்றன? வாழ்க்கை பற்றியும், எதிர்காலம் பற்றியதுமான நம்பிக்கையினை எவ்வாறு கட்டி எழுப்ப முயல்கின்றன? இவையாவற்றையும் அவை எவ்வாறு உளவியல் மற்றும் அழகியல் தன்மைகளினூடாக வெளிப்படுத்துகின்றன என்பது பற்றி ஆராய்கின்றது. அதற்கான மொழியுடலை எவ்வாறு கட்டுகின்றன என்பது பற்றியும் இங்கு விரிவுரையாளர் க. அருந்தாகரன் பேசியுள்ளார்.

சிறந்த நாட்டாரியல் வழக்காற்று, அரங்க ஆற்றுகைக்கலைஞரான இவர் அக்கலைகள் பற்றிய கூர்ந்த நோக்கும், விசாலமான பார்வையும் உடையவர். அதேவேளை, பின் நவீனத்துவச் சிந்தனைகளுக்கு அமைவாகப் பெரும்பான்மை தீர்மானிக்கும் உன்னதங்களில் அதிக கவனம் செலுத்தாது, ஓரங்கட்டப்படும் அல்லது புறக்கணிக்கப்படும் விடயங்களில் நுண்ணிய பார்வையைச் செலுத்துபவர். இவரால் தமிழிலக்கியத் திறனாய்வு பற்றிய முழுமையான நூல் ஒன்று எதிர் காலத்தில் வெளிவருமாயின், அது கல்விச் சமூகத்திற்குப் பயனுடையதாக அமையும் எனக் கருதலாம்.

### 3.10.3 ஏனைய பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும்

சமகாலத்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் எம். நதீரா அவர்கள், மாணவர்களுக்குத் தமிழ் இலக்கியத் திறனாய்வை ஒரு பாடமாகக் கற்பித்து வருவதுடன் விமர்சன ரீதியில் பல ஆய்வுக்கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார் - எழுதியும் வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஶ்ரீ.பிரசாந்தன் மற்றும் விரிவுரையாளர் செ. சுதர்சன், அவர்களின் பங்களிப்பும் முக்கியமானது. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா அவர்கள், திறனாய்வை ஒரு பாடமாக மாணவர்களுக்குக் கற்பித்து வருகின்றார். அதுமட்டுமன்றி படைப்பிலக்கியங்கள் மீதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனங்களையும் காத்திரமான முறையில் மேற்கொண்டு வருவதையும் சமகாலத்தில் அவதானிக்க முடிகின்றது.

### 3.11. முடிவுரை

மேலைத்தேயக் கல்வி முறையினூடாகவும், மேனாட்டு இலக்கியப் பரிச்சயங்களிலும் ஏற்பட்ட நவீன இலக்கியங்களின் தோற்றுவாயோடு, தமிழிலும் விமர்சனம் அல்லது திறனாய்வு வளர்ச்சிகாணத் தொடங்கியது. ஆயினும் பண்டைத் தமிழ் இலக்கண, இலக்கியங்களின் உரையாசிரியர் மரபினால் வளர்த்தெடுக்கப்பட்ட இரசனைத் திறனாய்வு முறையொன்று அறிவியல்சார் அடிப்படையில் தமிழர்களிடம் ஏற்கனவே இருந்தமையைப் புறக்கணித்துவிட முடியாது. இவற்றின் அடிப்படையில் ஈழத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் வளர்ச்சிப்போக்கு ஆராயப்பட்டு, ஈழத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் தொடக்கநிலை, நவீனநிலை, ஈழத்துத் தமிழிலக்கியத் திறனாய்வு வளர்ச்சிக்குப் பங்காற்றியோரின் பங்களிப்புக்கள் பற்றியும், சற்று விரிவான முறையில் எடுத்துக்கூற இவ்வாய்வு முயற்சித்துள்ளது.

இன்றைய தமிழுலகில் இலக்கியத் திறனாய்வு முயற்சிகள் காத்திரமானதாக இல்லையென்றே கூறவேண்டும். மிகக்குறைந்தளவு எண்ணிக்கையிலேயே நடுநிலையான ஆய்வுகள் வெளிவருகின்றன. பெரும்பாலும் சார்பு நிலைத்தன்மையே காணக்கிடைக்கின்றது. ஆழ்ந்தநோக்கு அற்றதாய், மேலோட்டமான பார்வையே தென்படுகின்றது. 'கூர்மையான கத்தியைக்கொண்டு காய்கறிகளும் நறுக்கலாம், கழுத்தையும் வெட்டலாம்' என்பதுபோலக் கைதேர்ந்த இலக்கியத் திறனாய்வாளன் ஒருவன், தனது எழுத்துக்கள்பற்றி மிக அவதானமாக இருத்தல் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, இலக்கியத் திறனாய்வு என்பதற்கு வரைவிலக்கணம் கூறுவதோ, வரையறைகள் செய்வதோ முடியாது என்பதையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும். தமிழிலக்கியத் திறனாய்வு முயற்சிகள் காலவோட்டத்தில் இலங்கை, தமிழ்நாடு, புலம்பெயர் தமிழர் தேசங்கள் உட்பட உலகெங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியமானதாக முன்னெடுக்கப்படவேண்டியது கட்டாயமாகும். நடுநின்று எதையும் நோக்கும் மனப்பாங்குடன், திறனாய்வாளர்கள் செயற்பட வேண்டும். சிலரையோ, அல்லது சிலரது படைப்பையோ உயர்த்திவிடும் நோக்கத்துடன் அல்லது தாழ்த்திவிடும் நோக்கத்துடன் செயற்படக்கூடாது. தனது திறனாய்வு அனுபவம் கற்றுத்தந்த அடிப்படைப்பாடங்களைக் கவனத்திற் கொண்டு படைப்பையும், படைப்பாளியையும் நுண்ணிதாக நோக்கித் தமது கருத்தை வெளிப்படுத்த வேண்டும்.

இலக்கியம் சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தும்போது, சமூகப்பயன்பாடு, இலக்கியப் பொதுமை, திறனாய்வு அறிஞர்கள் காட்டிய வழிமுறைமை ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பழந்தமிழ் இலக்கியங்களையும், நவீன இலக்கியங்களையும் சரியாகப் புரிந்துகொண்டு நவீன இலக்கியத் திறனாய்வு முறைகளைப் பொருத்தமாக உள்வாங்கி, அவற்றின் கருத்துப் பேதங்களில் அலைக்கழிக்கப்படாது, அடிப்படையான தமிழிலக்கியச் செல்நெறிகளை விளங்கிக்கொண்டு, திறனாய்வு முயற்சிகளை மேற்கொள்வதால், தமிழ் இலக்கிய உலகம் பயனடையும். தமிழில் திறனாய்வு என்பது பாடசாலை மட்டத்திலிருந்து உயர் கல்வித்துறைகள்வரை ஒழுங்கான முறையில் வளர்க்கப்பட வேண்டும். அதேவேளை, படைப்பிலக்கியத் துறையிலிருந்து இன்னொரு புறமாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். காலமாற்றத்திற்குத் தக்கதாகக் கருத்துக்களும் முன்வைக்கப்பட வேண்டும். எப்படிப்பட்ட விதத்திலும் நவீனத்துவத்தின் பாய்ச்சல்கள் தமிழிலக்கியத் துறையினுள் பரவி இருந்தாலும், அடிப்படையான பண்பாட்டு வேர்களை அசைக்காத விதத்தில் எமது தமிழிலக்கியத் திறனாய்வு முயற்சிகள் உருவாகுவதே காலத்தின் தேவையுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

கைலாசபதி. க., (1972), இலக்கியமும் திறனாய்வும், வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.

கைலாசபதி. க., (1980, மீள் பதிப்பு 2002), திறனாய்வுப் பிரச்சினைகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கோதண்டராமன். ப., (1978), இலக்கியமும் திறனாய்வும், மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

சண்முகதாஸ். அ., (1998), இலங்கைப் பேராசிரியர்களின் தமிழியற் பணிகள், பூபாலசிங்கம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

சிவகுமாரன். கே.எஸ்., (1989), கலை இலக்கியத் திறனாய்வு, தமிழ்மன்றம், கண்டி.

சிவசேகரம். சி., (1995), விமர்சனங்கள், தேசியக் கலை இலக்கியப் பேரவை – சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை.

சிவத்தம்பி. கா., (2001), விமர்சனச் சிந்தனைகள், மக்கள் வெளியீடு, சென்னை.

சிவகுமாரன். கே.எஸ்., (2013), திறனாய்வு, மீரா பதிப்பகம், கொழும்பு.

சுப்பிரமணிய அய்யர். ஏ.வி., (1959), தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, அமுத நிலையம், சென்னை.

சுப்பிரமணியன். நா., (1999), தமிழ் ஆய்வியலில் கலாநிதி க. கைலாசபதி, சவுத்விஷன் வெளியீடு, சென்னை.

செல்வநாயகம்.வி., (1951), தமிழ் இலக்கிய வரலாறு, ஸ்ரீலங்கா வெளியீடு, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழவன், (தொகுப்பாசிரியர்: பாலா, 1979), தொ.மு.சி.ரகுநாதன், அன்னம் பி.லிட், சிவகங்கை.

திருநாவுக்கரசு.செ., (2021), தமிழ் வளர்த்த தீவகச் சான்றோர்கள், விஜயலட்சுமி திருநாவுக்கரசு வெளியீடு, நல்லூர்.

திருநாவுக்கரசு. செ., (2012), எண்ணங்களும் எழுத்துக்களும், விஜயலட்சுமி திருநாவுக்கரசு வெளியீடு, நல்லூர்.

துரை மனோகரன், (1997), இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி, கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம்.

நடராசன். தி.சு., (2003), திறனாய்வுக் கலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை.

பஞ்சாங்கம். க., (2004), தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, அகரம் வெளியீடு, தஞ்சாவூர்.

பார்த்தசாரதி. நா., (1985), திறனாய்வுச் செல்வம், நவபாரதி பிரசுரம், சென்னை.

மதியழகன். ம., (2009), தமிழாய்வு – திறனாய்வு வரலாறு, மித்ர ஆட்ஸ், சென்னை.

ஜெயராசா. சபா., (2008), இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகள், சேமமடு பதிப்பகம், கொழும்பு.

ஜெயராசா. சபா., (2012), தமிழியலும் திறனாய்வுக் கலையும், சேமமடு பதிப்பகம், கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அணிந்துரையிலிருந்து.....

யேர்மனி - தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் மூலம் வெளியீடு காண்கின்ற, முருகையா சதீஸ் அவர்களின் "தமிழில் இலக்கியத் திறனாய்வும் ஈழத்தில் அதன் வளர்ச்சிப் போக்கும்" எனும் நூலுக்கு, அணிந்துரை எழுதுவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றேன். இந்நூலிலே முக்கியமான இரு சிறப்பியல்புகள் காணப்படுவதை அவதானிக்கலாம். 'தமிழகத்துத் தமிழிலக்கியத் திறனாய்வின் வளர்ச்சிப்போக்கு', மற்றும், 'ஈழத்துத் தமிழ் இலக்கியத் திறனாய்வின் வளர்ச்சிப்போக்கு' என்பவையே அவையாகும். தமிழகத்திலும் - ஈழத்திலும் நடந்த தமிழ் இலக்கியத் திறனாய்வு முயற்சிகளை, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஒருமித்துப் பார்க்கும் பார்வையாக இந்நூல் அமைந்துள்ளது. இன்றைய காலங்களில் ஒரு சிலரைத் தவிர, திறனாய்வுத்துறை சார்ந்து எழுதுவதற்கு யாரும் முன்வருவதில்லை. இச்சூழலில், வளர்ந்துவரும் ஆய்வாளர் முருகையா சதீஸ் அவர்கள், தனக்கு எட்டிய தரவுகளைக்கொண்டு, அன்று தொடக்கம்-இன்றுவரைக்குமான 'தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றை' இந்நூலின்மூலம் கட்டமைக்க முயன்றுள்ளார். இவரது இம்முயற்சிக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்,
தமிழ்த்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

9 786249 923225

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org